வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு வார மலர்

Eelanadu ஈழநாடு




மாருதி Money Exchange (Pvt) Ltd.

இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06

T.P: 011 236 2086

இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

T.P: 021 221 4433

076 284 4443

MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்

Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்

WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 04.12.2022 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 361 | பக்கங்கள் : 20



04 தேர்தலுக்கு தயாராகும் ஐக்கிய தேசியக் கட்சி!



08 பொருளாதார நெருக்கடி கல்வித்துறைக்கு ஏற்படுத்தும் பாதிப்புகள்!



11 சமஷ்டி பேசத் தயாராகிறது கூட்டமைப்பு நாடகம் என்கிறது காங்கிரஸ்!



16 எரித்திரியா: சுதந்திரத்தின் பின்னரான சர்வாதிகார ஆட்சி!



# நிபுணர்கள் கூறுவதை மாத்திரம் கேட்காமல் மக்களின் கருத்தையும் கவனத்தில் கொள்க!

## இலங்கைக்கு ஆலோசனை கூறுகிறார் பொருளியல் நிபுணர் தேவராஜன்

கொழும்பு, டிசெ. 04

நிபுணர்கள் கூறுவதை மாத்திரம் கவனத்திற்கொள்ளாமல், மக்கள் கூறுபவற்றுக்கும் இலங்கை கூடுதலான அளவுக்கு செவிசாய்க்கவேண்டும் என்று கூறியுள்ள மூத்த பொருளியல் நிபுணரான பேராசிரியர் சாந்தா தேவராஜன், குடிமக்களின் கோரிக்கைகளைக் கவனத்தில் எடுக்காமல் தேசிய பொருளாதாரத்தின் உண்மையான பிரச்னைகள் ஒருபோதும் தீர்க்கப்படப்போவதில்லை என்று எச்சரிக்கை செய்துள்ளார்.

பொறியியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட " பொருளாதார மீட்சிக்கான வழிவரைபடம் " தொடர்பான சர்வதேச மகாநாடொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே

19

# இலங்கையின் கடனுக்கு 10 வருட கால அவகாசம்

## முன்மொழிந்தது பரிஸ் சொசைற்றி

கொழும்பு, டிசெம்பர் 04

இலங்கையின் நிதி நெருக்கடிக்கு தீர்வாக, இலங்கையின் கடனுக்கு 10 வருட கால அவகாசம் வழங்கவும், பின்னர் 15 வருட காலத்துக்கு இலங்கையின் கடனை மறுசீரமைக்கவும் பரிஸ் சொசைற்றி முன்மொழிந்துள்ளதாக "ஹிந்துஸ்தான் ரைம்ஸ்" நாளேடு தெரிவித்துள்ளது.

19

# ரோஹண விஜேவீரவின் மகனின் '2ஆம் தலைமுறை' கட்சி உதயம்

கொழும்பு, டிசெ. 04

ஜே.வி.பியின் நிறுவுநர் ரோஹண விஜேவீரவின் மகன் உவிது விஜேவீர புதிய அரசியல் கட்சியை உருவாக்கியுள்ளார்.

அக்கட்சியை தேர்தல் ஆணையத்தில் "இரண்

19

# வட்டி விகிதத்தை குறைக்கும்பட்சத்தில் பணவீக்கத்தை கட்டுப்படுத்த முடியாது!

## மத்திய வங்கி ஆளுநர் கூறுகிறார்

கொழும்பு, டிசெ. 04

அரசாங்க செலவீனங்களை மாத்திரம் கணக்கில் கொள்ளவேண்டிய வட்டி விகிதத்தை குறைக்கும் பட்சத்தில் நாட்டில் பணவீக்கம் கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்படும் என்று மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற

19

# உணவுப் பஞ்சத்தின் தாக்கம் சில நாட்களில் மோசமாகும்

## தமிழரசின் செயலர் கூறுகிறார்

வவுனியா, டிசெ. 04

உணவுப் பஞ்சத்தின் விளைவை இன்னும் சில காலத்தில் சுகாதார குறிகாட்டிகளில் அவதானிக்கலாம் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் வைத்திய கலாநிதி ப. சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியா, பூந்

19

# சம்பிரதாயத்துக்கு அமையவே சந்திரிக்கா மீது நடவடிக்கை!

## கூறுகிறது சுதந்திரக் கட்சி

கொழும்பு, டிசெ. 04

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுக்கு எதிராக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சம்பிரதாயத்திற்கு அமையவே நடவடிக்கை எடுத்துள்ளதாக கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் பேராசிரியர் ரோஹன லக்ஷ்மன் பியதாஸ

19

# கொக்குவிலில் வாள்வெட்டு: இரு இளைஞர்கள் படுகாயம்!

யாழ்ப்பாணம், டிசெ. 04

கொக்குவில் பகுதியில் நேற்று இரவு இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில் இரண்டு இளைஞர்கள் படுகாயமடைந்தனர்.

தாவடி, மதுபானச்சாலைக்கு அண்மையில் இந்த வாள்வெட்டு சம்பவம் நடந்தது.

மதுபோதையில் இரு தரப்பினர் மோதிக்

19

# பாராளுமன்ற உரைகளால் எதுவும் நடக்காது வைத்தியசாலைகளுக்குச் சென்று பாருங்கள்!

## ஆறு திருமுருகன் அதிரடிக் கருத்து



யாழ்ப்பாணம், டிசெ. 04

பாராளுமன்ற உரைகளினூடாக எதனையும் பெற்றுக்கொடுக்க முடியாது. எனவே மக்கள் பிரதிநிதிகள் நோயுற்ற துன்பப்படும் மக்கள் மத்தியில் நேரில் சென்று அவர்களின் பிரச்னைகளை கேட்க வேண்டும் என தெரிவித்துள்ளார் அகில இலங்கை இந்து மாமன்ற உப தலைவர் ஆறுதிருமுருகன்.

யாழில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

19

# வடக்கு மாகாண ஆளுநர் மீது உடன் நடவடிக்கை எடுங்கள்!

## ஜனாதிபதிக்கு சீ.வீ.கே. கடிதம்

யாழ்ப்பாணம், டிசெ. 04

"வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா அரசமைப்பைத் தொடர்ந்து மீறி வருகின்றார். அவருக்கு எதிராக விரைந்து நடவடிக்கை எடுங்கள்."

-இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்த்தன ஆகியோருக்கு வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர்

19

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# முதலீட்டு திட்டங்கள் குறித்து இலங்கை - மாலைதீவு பேச்சு

கொழும்பு, டிசெ. 04

மாலைதீவு துணை ஜனா திபதி பைசல் நசீம் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவை சந்தித்தார்.

மாலைதீவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகால நட்புறவைக் கருத்திற் கொண்டு, இலங்கையின் உயர் தொழில் நுட்ப விவசாயத்துறை, கப்பல் சுற்றுலா மற்றும் உயர்தர சுற்றுலாத் துறைகளில் முதலீடு செய்யுமாறு மாலைதீவுக்கு ஜனாதிபதி விக்கிரமசிங்க வேண்டுகோள் விடுத்தார்.

காலநிலை மாற்ற பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கு இலங்கையுடன் கை கோர்க்குமாறு மாலைதீவிடம் ஜனாதிபதி கோரினார்.

இந்த பிராந்தியத்தில் அதிகரித்து வரும் போதைப்பொருள் அச்சுறுத்தல் குறித்தும் இருவரும் கலந்துரையாடியதுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போதைப் பொருள் எதிர்த்துப் போராடுவதற்கு மாலை தீவின் உதவியை நாடினார்.



ஜூலை போராட்டத்தின்போது அழிக்கப்பட்ட ஜனாதிபதியின் இல்லம் புனரமைக்கப்பட்டவுடன் மாலைதீவு ஜனாதிபதியை இலங்கைக்கு வரவழைக்க உத்தேசித்துள்ளதாகவும் ஜனாதிபதி விக்கிரமசிங்க மாலைதீவு உப ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளார். (அ)

## மின்சார கட்டணத்தை அரசு உயர்த்துவது நியாயமற்றது

கொழும்பு, டிசெ. 04



மின்சார சபை ஒகஸ்ட் 10ஆம் திகதி முதல் நவம்பர் 30ஆம் திகதி வரை 1 பில்லியன் ரூபா வருமானத்தைப் பெற்றுள்ள நிலையில், மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பது நியாயமற்றது என பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஊடக சந்திப்பின் போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மின்சார சபை சமீபத்தில் மின் கட்டணத்தை உயர்த்தியது. எரி பொருள் மற்றும் பொருட்களின் விலைகளும் உயர்ந்தன. இவ் வேளையில் மீண்டும் அதிகரித்தால் மக்களால் தாங்கிக் கொள்ள முடியாது. எனவே கட்டணத்தை அதிகரிக்க இது சரியான நேரம் அல்ல - என்றார். (அ)

## ஓய்வு பெறும் அதிகாரிகளுக்கு வாகன உரிமை மாற்றம் இல்லை

கொழும்பு, டிசெ. 04

அரச நிறுவனங்களின் ஓய்வு பெற்ற அதிகாரிகளுக்கு உத்தியோகபூர்வ வாகனங்களின் உரிமையை மாற்றுவது உடன் அமுலுக்கு வரும் வகையில் நிறுத்தப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

அரச நிறுவனங்களின் அதிகாரிகளுக்கு உத்தியோகபூர்வ வாகனங்களின் உரிமையை மாற்றுவது குறித்து பொது நிறுவனங்களுக்கான குழு கவலை தெரிவித்ததை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

அந்நிய செலாவணி நெருக்கடி காரணமாக வாகனங்களை இறக்குமதி செய்வதையும் அரசாங்கம் கட்டுப்படுத்தியுள்ளது.

இதன்படி, பல்வேறு தரப்பினரால் எழுப்பப்பட்ட கவலைகளைக் கருத்தில் கொண்டு, அரச வங்கிகள் மற்றும் அரசுக்கு சொந்தமான நிறுவனங்களுக்கு இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. (அ)

## 10,000 தொழில்நுட்ப வல்லுநர்கள் நாட்டில் இருந்து வெளியேற்றம்!

கொழும்பு, டிசெ. 04

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி காரணமாக பல தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் இலங்கையை விட்டு வெளியேறியுள்ளதாக இலங்கை கணினி சங்கத்தின் தலைவர் தமித் ஹெட்டிஹேவா தெரி வித்துள்ளார்.

“தற்போது வரை குறைந்தது 10,000 தொழில்நுட்ப வல்லுநர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். உலகின் பல நாடுகள் டிஜிற்றல் மயமாக்கலை நோக்கி நகர்கின்றன. எனவே அந்த நாடுகளுக்கு தொழில்நுட்ப வல்லுநர்கள் தேவைப்படுகிறார்கள்.

மேலும் கோவிட் தொற்று நோயுடன் தகவல் தொழில்நுட்ப நிபுணர்களுக்கான தேவை அதிகரித்தது,” என்று அவர் வெளிப்படுத்தினார்.

தற்போதைய தரவுகளின்படி, கிட்டத்தட்ட 10 வீதம் அல்லது கிட்டத்தட்ட 10,000 தொழில்நுட்ப வல்லுநர்கள் இலங்கையை விட்டு வெளியேறியுள்ளதாக ஹெட்டிஹேவா கூறினார்.

சிறந்த வாய்ப்புகள் காரணமாக 20-25 வீத தொழில்நுட்ப பொறியாளர்களின் ராஜினாமாக்கள் தற்போது பல்வேறு நிறுவனங்களில் பதிவாகி வருவதாகவும் அவர் கூறினார். (அ)

## பொலிஸ் பொறுப்பதிகாரியின் வீட்டில் கொள்ளையர் கைவரிசை

கொழும்பு, டிசெ. 04

மோட்டார் சைக்கிளில் வந்த ஆயுதம் ஏந்திய கும்பலொன்று பொலிஸ் பொறுப்பதிகாரி ஒருவரின் வீட்டில் கொள்ளையடித்து தப்பிச்சென்றுள்ளனர்.

களுத்துறை வடக்கு, பல்வேறு முறைப்பாட்டுப் பிரிவு பொறுப்பதிகாரி நிஷான்குமார வசிக்கும் பொந்துபிட்டிய, வெலிபன்ன குருந்த வீதியில் அமைந்துள்ள வீட்டிலேயே இந்த கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிள்களில் நேற்று வீட்டுக்குள் புகுந்த ஆயுதம் தாங்கிய கும்பல், வீட்டில் இருந்த 2 கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் தங்க ஆபரணங்களைத் திருடிச் சென்றுள்ளதாக வெலிபன்ன பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது பொலிஸ் பொறுப்பதிகாரி வீட்டில் இல்லை. வீட்டில் இருந்த பொலிஸ் பொறுப்பதிகாரியின் மனைவி கொள்ளையர்களால் தாக்கப்பட்டு காயம் அடைந்தார். சந்தேகநபர்கள் ரி-56 துப்பாக்கியை கொண்டு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

## 9 மாதங்களுள் ரெலிகொமுக்கு ஆறு பில்லியன் ரூபா இலாபம்!

கொழும்பு, டிசெ. 04

கடந்த வருடத்தில் ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனம் பெற்ற இலாபம் 12 பில்லியன் ரூபா என்றும், இந்த வருடத்தில் ஜனவரி முதல் செப்ரெம்பர் மாதம் வரையில் 6 பில்லியன் ரூபாவுக்கு அண்மித்த இலாபத்தைக் குறித்த நிறுவனம் ஈட்டியிருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

தொழில்நுட்ப அமைச்சசார் ஆலோசனைக் குழுக் கூட்டம் பாராளுமன்றத்தில் நடைபெற்றது.

இதன்போது ரெலிகொம் நிறுவனத்தை தனியார்மயப்படுத்தும் பிரேரணை தொடர்பில் கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் உபுல் கலப்பதி, குறித்த நிறுவனத்தின் அதிகாரிகளிடம் நிறுவனம் குறித்த தகவல்களைக் கேட்டறிந்தபோதே இந்தத் தகவல் வெளியானது.

ரெலிகொம் நிறுவனத்தின் 49.5 சதவீத பங்கு அரசுக்கு சொந்தமானது என்றும், தனியார் மயமாக்கப்பட்டால், அந்தப் பங்குகளே தனியாருக்குச் சொந்தமாகும் என்றும் அந்த நிறுவன அதிகாரிகள் தெரிவித்தனர்.

இணைய சேவை நிறுவனங்களுக்கு தொலைத்தொடர்பு ஒழுங்குறுத்துகை ஆணைக்குழுவினால் 5ஜி தொழில்நுட்பத்துக்கு அனுமதி வழங்கப்படுவது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இதற்கமைய அடுத்த வருடம் 5ஜி தொழில்நுட்பம் தொடர்பான வர்த்தக நடவடிக்கைகளை தொடங்க தேவையான ஏற்பாடுகள் செய்யப்படும் என தொலைத் தொடர்பு ஒழுங்குறுத்துகை ஆணைக்குழுவின் அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)

## புதுக்கடை நீதிமன்றில் 44 பவுண் தங்கம் மாயம்

கொழும்பு, டிசெ. 04

கொழும்பு, புதுக்கடை நீதிமன்றத்தின் வழக்குக் களஞ்சியசாலையில் வைக்கப்பட்டிருந்த இரண்டு வழக்குகளுடன் தொடர்புடைய 44 பவுணுக்கும் அதிகமான தங்க ஆபரணங்கள் திருடப்பட்டமை தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக வாழைத் தோட்டம் பொலிஸார் தெரிவித்தனர்.

வாழைத்தோட்டம் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பிலுள்ள இரண்டு பொலிஸ் நிலையங்கள் தொடர்பான வழக்குப் பொருட்களாக இந்த தங்க ஆபரணங்கள் களஞ்சிய சாலையில் வைக்கப்பட்டு இருந்ததாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ)

## கடவுச்சீட்டு விண்ணப்பங்கள் இணையம் மூலம் ஏற்கப்படும்!

கொழும்பு, டிசெ. 04

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் இணையத்தின் மூலம் கடவுச்சீட்டுகளை விநியோகிப்பதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளத் திட்டமிட்டுள்ளதாக திணைக்களத்தின் தகவல் தொழில்நுட்பக் கட்டுப்பாட்டாளர் சம்பிக்க ராமவிக்ரம தெரிவித்தார்.

திட்டத்தின் மூலம், ஒரு விண்ணப்பதாரர் தனது விண்ணப்பத்தை வீட்டில் இருந்த படியே திணைக்களத்துக்குச் சமர்ப்பிக்க முடியும். கைரேகை போன்ற விடயங்களுக்காக மாத்திரம் விண்ணப்பதாரர் திணைக்களத்துக்கு வரவேண்டியிருக்கும்.

இதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் கைரேகை களைப் பெறுவதற்காக 50 முகவர் அலுவலக மையங்களை நிறுவ திணைக்களம் தீர்மானித்துள்ளது.

அத்துடன் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் 50 பிரதேச செயலக அலுவலகங்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளதாக சம்பிக்க ராமவிக்ரம கூறினார். (அ)

# மக்கள் போராட்டத்தை முடக்கினால் பாரதூரமான விளைவுகளே ஏற்படும்!

## எச்சரிக்கின்றார் சரத் பொன்சேகா

கொழும்பு, டிசெ. 04

**சண்டியர்களை கொண்டு மக்கள் போராட்டத்தை முடக்க முயற்சித்தால் பாரதூரமான விளைவுகளே ஏற்படும் என பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்தார்.**



சண்டியர்களை வெளியேற்றாமல் உரிமைக்காக போராடும் மக்களை காலி முகத்திடலில் இருந்து வெளியேற்றும் பொலிஸாரின் செயற்பாடுகள் வெட்கக்கேடானது என்றும் அவர் சாடினார்.

பாராளுமன்றில் நேற்று இடம்பெற்ற வரவு - செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்திலேயே சரத் பொன்சேகா இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

உணர்வுபூர்வமாகவும் வெளிப்படைத்தன்மையுடன் உதைபந்தாட்ட போட்டியை கட்டார் நாட்டின் இளவசர் ஒழுங்குபடுத்தியுள்ளார்.

இதன் காரணமாகவே அங்கு போட்டிகள் சிறப்பாக இடம்பெறுகின்றன. இதனை சிறந்த உதாரணமாக எடுத்துக் கொள்ளவேண்டும்.

இலங்கையில் அரசராகும் கனவுடன் கடந்த காலத்தில் இருந்த ஒருவரிடம் இவ்வாறான செயற்திட்டம் வழங்கப்பட்டிருந்தால் வங்குரோத்து நிலை அடைந்துள்ள நாட்டில் மிகுதியாக உள்ள வளம் கூட மோசடி செய்யப்பட்டிருக்கும் - என்றார். (அ)

# நீச்சல் தடாகத்தில் மூழ்கி மாணவர் ஒருவர் மரணம்!

கொழும்பு, டிசெ. 04

வென்னப்புவ, பொரலஸ்ஸ பிரதேசத்தில் உள்ள விடுதி ஒன்றின் நீச்சல் தடாகத்தில் நீராடச் சென்ற பாடசாலை மாணவர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தலங்காவ பிரதேசத்தில் வசிக்கும் 14 வயதுடைய 10ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என பொலிஸார் கூறினர்.

தனியார் வகுப்பு மாணவர்கள் 80 பேர் அந்த சுற்றுலாவுக்கு சென்றிருந்த நிலையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மாணவர்கள் குழு ஒன்று நீச்சல் குளத்தில் நீந்திக் கொண்டிருந்தபோது, குறித்த மாணவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வென்னப்புவ பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# சஜித்தின் மாளிகை மீது விரைவில் கல் வீசப்படும்!

## கூறுகிறார் டயானா கமகே

கொழும்பு, டிசெ. 04

எதிர்க்கட்சித் தலைவரின் கண்ணாடி மாளிகையை அழிக்க விரைவில் கல் எறியப்படும் என சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயானா கமகே பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

கட்சியைக் கொடுத்து சஜித் பிரேமதாஸவை எதிர்க்கட்சித் தலைவராக்கியவர் தாம் என்றும் டயானா கமகே கூறினார்.

“அந்த கண்ணாடி வீட்டை அழிக்க நான் கல்லை அடிக்க விரும்புகிறேன்,” என இராஜாங்க அமைச்சர் டயானா கமகே பாராளுமன்றத்தில் குறிப்பிட்டார்.

வரவு - செலவுத் திட்டம் மீதான குழு விவாதத்தின் போதே டயானா கமகே இவ்வாறு கூறினார். (அ)

# கொழும்பு தனியார் வைத்தியசாலையில் விதைப் பை அகற்றும் மோசடி அம்பலம்!

கொழும்பு, டிசெ. 04

சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை எனக் கூறி கொழும்பு - புளுமண்டல் பகுதியில் வசிக்கும் ஆண்ணொருவரின் விதைப்பையை அகற்றுவதற்கு திட்டமிடப்பட்ட மோசடி ஒன்று தொடர்பில் தகவல் வெளியாகியுள்ளது.

கொழும்பு - பொரளை தனியார் வைத்தியசாலையொன்றில் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டதாக சிங்கள பத்திரிகை ஒன்று நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைக்கென கூறி ஒரு கோடியே அறுபது இலட்சம் ரூபாயை வழங்கி குறித்த ஆணின் விதைப் பையை அகற்ற திட்டமிடப்பட்டதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இந்த அறுவைச் சிகிச்சைக்காக இணங்கிக்கொள்ளப்பட்ட பணம் உரிய காலத்தில் வழங்கப்படாமையை அடுத்து மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் பின்னர் அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

இதன்போதே, குறித்த விதைப்பையை அகற்றும் மோசடி குறித்த தகவலும் வெளியாகியுள்ளது.

இந்த அறுவைச் சிகிச்சை சட்டவிரோத வலையமைப்பாக மேற்கொள்ளப்படுவதாக அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, கோடிக் கணக்கில் பணம் தருவதாக கூறி மக்களை ஏமாற்றி உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் உள்ள மக்களுக்கு சிறுநீரகங்களைப் பெற்று விற்பனை செய்யும் மோசடியில் ஈடுபட்ட சந்தேகநபர்களை கைது செய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினர் கொழும்பு மேலதிக நீதவான் ரஞ்சிந்திர ஜயசூரியவிடம் அறிவித்தருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# இரு உரக் கப்பல்கள் இலங்கைக்கு வருகை

கொழும்பு, டிசெ. 04

இலங்கை துறைமுகத்திற்கு இரண்டு கப்பல்கள் உரத்தை ஏற்றிக்கொண்டு வந்தடைந்ததாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அதன்படி 41,678 மெற்றிக் தொன் எம்.ஓ.பி. உரத்தை ஏற்றிக்கொண்டு கப்பல் ஒன்று நேற்று முன்தினம் வந்துள்ளது.

இதேவேளை, மற்றுமொரு கப்பலும் 16,000 மெற்றிக் தொன் யூரியாவுடன் நேற்று காலை வந்ததாக அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# இந்த வருடம் 24 பில்லியன் ரூபா இலாபம் ஈட்டிய துறைமுகங்கள்

கொழும்பு, டிசெ. 02

துறைமுகம் லாபகரமான நிறுவனமாக மாறியுள்ளதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டார்.

இதேவேளை, கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் துறைமுகம் 24



பில்லியன் ரூபா லாபத்தை ஈட்டியுள்ளது.

மேலும் எதிர்காலத்தில் 6 பயணிகள் கப்பல்கள் இலங்கைக்கு வரவுள்ளதாகவும் அமைச்சர் கூறினார். (அ)

# மலேசியாவுக்கு சுற்றுலா விஸாவில் தொழில் தேடிச் சென்ற 9 பேர் கைது!

கொழும்பு, டிசெ. 04

மலேசியாவிற்கு பயணம் மேற்கொண்டிருந்த 14 இலங்கையர்கள் அடங்கிய குழுவொன்றை நேற்று முன்தினம் மேற்கொண்ட சோதனையின் போது, சுற்றுலா விஸாவில் தொழில் நோக்கத்திற்காக பயணித்த 9 பேர் அடையாளம் காணப்பட்டதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய வளாகத்தில் இருந்தபோதே குறித்த குழு அடையாளம் காணப்பட்டுள்ளது.

எயார் ஏசியா விமானத்தில் நான்கு பெண்களும் ஐந்து ஆண்களும் மலேசியாவுக்கு இந்த மோசடியை மேற்கொண்ட நபர்களால் அனுப்பப்பட்டதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் விமான நிலையப் பிரிவு அதிகாரிகள் மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்ட விரிவான விசாரணைகளை அடுத்து இந்த மோசடி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த குழுவினர் பணியகத்தின் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், மோசடியில் ஈடுபட்டவர்களை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டுள்ளனர். (அ)

# 400 வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்களின் உரிமம் தடை!

கொழும்பு, டிசெ. 04

சுற்றுலா விசாவில் ஆட்களை வெளிநாடுகளுக்கு அனுப்பிய 400 வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனங்களின் உரிமம் தடை செய்யப்பட்டுள்ளது.

இதனை தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார நேற்று சனிக்கிழமை பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

மேலும், உண்டியல் வடிவில் பணத்தைக் கொண்டு வந்த பல வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிறுவனங்களும் தற்காலிகமாக தடை செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

வரவு-செலவுத்திட்டத்தில் தொழிலாளர் அமைச்சின் செலவீனங்கள் மீதான குழு விவாதத்தின்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். (அ)

# 60 வயது கடந்தால் சேவை நீடிப்பில்லை!

கொழும்பு, டிசெ. 04

இம்மாதம் 31ஆம் திகதியுடன் 60 வயது பூர்த்தியாகும் அரச உத்தியோகத்தர்கள் எவருக்கும் சேவை நீடிப்பதில்லை என்ற உறுதியான நிலைப்பாட்டில் நிதி அமைச்சின் செயலாளரும் அதன் அதிகாரிகளும் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆண்டு டிசெம்பர் 31 ஆம் திகதி 60 வயதை அடையும் பாராளுமன்றத்தின் 27 அதிகாரிகள் நீண்ட சேவையைப் பெற இந்த நாட்களில் பெரும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இது தொடர்பில் கருத்து தெரிவித்த நிதியமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவர், குறிப்பிட்ட எண்ணிக்கையிலான நபர்களுக்கு சேவை நீடிப்பு வழங்கினால், ஒட்டுமொத்த அரச சேவையும் சிக்கலில் சிக்குவதை தடுக்க முடியாது.

எனவே, குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மக்களுக்கு சேவைகளை வழங்க முடியாது என குறிப்பிட்டார். (அ)

# அதிர்ச்சியில் பஸில்!

கொழும்பு, டிசெ. 04

பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ, நாட்டு மக்களின் மனிநிலையை தெரிந்து கொள்ள முகவர் அமைப்பின் மூலமாக இரகசிய கருத்துக் கணிப்பை நடத்தியதாகவும், அந்த முடிவுகளால் அதிர்ச்சியடைந்துள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

அண்மையில் அமெரிக்காவிலிருந்து நாடு திரும்பிய பஸில், அடுத்த கட்ட அரசியல் நகர்விற்கு முன்னதாக, முகவர் அமைப்பொன்றின் மூலம் கருத்துக் கணிப்பை நடத்தியதாக பொதுஜன பெரமுன வட்டாரங்களிலிருந்து தகவல் கசிந்துள்ளது.

அந்த முடிவுகளின்படி, ஐக்கிய மக்கள் சக்தி 51 வீத வாக்குகளைப் பெறும் என்றும், ஜே.வி.பி இரண்டாம் இடத்தைப் பெற்று எதிர்க்கட்சியாக மாறும் என்றும், பொது ஜன பெரமுன மூன்றாவது இடத்தையே பிடிக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, பஸில் ராஜபக்ஷ முடிவுகளுடன் கூடிய ஆவணத்தை தனது கட்சி அலுவலகத்தில் வைத்து பூட்டி வைத்துள்ளார்.

இந்த முடிவுகள் கிடைத்த பின்னர் கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில், தேர்தலை நடத்துவது தொடர்பில் பஸில் ராஜபக்ஷ தனது கருத்தை தெரிவிக்கவில்லை என தெரியவந்துள்ளது.

அத்துடன், பொதுஜன பெரமுனவிலிருந்து பிரிந்து சென்ற தரப்புக்களை மீள இணைப்பதற்காக இரகசியமாக தூது விட்டதாகவும் தகவல் லெளியாகியுள்ளது.

மூன்றாம் தரப்புக்கள் ஊடாக விமல் வீரவன்ஸ மற்றும் டலஸ் அழகப்பெருமவுக்கு தகவல் அனுப்பியதாகவும், விமல் வீரவன்ஸ கடும் தொனியிலான பதிலை அனுப்பியதாகவும் சிங்கள ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நாட்டை அழித்த பொது ஜன பெரமுனவுடன் இனி மேல் எந்தக் காலமும் கூட்டணி வைக்கமாட்டோம் என அவர் பதிலனுப்பியதாக தகவல் வெளியாகியுள்ளது. (அ)

# தேர்தலுக்கு தயாராகும் ஐக்கிய தேசியக் கட்சி!

## பாலித ரங்கே பண்டார தகவல்



கொழும்பு, டிசெ. 04

அடுத்த தேர்தலை எதிர்கொள்ள ஐக்கிய தேசியக் கட்சியை தயார்படுத்தி வருவதாக கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர் இதனை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கட்சி அமைப்பாளர்களை தெரிவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம். புதிய அமைப்பாளர்களை தேர்வு செய்ய பல கட்ட நேர்காணல்கள் நடத்தப்படும்.

எதிர்காலத் தேர்தல்களில் புதிய முகங்களை அறிமுகப்படுத்த எதிர்பார்த்துள்ளோம்.

ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்வதற்கு ஏனைய கட்சிகளைச் சேர்ந்த பலர் ஆலோசித்து வருகின்றனர்.

நாட்டைக் கட்டியெழுப்பும் சவாலை கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொண்டுள்ளார்.

எனவே ஜனாதிபதியின் வேலைத்திட்டத்திற்கு அனைத்து தரப்பினரும் ஆதரவளிக்க வேண்டும்.

நாட்டை கட்டியெழுப்புவதற்கும் பிரச்னைகளை தீர்ப்பதற்கும் அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்-என்றார். (அ)

# குற்றவாளிகளின் அபராத தொகையில் ரூ.8,500 திருடிய நீதிபதிக்கு பிடியாணை!

கொழும்பு, டிசெ. 04

குற்றவாளிகளிற்கு விதிக்கப்பட்ட அபராதத்தை குறைவாக பதிவு செய்து, மிகுதிப் பணத்தை திருடிய குற்றச்சாட்டுக்களில் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டு பத்து வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் காலி நீதவான் திருமதி டி.எஸ்.மிரிஞ்சியாராச்சியை கண்ட இடத்தில் கைது செய்து ஆஜர்படுத்துமாறு கொழும்பு மேல் நீதிமன்றினால் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

குற்றவியல் நடைமுறைச் சட்ட விதிகளின்படி, குற்றம் சாட்டப்பட்டவர் இல்லாத நிலையில் வழக்கு விசாரணை செய்யப்பட்டு, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் அறிக்கையின்படி குற்றம் சாட்டப்பட்டவர் வெளிநாட்டில் இருப்பதாக அரச சட்டத்தரணி சமர்ப்பித்த தகவலின் அடிப்படையில் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

2000 ஏப்ரல் 4ஆம்,5ஆம் திகதிகளில் இந்த குற்றம் நடந்தது. கலால் வரி குற்றங்களுக்காக இருவர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். அவர்களுக்கு விதிக்கப்பட்ட அபராதத் தொகையை, பதிவேட்டில் குறைத்து பதிவு செய்து, மிகுதி பணத்தை திருடியுள்ளார்.

ஒருவருக்கு ரூ.7,500 அபராதம் விதிக்கப்பட்டது. அதை நீதிமன்ற பதிவேட்டில் ரூ.1,500 என பதிவிட்டு, மிகுதி பணத்தை திருடினார். மற்றொருவருக்கு ரூ.5,000 அபராதம் விதிக்கப்பட்டது. அதை நீதிமன்ற பதிவேட்டில் ரூ.2,500 என பதிவிட்டு, மிகுதி பணத்தை திருடியுள்ளார்.

அவருக்கு எதிராக சட்டமா அதிபர் 2019 இல் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தார்.

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 241வது பிரிவின் கீழ் குற்றம் சாட்டப்பட்டவர் இல்லாத நிலையில் இந்த வழக் குகளின் விசாரணையை கொழும்பு உயர் நீதிமன்றம் நடத்தியதுடன், ஐந்து வருட சிறைத்தண்டனையும் ரூ.22,500 அபராதமும் விதித்தது. (அ)

# பெருங்குடல் புற்றுநோய் விரைவாக அதிகரிக்கிறது

கொழும்பு, டிசெ. 04

நாடு முழுவதிலும் ஆண், பெண் இருபாலரிடையேயும் பெருங்குடல் புற்றுநோய் விகிதம் வேகமாக அதிகரித்து வருவதாக இலங்கை புற்றுநோயியல் நிபுணர்கள் கல்லூரி எச்சரிக்கை விடுத்துள்ளது.

“இலங்கையில் வருடாந்தம் கண்டறியப்படும் புற்றுநோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. ஆண், பெண் இருபாலருக்குமிடையே பெருங்குடல் புற்றுநோய், குடல் மற்றும் மலக்குடல் புற்றுநோய் அதிகரித்து வருகின்றது. இதற்குக் காரணம் மக்கள் கொழுப்புச் சத்துள்ள உணவுகளை உட்கொள்வதே முக்கிய காரணமாகும். தொடர்ந்து உடற்பயிற்சி செய்யத் தவறினால், அது உடல் பருமனுக்கு வழி வகுக்கிறது” என இலங்கை புற்றுநோயியல் நிபுணர்கள் கல்லூரியின் தலைவரும், தேசிய புற்றுநோய் நிறுவனத்தின் ஆலோசகரும் மருத்துவ புற்றுநோயியல் நிபுணருமான வைத்தியர் நடராஜா ஜெயக்குமரன் தெரிவித்துள்ளார்.

நாட்டிலுள்ள ஆண் மக்களிடையே வாய்வழி புற்றுநோய்கள் மிகவும் பொதுவான வீரியம் மிக்க புற்றுநோயாகும். ஆண்களில் இரண்டாவது மிகவும் பொதுவானது நுரையீரல் புற்றுநோய் என கண்டறியப்பட்டுள்ளது.

மார்பக புற்றுநோயானது பெண்களிடையே மிகவும் பொதுவான புற்றுநோயாகும், அதைத் தொடர்ந்து தைராய்ட் புற்றுநோய் உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

“இளைஞர்கள் அதிகளவில் நொறுக்குத் தீனிகளை உட்கொள்கின்றனர் மற்றும் அவர்கள் உடல் செயற்பாடுகளில் ஈடுபடுவது அரிது” என்றும் வைத்தியர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நார்ச்சத்து நிறைந்த உணவுகள் மற்றும் பல வண்ண பழங்களை உட்கொள்வதன் முக்கியத்துவத்தையும் அவர் வலியுறுத்தியுள்ளார். அவை நம் ஆரோக்கியத்திற்கு மிகவும் நன்மை பயக்கும் எனவும் அவர் கூறினார்.

“ஆரோக்கியமான வாழ்க்கை முறையை கடைப்பிடித்தால், குடலில் ஏற்படும் புற்றுநோய்களை தவிர்க்கலாம்,’ என பொது மக்களுக்கு அவர் அறிவுறுத்தினார். (அ)

# 4 மாதக் கட்டணம் செலுத்தாததால் பிரியமாலி வீட்டில் மின் துண்டிப்பு



கொழும்பு, டிசெ. 04

பாரிய நிதி மோசடியில் ஈடுபட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள திகோ குழும உரிமையாளர் திலினி பிரியமாலியின் வீட்டில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாக மின்சாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

4 மாதங்களாக நிலுவையில் உள்ள மின்கட்டணத்தை செலுத்தாததால் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவித்தன.

இதனால் வத்தளை அவரிவத்தை எட்வர்ட் பதுமவில் அமைந்துள்ள திலினி பிரியமாலி மற்றும் அவரது குடும்பத்தினர் வாடகை அடிப்படையில் வசித்து வந்த வீட்டில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. (அ)

# வடமராட்சி கிழக்கில் மின் ஒளியை பாய்ச்சி சிறிய கண் வலையால் மீன் பிடிக்க தடை!

யாழ்ப்பாணம், டிசெ. 04

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி, கட்டைக்காடு கடற்பரப்பில் சிறிய கண் வலைகளைப் பயன்படுத்தி மின் ஒளி பாய்ச்சி மீன் பிடிக்கும் செயற்பாடுகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக தமது பகுதி கடற்பரப்பில் குறித்த கடற்றொழில் நடவடிக்கையை சில தொழிலாளர்கள் முன்னெடுத்து வருவதால் தமது தொழில் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுவருவதாக சுட்டிக்காட்டிவரும் கடற்றொழில் சங்கங்கள், அதனை தடை செய்யுமாறு வலியுறுத்தி வந்திருந்ததுடன் இவ்விடயம் தொடர்பில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்கும் கொண்டுசென்றிருந்தன.

இந்த நிலையில் துறைசார் அதிகாரிகள் மற்றும் கடற்படை அதிகாரிகள் கடற்றொழிலாளர்கள் ஒன்றிணைந்து நேற்று கலந்துரையாடலொன்றை மேற்கொண்டிருந்தனர்.

குறித்த கலந்துரையாடலில் ஒளி பாய்ச்சி சிறிய கண் வலைகளை பயன்படுத்தி முன்னெடுக்கப்படும் தொழில் நடவடிக்கைகளை கட்டுப்படுத்த துறைசார் அதிகாரிகள் மற்றும் கடற்படையினர் இணக்கம் தெவித்தனர்.

இதனையடுத்து நேற்று முன் தினம் முதல் குறித்த தொழில் நடவடிக்கைகள் தடை செய்யப்படுவதுடன் அதனை மீறி தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடும் தொழிலாலர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அதிகாரிகள் மட்ட கூட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

ஈழநாடு
Eelanadu
04.12.2022 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 18

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

## இயலாமையின் வாக்குமூலம்?

பேச்சுவார்த்தைகள் எவையுமே வெற்றியளிக்கவில்லை. சிங்கள குடியேற்றங்கள் வடக்கு கிழக்கில் அதிகரித்துச் செல்கின்றன. தமிழ் மக்கள் வெளியேறிவருகின்றனர். இந்த நிலைமை தொடர்ந்தால், வடக்கு-கிழக்கில் தமிழ் மக்கள் அவர்களது அடையாளத்தையும், சுய-கௌரவத்தையும், பேணிப்பாதுகாக்க முடியாமல் போய்விடும். இதனை சர்வதேசம் அனுமதிக்கக்கூடாது. அவ்வாறு நடந்தால் இது மோசமான தொரு உதாரணமாக போய்விடும். இதனை சர்வதேசம் அனுமதிக்கக்கூடாது. இந்திய ஆங்கில ஊடகமொன்றிற்கு வழங்கிய நேர்காணலிலேயே, சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கின்றார். இத்தனை அனுபவங்களுக்கு பின்னரும் சம்பந்தனுக்கு சர்வதேச சமூகம் தொடர்பில் தெளிவானதொரு பார்வையில்லையென்பது இதன் மூலம் தெளிவாகின்றது.

ஈழத் தமிழர்களின் பிரச்னைகளை விடவும் பாரதூரமான பிரச்னைகளை உலகம் கண்டிருக்கின்றது. உலகமே பார்த்துக் கொண்டிருக்கும்போதுதான், 1994இல், ருவாண்டாவில் நூறு நாட்களில் எட்டு லட்சம் மக்கள் கொல்லப்பட்டனர். இந்த மக்களை பாதுகாப்பதில் ஐக்கிய நாடுகள் சபை உரியவாறு செயற்பட்டிருக்கவில்லையென்னும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. இதே போன்று, குவாட்டமாலாவில் இரண்டு லட்சம் மாயன் பழம்குடி மக்கள் கொல்லப்பட்டபோதும், ஐக்கிய நாடுகள் சபை தோல்வியடைந்துவிட்டாகவே விமர்சிக்கப்பட்டது. அதேபோன்று, இலங்கையின் இறுதி யுத்தத்தின் போதும், அப்பாவி மக்களை பாதுகாப்பதில் ஐக்கிய நாடுகள் சபை தோல்வியடைந்துவிட்டதாகவே பின்னர் அறிக்கைவெளியிடப்பட்டது. எனவே சர்வதேசத்தை பொறுத்தவரையில், ஈழத் தமிழர் விவகாரம் முதல் விவாகரமுமல்ல கடைசி விவகாரமுமல்ல.

இந்தியா, அமெரிக்கா, ஐக்கிய நாடுகள் சபையென்பன அனைத்துமே அரைவழி நண்பர்கள்தான். அவர்கள் நமது அனைத்து விவகாரங்களுடனும் பயணம் செய்யப்போவதில்லை. நாம்தான் கிடைக்கும் ஒவ்வொரு வாய்புக்களையும் உச்சளவில் பயன்படுத்தி, மக்களின் நலன்களை பாதுகாக்கும் உபாயங்களை கண்டடைய வேண்டும். இன்று, பேச்சுவார்த்தைகள் அனைத்தும் தோல்வியடைந்துவிட்டதாக தனது இயலாமையை முன்வைக்கும் சம்பந்தனோ, ரணில்-மைத்திரி ஆட்சிக்காலத்தில் முன்வைக்கப்பட்ட ஆலோசனைகள் எவற்றையுமே கருத்தில்கொள்ளவில்லை. ரணில்-மைத்திரி காலத்தை உச்சளவில் பயன்படுத்தியிருந்தால், அரசியலமைப்பில் இருக்கின்ற விடயங்களை அமுல்படுத்துவதுடன், அதற்கு மேலும் சில வியடங்களில் முன்னேற்றத்தை கண்டிருக்கலாம். ஆனால் சம்பந்தன் எதனையும் கருத்தில்கொள்ளவில்லை. புதிய அரசியல் யாப்பொன்றை கொண்டுவரமுடியமென்று நம்பி, ஐந்து வருடங்களை வீணாக்கியிருந்தார்.

யுத்தம் நிறைவுற்று பதின்மூன்று வருடங்களாவிட்டது. இந்தக் காலத்தில் ஒரு இஞ்சி கூட முன்னோக்கி நகர முடியவில்லை. இனியும் முடியுமா என்னும் கேள்வியுடன்தான், தமிழர்களின் தேசிய அரசியல் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது. இப்போதும் கூட சம்பந்தன், தனது தவறுகளை எண்ணிப்பார்க்காமல், சர்வதேச சமூகத்தை நோக்கி கோரிக்கை முன்வைக்கின்றார். இந்தக் காலத்தில் கிடைத்த வாய்ப்பென்று சிந்தித்தால், ரணில்-மைத்திரி ஆட்சிக்காலம்தான் உச்சமானது. ஆனால் அதனை சரியாக பயன்படுத்தவில்லை. இதற்கு சிங்கள ஆட்சியாளர்களை குற்றம்சாட்டுவதில் எவ்வித பயனுமில்லை. சிங்கள ஆட்சியாளர்களின் வரலாறு தெரிந்துதானே, நாங்கள் அவர்களுடன் பேச்சுவார்த்தைக்கு செல்கின்றோம். பின்னர் அரசாங்கம் தீர்வை வழங்கவில்லையென்று புலம்புவதில் என்ன அர்த்தமுண்டு. ஒவ்வொரு பேச்சுவார்த்தைக்கு செல்லும்போதும், நன்கு திட்டமிடப்பட்ட வேலைத்திட்டமொன்றுடன் சென்றிருக்கவேண்டும். பேச்சுவார்த்தையின் மூலம் உச்சமான நன்மைகளை எவ்வாறு அடைவதென்று சிந்தித்து, ஒவ்வொரு நகர்வையும் முன்னெடுத்திருக்கவேண்டும். அதனை செய்யாது, வெறுமனே சர்வதேச சமூகத்திடம் முறையிடுவதால் எதுவும் நடந்துவிடப் போவதில்லை.

இலங்கை தமிழர் விவகாரத்திற்கான எந்தளவு தலையீடு செய்யலாமென்பதில் நாடுகளின் ஒரு தெளிவான பார்வையுண்டு. எல்லைக் கோடுமுண்டு. இத்தனை அழிவுகள், இத்தனை கோரிக்கைகள், இத்தனை பிரரேரணைகளுக்கு பின்னரும் கூட, இந்தியா ஒன்றுதான், தமிழ் மக்களுக்கு, அரசியல் பிரச்னையொன்றிருப்பதாக, கூறிவரும் ஒரேயொரு நாடாகும். இதனை புரிந்துகொள்ளாமல், சர்வதேச சமூகத்திடம் கோரிக்கை வைப்பதில் எவ்வித பயனுமில்லை.

# விசேட தேவையுடையவர்களின் நலனுக்காக புதிய வேலைத்திட்டம்



கொழும்பு, டிசெ. 04

விசேட தேவையுடையவர்களின் நலனுக்காக புதிய வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படும். விளையாட்டு, சுகாதாரம், இளைஞர் விவகாரம் உள்ளிட்ட பல அமைச்சுக்களின் ஒத்துழைப்புடன் தயாரிக்கப்படும் இப்புதிய வேலைத்திட்டத்தை விரைவில் அமைச்சரவையில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

2022 ஆம் ஆண்டுக்கான சர்வதேச மாற் றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு நேற்று சனிக்கிழமை அலரி மாளிகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேசிய நிகழ்வில் கலந்துகொண்டபோதே ஜனாதிபதி இதனைத் கூறினார்.

பல்வேறு திறன்களைக் கொண்ட விசேட தேவையுடையவர்கள் இருப்பதனால், அவர்களின் படைப்புத் திறமைகளை நாட்டின் எதிர்கால அபிவிருத்திக்காக திறம்பட பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி இங்கு வலியுறுத்தினார்.

அரச நிறுவனங்களில் விசேட தேவையுடையோரின் நலன் தொடர்பில் நிலவும் குறைபாடுகள் குறித்து கவனத்திற்கு கொண்டு வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க , அது தொடர்பில் ஆராய்ந்து அத்துறைகளில் வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் கூறினார். (அ)

# அமெ. இராஜாங்க செயலாளரை சந்தித்தார் அமைச்சர் அலி சப்ரி

கொழும்பு, டிசெ. 04

அமெரிக்காவுக்கான உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, அமெரிக்க இராஜாங்க செயலாளர் அன்டனி பிளிங்டனுடன் கலந்துரையாடலை மேற்கொண்டுள்ளார்.

இலங்கை மற்றும் அமெரிக்காவுடனான தற்போதைய உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து அவதானம் செலுத்தப்பட்டதுடன், இரு நாடுகளுக்கும் பரஸ்பர ஆர்வமுள்ள விடயங்கள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டதாக வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ)



# கடலட்டைப் பண்ணைக்கு எதிராக போராடுவோருக்கு அழைப்பாணை

கிளிநொச்சி,டிசெ.04

கிராஞ்சியில் கடலட்டை பண்ணைக் கெதிராக போராடும் 10 பேருக்கு நீதிமன்ற அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி, பூநகரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிராஞ்சி பகுதியில் கடலட்டை பண்ணைக் கெதிராக 65ஆவது நாளாக மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.


இந்த நிலையில், கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றினால் 10 பேருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

குறித்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ள 10 பேருக்கே இவ்வாறு மன்றினால் அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவித்தனர்.

வழக்கு தொடர்பில் தமக்கு எதுவும் தெரியாது எனவும் அவர்கள் கூறினர்.

அண்மையில் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த இருவர் எவ்வித காரணமுமின்றி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு, பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



பகிர்வு -58

# நேசமொன்றே போதும் தேசம் அன்பில் மீள...!

கணபதி சர்வானந்தா

**"வார்த்தை தேவையில்லை**
**வாழும் வாழ்க்கையிலே**
**காணும் சக மாந்தரிடையே**
**கொள்ளும் நேசமொன்றே போதும்**
**தேசம் அன்பில் மீளும்."**

"இந்தத் துருக்கிய திரைத்துணுக்கு தரும் செய்தியும் அதுவே!" என்று பதிவிட்டு ஒரு காணொளியை பதிவேற்றம் செய்திருக்கிறார் முகநூல் நண்பர் ஆர்.ஜே.பிரகலாதன்.

அக் காணொளி ஒரு வீட்டு விருந்தினர் மண்டபத்தில் எடுக்கப்பட்டிருந்தது. அந்த மண்டபத்தில் ஒரு சிறுவன் தனது தந்தையாரோடு அமர்ந்திருக்கிறான். அவன் புத்தகம் ஒன்றை வாசித்துக் கொண்டிருக்கிறான்.

அவனது தந்தையார் தொலைக் காட்சி நிகழ்ச்சி ஒன்றில் முழ்கியிருக்கிறார். இடை நடுவே தொலைக் காட்சி தனது இயக்கத்தை நிறுத்திக் கொள்கிறது. அவனது தந்தையாரோ தொலைக்காட்சியை இயக்க முயற்சிக்கிறார். அவரால் முடியவில்லை. அது பழுதடைந்துவிட்டதாக அவர் உணர்ந்தபோது அதை சரி செய்யக் கூடிய ஒருவரை அழைத்தார்.

பழுது பார்ப்பவரும் வந்து தொலைக் காட்சியைப் பிரித்தார். பிரித்ததும் அவர்கள் கண்ட காட்சி அவர்களைப் பலவாறாகச் சிந்திக்கத் தூண்டியது. அர்கள் விக்கித்துப் போனார்கள். அந்தத் தொலைக் காட்சியின் உள்ளே பாண் துண்டுகள் நிறைந்து காணப்பட்டன.

தொலைக் காட்சிப் பெட்டிக்குள் பாண் துண்டுகளா? எப்படி வந்தது? எலிகளின் பணியாகக் கூட இருக்கலாம். ஆனால் எலி எப்படி அந்தத் தொலைக் காட்சிப் பெட்டியின் பின்புறத்தில் இருக்கும் சிறு துவாரத்தின் வழியாக...! சற்றுச் சிந்தித்தார். அது தனது மகனின் வேலையாகத்தானிருக்கும் என்று எண்ணி அவனையும் கூடவே மனைவியையும் அழைத்தார். அவரும் மனைவியும் அவனை அன்போடு அணைத்தவாறே அது பற்றி அவனிடம் கேட்டனர்.

அவர்கள் அது பற்றிக் கேட்டதும் அவன் மிரண்டுபோனான். சற்று மௌனமாக இருந்தவனோடு அவர்கள் அன்பாகப் பேசினர். அவனது அந்தச் செயற்பாட்டுக்குப் பின்னால் ஏதோ ஒன்று இருப்பதாக அவர்கள் உணர்ந்தனர். சில நிமிடங்களில் அவன் பேசத் தொடங்கினான்.

அவனது தந்தையார் தினமும் தொலைக்காட்சியில் செய்திகளைப் பார்க்கும்போது அவனும் கூட இருப்பது வழக்கம். அதிலே சோமாலிய தேசத்துச் செய்திகள் வரும். அதிலே உணவின்றிப் பட்டினியால் வாடும் குழந்தைகள் பற்றி ஐ.நா வின் அறிவிப்பு காணொளியாகக் காண்பிக்கப்படும்.

அவ்வாறு ஒரு நாள் அவன் பார்த்து காட்சி அவனுள் பாரிய தாக்கதை ஏற்படுத்திவிட்டது. உணவின்றி நலிந்த சிறார்கள் பற்றியதே அந்தக் காணொளிச் செய்தி. அதற்குத் தான் ஏதாவது செய்தாக வேண்டும் என்று அவன் விரும்பினான். அன்று தொட்டுத் தினமும் அவன் தொலைக்காட்சியின் பின் புறத்தில் உள்ள சிறு துவாரத்தின் வழியாகப் பாண் துண்டுகளை இடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தான். தான் இடும் பாண் துண்டுகள் அச் சிறுவர்களைப் போய் சேரும் என்று அவன் நம்பினான்.

அந்த நம்பிக்கை வழியாகவே அவன் அந்தப் பாண் துண்டுகளைத் தொடர்ந்து தொலைக்காட்சிப் பெட்டிக்குள் இடலானான். அப்படித் தொலைக்காட்சிக்குள் சேர்ந்ததே அந்தப் பாண்துண்டுகள்.

அச் சிறுவனின் விளக்கத்தைக் கேட்ட அவனது பெற்றோர்கள் பிரமித்துப் போனார்கள். அவன் செய்கை அவர்களைச் சிந்திக்க வைத்தது. அவன் கொண்டிருக்கும் மனித நேயப் பண்பைப் பற்றி எண்ணி அவர்கள் பெருமைப்பட்டனர். அவனைப் பாராட்டினார்கள்.

இவ்வாறு அக் கணொளியில் அக் 



காட்சிகள் பதிவாகியிருந்தன. சிறுவர்களிடைய காணப்படும் மனித நேயப் பண்பை விளக்க இதைவிடச் சிறந்தொரு திரைத் துணுக்கைத் தயாரிக்க முடியுமா என்பது கேள்விக்குரிய விடயம். சிறுவர்கள் எப்படி இந்த உலகத்தையும், தாம் சார்ந்த சூழலையும், தொழில் நுட்பத்தையும், அது சார்ந்த விடயங்களையும் புரிந்து கொள்கிறார்கள் என்பதற்கு இது ஒரு சான்று.

எனவே ஒரு சமூகம் நலமான சமூகமாக, வளமான சமூகமாக வரவேண்டும் எனில் நல்ல விடயங்களைச் சிறுவர்களிடமிருந்து ஆரம்பிக்க வேண்டும். அவர்களுக்குரிய கல்வி அத்தகையதாக வடிவமைக்கப்படுவது அவசியம். அதையே பின்லாந்து நாட்டின் கல்விமுறை எமக்கு உணர்த்துகிறது.

"காணும் சக மாந்தரிடையே கொள்ளும் நேசமொன்றே போதும் தேசம் அன்பில் மீளும்.." என்ற வரிகள் தரும் அர்த்தம்..!!!

# இந்தவார ராசிபலன் 04.12.2022 - 10.12.2022

**நல்ல நேரம்: 7.30 - 9.00   ராகு காலம் : 04.30 - 06.00   திதி : துவாதசி**

**டிசெம்பர் 04 ஞாயிற்றுக்கிழமை**
**சுபகிருது வருடம் - கார்த்திகை 18**

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

விருப்பங்கள் நிறைவேறும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். எதிர்பார்த்த வரவுகள் வந்தாலும் செலவு அதிகரிக்கும். ஆன்மிகத்தில் மனம் செல்லும். கோயில்களுக்கு சென்று வருவீர்கள். அரசு விஷயங்களில் கவனம் தேவை. தொழிலை விரிவு செய்யும் முயற்சியில் சிலர் ஈடுபடுவர்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

எதிர்பாராத செலவு ஏற்படும். தொழிலில் முன்னேற்றம், விரும்பியதை வாங்கும் நிலை உண்டாகும். முயற்சிக்கேற்ற பலன்களை இந்த வாரம் அடைவீர்கள். இதுவரை இருந்த பிரச்னைகளை இல்லாமல் செய்வீர்கள். சங்கடங்கள் இல்லாமல் போகும். திருமண முயற்சி நிறைவேறும். விஜபிகளின் ஆதரவால் விருப்பம் நிறைவேறும். எதிரி தொல்லை நீங்கும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

எதிர்பார்த்த நன்மைகளை அடைவீர்கள். வேலையில் இருந்த நெருக்கடிகள் விலகும். சிலருக்கு புதிய வேலை அமையும். செலவில் கவனம் தேவை.அணுகுமுறையில் மாற்றம் உண்டாகும். எதிர்பார்த்தவற்றை அடைவதற்காக கடுமையாக போராடுவீர்கள். புதிய தொழில் தொடங்கும் முயற்சி வெற்றி பெறும். திறமை வெளிப்படும். வரவுகள் அதிகரிக்கும். சொத்து சேர்க்கை உண்டு. செயல்களில் கவனம் தேவை.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

மனதில் நினைத்து செயல்படுங்கள். ஈடுபடும் செயல்கள் வெற்றியாகும். எதிர்பார்த்த வரவுகள் வந்து சேரும். சிலருக்கு திருமண யோகம் கூடி வரும். மகிழ்ச்சி அதிகரிக்கும். சிலருக்கு புதிய வேலை வாய்ப்பு அமையும். எதிர்பார்த்தவற்றில் சாதகமான நிலை உண்டாகும். பொருளாதார நிலை உயரும். நினைத்ததை சாதித்து மகிழும் வாரம் இது. செல்வாக்கு உயரும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

கவனமும் எச்சரிக்கையும் தேவைப்படும். நெருக்கடி விலகும். அரசு வழி ஆதாயம் காண்பீர்கள். தடுமாற்றம் உண்டாகலாம். தேவையற்ற பிரச்னைகள் தோன்றலாம். உங்கள் எண்ணம் பலிதமாகும். சிந்தித்து செயல்படுவதும். நிதானத்தைக் கடைபிடிப்பதும் நன்மை தரும். முயற்சிகள் நிறைவேறும். தேவைக்கேற்ற வருமானம் வரும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

முயற்சி வெற்றியாகும். எதிர்பார்ப்பு நிறைவேறும். வீட்டில் சுபநிகழ்ச்சிகளுக்கு வாய்ப்புண்டாகும். செயல்களில் கவனம் தேவை. யோகமான வாரமாகும். அரசு வழியில் நன்மை ஏற்படும். முயற்சிகளில் தடைகளும் தாமதமும் உண்டாகும். மற்றவர்கள் மதிப்பிற்கு ஆளாவீர்கள். நிதானம் அவசியம். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

உங்கள் முயற்சிகள் நிறைவேறும். வியாபாரத்தில் தடைகள், குடும்பத்தில் குழப்பம் விலகும். எதிர்பார்த்த வரவு வந்து சேரும். நிதானம் அவசியம். செயல்கள் வெற்றியாகும். உங்களையும் அறியாமல் சில சிக்கல்களில் சிக்குவீர்கள். நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. எண்ணம் நிறைவேறும். துணிச்சலுடன் செயல்பட்டு நினைத்ததை அடைவீர்கள். அதன்பின் நிதானம் தேவை.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

துணிவுடன் செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். தொழிலில் உண்டான பிரச்னைகளை எதிர்கொண்டு ஆதாயம் காண்பீர்கள். உங்கள் வழியில் சென்று நினைத்ததில் வெற்றி பெறுவீர்கள். செல்வாக்கு உயரும். பணவரவும் கிடைக்கும். புதிய சொத்து வாங்கும் முயற்சி நிறைவேறும். சுபநிகழ்ச்சிகள் நடைபெறும். எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். எதிரிகள் விலகிச் செல்வர்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

உங்கள் எதிர்பார்ப்பு ஏமாற்றமாகும். எதிர்பார்த்த லாபத்தை அடைவீர்கள். சிலருக்கு இட மாற்றம் ஊர் மாற்றம் ஏற்படும். உங்கள் ஆசைகள் நிறைவேறும். முயற்சிகள் வெற்றி பெறும். செலவுகள் அதிகரிக்கும். பொன், பொருள் சேர்க்கை உண்டாகும். எண்ணியதை நிறைவேற்றி முடிப்பீர்கள். பணியாளர்கள் வேறு இடங்களுக்கு மாறுதல் செய்யப்படுவர்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

மனம் மகிழும்படியான சம்பவம் நடந்தேறும். அலைச்சல் அதிகரிக்கும். சிலர் வெளியூர் செல்வர். எண்ணம் நிறைவேறும். துணிச்சலாக செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். அரசு வழியில் எதிர்பார்ப்பு நிறைவேறும். அந்நியர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தினர் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். உங்கள் எண்ணமும் செயலும் ஒன்றாகும். வரவு அதிகரிக்கும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

விருப்பம் நிறைவேறும். செயல்களில் வேகம் இருக்கும். திட்டமிட்டு செயல்பட்டு லாபம் காண்பீர்கள். ஆரோக்கியத்தில் பின்னடைவு ஏற்படும். செல்வாக்கு அதிகரிக்கும். தொழிலில் இருந்த தடைகள் விலகி பணவரவு தாராளமாகும். பொன் பொருள் வாங்கி மகிழ்வீர்கள். வீட்டிற்குத் தேவையான நவீன பொருட்கள் வாங்குவீர்கள். எதிர்காலம் குறித்த சிந்திப்பீர்கள்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

விருப்பம் நிறைவேறும். மகிழ்ச்சி அதிகரிக்கும். குடும்பத்தினரால் நெருக்கடி தோன்றும். சிலருக்கு வீட்டை மாற்ற வேண்டிய நிலை ஏற்படும். எண்ணம் நிறைவேறும் வாரம் இது. புதிய முயற்சிகள் மேற்கொள்வீர்கள். பிள்ளைகளின் திருமணம், புதிய வீடு கட்டுதல் என்று உங்கள் சிந்தனை செல்லும். குடும்பத்தில் எதிர்பாராத பிரச்னைகள் தோன்றக்கூடும். செயல்களில் தெளிவு உண்டாகும். தம்பதிக்குள் கருத்து மோதல் வரலாம் என்பதால் கவனம் தேவை.

# ஆட்சியில் தொடரும் நகர்வுகளில் பா. ஜ. க.!



சென்னை மடல்
-பகவான் சிங்-

இலங்கையைச் சுற்றிக்கொண்டிருக்கும் எல்லா பிரச்னைகளையும் ஈழத்தில் உள்ள அறிவுஜீவிகளிடமே தற்போதைக்கு விட்டுவிடுவோம். இந்த ஞாயிறன்று, உலகின் மற்ற இடங்களில் நிகழும் நிகழ்வுகள் குறித்துச் சற்று பார்ப்போம். பிரதமர் நரேந்திர மோடியின் சொந்த மாநிலம் குஜராத்தில் நடைபெறும் சட்டமன்றத் தேர்தலை எடுத்துக்கொள்வோம். கடந்த சில வாரங்களாக அவர் குஜராத்தில் அதிக நேரம் செலவழித்து வந்திருக்கிறார். அங்கு இன்னோர் ஐந்தாண்டு காலத்திற்குத் தங்கள் கட்சிக்கு ஆட்சிப்பொறுப்பை வழங்கவேண்டிய அவசியத்தை மக்களுக்கு உணர்த்தும் பணியில் ஈடுபட்டிருந்தார்.

2017இல் நடந்த தேர்தலில் மொத்த 182 இடங்களில் 99 இடங்களில் மட்டுமே வென்று ஆட்சியில் அமர்ந்த காவிக் கட்சி, இம்முறை இன்னும் அதிக வாக்கு வித்தியாசத்தில் பெரிய வெற்றியைப்பெற்று, தொடர்ந்து ஏழாவது முறையாக ஆட்சியைக் கைப்பற்றும் நம்பிக்கையில் உள்ளது. காங்கிரஸ் கட்சியின் ராகுல் காந்தியை ஒப்பிடும்போது, மாபெரும் மக்கள் செல்வாக்கைப் பெற்றுள்ள தலைவர் மோடியின் பேச்சுத் திறமையும், குஜராத்தில் அவர் செய்துவரும் தொடர் பிரச்சாரமும் பாரதிய ஜனதா கட்சிக்குச் சிறந்த வெற்றியைப் பெற்றுத் தரும் என்று பரவலாகக் கருதப்படுகிறது.

அவரது படைத் தளபதியும் இந்தியாவின் சக்தி வாய்ந்த உள்துறை அமைச்சருமான அமித் ஷாவும் தீவிரமாகப் பிரச்சாரம் மேற்கொண்டு ஆதரவு திரட்டினார். மோடி-ஷா அணி, தாங்கள் மண்ணின் மைந்தர்கள் என்ற அம்சத்தை முன்வைத்துப் பிரச்சாரம் செய்தனர். தங்களை எதிர்க்கும் காங்கிரஸ் கட்சியையும் அண்டை மாநிலமான பஞ்சாப் மற்றும் யூனியன் பிரதேசமான டில்லி ஆகிய இடங்களில் ஆட்சி செலுத்திவரும் ஆம் ஆத்மி கட்சியையும் அந்நியர்கள் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. இந்த குஜராத் தேர்தல் முடிவுகளும் 2023இல் நடக்கவிருக்கும் சில மாநில சட்டமன்றத் தேர்தல் முடிவுகளும் 2024 நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளுக்கான கட்டியமாக இருக்கும் என்று கருதப்படுகிறது.

2014இல் நாட்டின் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்படும் வரை, தொடர்ந்து பன்னிரண்டரை ஆண்டுகள் குஜராத் முதல்வர் பதவியில் இருந்து சரித்திரச் சாதனை படைத்தவர் மோடி. 2019இல் அதைவிட அதிக இடங்களைப் பெற்று மாபெரும் வெற்றி பெற்றார். காங்கிரஸ் மற்றும் பிற எதிர்க்

## சர்வதேச வளங்களையும், இந்துமாகடல் பிராந்தியத்தையும் வசப்படுத்த முயலும் சீனா

கட்சிகளுக்கு, மத்தியில் ஆட்சி அமைக்கும் வலிமையோ அரசியல் செல்வாக்கோ மக்கள் ஆதரவோ எதுவும் இல்லாத நிலையில், மூன்றாவது முறையாக 2024இல் பாஜக மீண்டும் ஆட்சியைப் பிடிக்கத் தயாராக உள்ளது.

இந்தமுறை குஜராத் தேர்தலிலும் 2024 நாடாளுமன்றத் தேர்தலிலும் பாஜக சிறப்பாகச் செயல்படும் என்று நான் கணிப்பதற்கு இன்னொரு காரணம், நாட்டின் பிரதமராக மட்டுமல்லாமல், சர்வதேச அளவில் ஒரு முக்கிய தலைவராகவும் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படுகிறார் மோடி. பாரத நாட்டை வலிமையான நாடாகக் கருத இவர் முயல்கிறார். உதாரணமாக, உக்ரேன் மீதான ரஷ்யத் தாக்குதல், சீன விரிவாக்க வாதம் போன்ற பல பிரச்னைகளை இந்தியா உறுதியாகக் கையாண்ட விதமும், மக்கள் மனதைக் கவர்ந்துள்ளன. இதற்கு மகுடம் வைத்தாற்போன்று, தற்போது ஜி-20 (19 நாடுகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம்) நாடுகளின் கூட்டமைப்புக்குத் தலைமைப்பொறுப்பை ஏற்கும் இந்தியாவின் தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட நிகழ்வு அமைந்துள்ளது. பசுமை ஆற்றல், தீவிரவாதம், பெருந்தொற்றுக்குப் பின்னான பொருளாதார மீட்சி போன்ற முக்கிய உலகளாவிய சிக்கல்களை எதிர்கொள்ள ஒன்றிணைந்து செயலாற்ற முனையும் ஒரு கூட்டமைப்பாகும் இது.

இந்தியாவைத் தவிர, ஆர்ஜென்டினா, அவுஸ்திரேலியா, பிரேசில், கனடா, சீனா, பிரான்ஸ், ஜெர்மனி, இந்தோனீஷியா, இத்தாலி, ஜப்பான், கொரியக் குடியரசு, மெக்சிகோ, ரஷ்யா, சவுதி அரேபியா, தென்னாபிரிக்கா, துருக்கி, இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை இந்த ஜி-20இல் இடம் பெற்றிருக்கின்றன.

நவம்பரில் பாலியில் நடந்த, கடந்த ஜி-20 கூட்டத்தின்போது, இந்தோனேஷியாவிடமிருந்து இந்தத் தலைமைப் பொறுப்பை இந்தியா ஏற்றது. டிசம்பர் 1 முதல் இந்தக் கூட்டமைப்பின் தலைவராக மோடி பொறுப்பேற்றார். ஜி-20 குறித்தும் இதன் தலைமைப் பொறுப்பு இந்தியாவிற்குக் கிடைத்திருப்பதன் முக்கியத்துவம் குறித்தும் விளக்க, டிசம்பர் ஐந்தாம் தேதியன்று அனைத்து மாநில முதல்வர்கள் கூட்டமொன்றுக்கும் அவர் அழைப்பு விடுத்துள்ளார். தமிழக முதல்வர் மு, க. ஸ்டாலின் இதில் பங்கேற்கவுள்ளார். தனது பங்கேற்பை உடனடியாகத் தெரிவித்த முதல்வர்களில், ஒரு காலத்தில் மோடிக்குப் போட்டியாகத் தன்னைக் கருதிய மம்தா பனர்ஜியும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

உலகை, குறிப்பாக, இலங்கைபோன்ற தீவு நாடுகளை, ஆர்க்டிக் பனிக்கட்டி உருகுவதால் அதிகரித்து வரும் கடல் மட்டத்தால் நாளடைவில்

## உக்ரேன் விவகாரம், சீன விரிவாக்கம் மோடியை உலக அரங்கில் நிறுத்துகிறது

மூழ்கிவிடாமல் தடுக்க, புதைபடிவ எரிபொருள் பயன்பாட்டைக் கட்டுப்படுத்துவது அவசியம். மின்சாரத்தில் இயங்கும் வாகனங்கள் குறித்து ஊடகங்கள் அதிகம் பேசிவருகின்றன. மின்சார வாகனங்கள் துறையில் ஜாம்பவனாக விளங்கும் டெஸ்லா நிறுவனம், அதிகரித்துவரும் சந்தையின் தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாத சூழல் நிலவுகிறது. இந்தக் குறையை நிவர்த்திசெய்யும் வாய்ப்பிருந்தும், சீனா தனது போல்ஸ்டார் காரை மேற்குலகச் சந்தையில் நுழையச்செய்யப் போராடுகிறது. இதற்குக் காரணம், வாங்குவோர் மத்தியில், ஷீ ஜின்பிங்கின் சர்வாதிகார ஆட்சி அணுகுமுறையும் கம்யூனிஸ்ட் சீனாவின் விரிவாக்கப் போக்கும்தான் என்று அண்மையில் ‘வாஷிங்டன் போஸ்ட்’ குறிப்பிட்டுள்ளது.

உறுப்பினர்களுக்கு இடையே ஒவ்வோர் ஆண்டும் பரிமாறிக்கொள்ளப்படும் ஜி-20 தலைமைப் பொறுப்பால் இந்தியா பெருமைப்பட்டுக்கொண்டிருக்கும் தருணத்தில், சீனா, தான் உருவாக்கிய, ‘இந்துமாகடல் பிராந்திய மன்றத்தின்’ முதல் கூட்டத்திற்கு இந்தியாவைத் தவிர்த்து, இப் பிராந்தியத்திலுள்ள 19 நாடுகளுக்கு அழைப்பு விடுத்தது. தென்மேற்கு மாகாணாமான யுன்னானில் உள்ள குன்மிங்கில் நவம்பர் 21 அன்று நடந்த இந்தக் கூட்டத்திற்கு, ஷீயின் நண்பர்களான இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டதும், அவை கலந்துகொண்டதும் குறிப்பிடத்தக்கது.

இந்தக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்திருந்த சீன சர்வதேச வளர்ச்சி ஒத்துழைப்பு அமைப்பான CIDCA வெளியிட்டிருந்த பங்கேற்பாளர்கள் பட்டியலில், அவுஸ்திரேலியா மற்றும் மாலைதீவு களின் பெயர்களும் இடம்பெற்றிருந்தன. ஆனால், பின்னர், இந்த இரு நாடுகளும் தங்கள் பங்கேற்பை மறுத்து அறிக்கை வெளியிட்டன. சீனர்கள் தந்திரமாக, மாலைதீவின் முன்னாள் அதிபர் முகமது வஹீத் ஹசன் மற்றும் அவுஸ்திரேலியாவின் முன்னாள் பிரதமர் கெவின் ரட் ஆகியோரைக் காணொலிமூலம் கலந்துகொள்ளச் செய்தனர். அந்த நாட்டு அரசுகள், அவர்கள், தனிப்பட்ட முறையில்தான் பங்கெடுத்துக் கொண்டார்கள் என்று விளக்கமளித்தன.

தனது கடன் வலையின்மூலம் இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம், ஆப்கானிஸ்தான் மற்றும் அநேக ஆபிரிக்க நாடுகள்போன்ற வளர்ச்சி அடையாத நாடுகளின் அரசுகளைப் பொம்மைகளாக ஆட்டிவைப்பது தவிர, நிலம், இயற்கை வளங்கள் போன்ற சர்வதேச வளங்களின் பெரும்பகுதியைத் தன் கட்டுப்பாட்டில் கொண்டுவர இந்த CIDCA-வை இலக்கை நோக்கிய ஒரு உத்தியாகப் பெருமளவில் பயன்படுத்த முனைகிறது சீனா.

இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் சீனாவின் முன்னாள் தூதராக இருந்த, முன்னாள் அயலுறவுத்துறைத் துணை அமைச்சர் லுவோ ஷ ாஹூய் CIDCA-வின் தலைவராக இருக்கி றார். இவர் பேச்சு வார்த்தைகளில் வல்லவர். இவரது முக்கிய கவனம் இந்துமாகடல் பகுதியில் சீன ஆதிக்கத்தை வலுப்படுத்துவதாகவே இருக்கும். இந்தப் பணியில் இலங்கையில் இவரது சகாவான க்வி ஜெனாங்க் சிறப்பாகப் பணியாற்றுகிறார். இலக்காக் கப்பட்ட இந்தச் சிறு நாடுகளின் வீழ்ச்சியடைந்த பொருளாதாரமும், ஊழல் அரசியல்வாதிகளும் லுவோ மற்றும் அவரது குழுவின் பணியை எளிதாக்கிவிட ஏதுவாகிறது.

இவ்வாண்டின் தொடக்கத்தில் இலங்கை சென்ற சீன அயலுறவுத் துறை அமைச்சர் வாங் யீ, இந்துமா கடல் பகுதியில் ஒருங்கிணைந்த ஆற்றலையும் ஒருமித்த கருத்தையும் உருவாக்கி, பொதுவான வளர்ச்சியை ஊக்குவிக்க, தீவு நாடுகளின் வளர்ச்சி குறித்த மற்றோர் அமைப்பை உருவாக்குவதுபற்றிப் பேசியிருந்தார். இந்த முன்னெடுப்பில் முக்கிய பங்களிக்க இலங்கையை வலியுறுத்தினார். அந்த நேரத்தில் வாங் யீ-யின் வார்த்தைகள் அந்தப் பிராந்தியத்தைத் தன் வசப்படுத்தும் சீனத் திட்டத்தைத் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டியதால், நான் அந்த நிகழ்வை இங்கு குறிப்பிடுகிறேன். குன்மிங்கில் அண்மையில் நடந்த கூட்டம், அந்தப் பெரிய புவிசார் அரசியல் உத்தியின் நீட்சியே ஆகும்.

இந்தக் குன்மிங் கூட்டத்துக்குப் பிறகு CIDCA வெளியிட்ட அறிக்கையில், இந்துமாகடல் பிராந்திய நாடுகளுடன் ‘கடல் சார் பேரழிவுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டுக்கான ஒத்துழைப்பு நடைமுறை’ ஒன்றை உருவாக்கவும் ‘தேவையான நாடுகளுக்குத் தேவையான நிதி, பொருள், தொழில்நுட்ப ஆதரவை’ அளிக்கவும் உறுதியளித்தது. சீனாவுக்கும் இந்துமாகடல் பிராந்திய நாடுகளுக்குமான ‘கடல்சார் பொருளாதாரச் சிந்தனையாளர்கள் வலையம்’ ஒன்றை உருவாக்கவும் முன்மொழிந்தது.

ஜி-20 நாடுகளின் கூட்டமைப்பில் முக்கிய பங்கு வகிக்கும் இந்தியா, சீனாவை எதிர்கொள்ளும் கொள்கையில் ஒரு பகுதியாக, அண்மையில், தன் படையினருக்கும் அமெரிக்கப் படையினருக்கும் சேர்த்து, இமய மலையில் சீன எல்லைக்கு அருகில் உள்ள அசல் கட்டுப்பாட்டுக் கோட்டுப் பகுதியில் கூட்டு இராணுவப் பயிற்சி நடத்தியது. இதற்கு வெளியான சீன எதிர்ப்பை இந்தியா உதறித் தள்ளியது. நாட்டின் வளர்ச்சியையும் மக்களின் நலனையும் நோக்கி, முயற்சிகளையும் திட்டங்களையும் அமைத்து, சீனா, இந்தியா அல்லது வேறு எந்தப் பெரிய நாட்டின் பிடியிலும் சிக்காமல், சுய முயற்சிகளுடன் முன்னேற வேண்டுமென்று என் ‘ஈழநாடு’ வாசகர்களுக்கு நான் பல முறை எழுதி வந்துள்ளேன். இதற்கு, ஈழத்திலும் வெளிநாடுகளிலும் வாழும் தமிழர்களும் பெரும்பான்மை சிங்களர்களும் ஒற்றுமையாகச் செயல்படுவது அவசியம். இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் உள்ள ‘13 ப்ளஸ்’ ஒரு சிறந்த தொடக்கப் புள்ளியாக இருக்கும் என்றும் நான் எழுதி வந்துள்ளேன். இப்போது, அதிபர் ரணில் விக்கிரமசிங்க அதை ஒரு சாத்தியமான தீர்வாகக் குறிப்பிடுவதாக நான் அறிகிறேன். நீண்ட காலமாகத் துன்பங்களை அனுபவித்துவிட்ட இலங்கை மக்களுக்கு நல்ல காலம் பிறக்க நான் இறைவனைப் பிரார்த்திக்கிறேன். இறையருள் உங்களுக்குக் கிட்டட்டும்.

மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

# பொருளாதார நெருக்கடி

# கல்வித்துறைக்கு ஏற்படுத்தும் பாதிப்புகள்!



♦ வீரகத்தி தனபாலசிங்கம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னாள் ஜனாதிபதிகளில் திருமதி குமாரதுங்கவுக்கு அடுத்ததாக அல்லது அவருக்கு இணையாக படிப்பிலும் வாசிப்பு அனுபவத்திலும் சர்வதேச விவகாரங்கள் பற்றிய அறிவிலும் கூடுதல் திறமையுடையவர் என்று அண்மையில் அரசியல் அவதானியொருவர் குறிப்பிட்டிருந்தார். எந்தவேளையிலும் எந்த விவகாரம் பற்றியும் பேச்கூடிய அளவுக்கு தகவல்களை அவர் விரல் நுனியில் வைத்திருப்பவர் என்றும் கூறப்படுகிறது. பாராளுமன்றத்தில் பேசும்போது “உங்களுக்கு என்ன தெரியும். நான் சொல்வதைக் கேளுங்கள்“ என்ற தோரணையில்தான் அவர் நடந்துகொள்வார்.

ஆனால், ஜனாதிபதி அண்மைக் காலமாக நிகழ்த்துகின்ற உரைகளில் இன்றைய நடைமுறைப் பிரச்சினைகளை - பொருளாதார இடர்பாடுகளை - ஓரளவுக்கேனும் தணிப்பதற்கான வழிவகைகளையோ யோசனைகளையே காணமுடியவில்லை. 2030 ஆண்டில் பொருளாதாரத்தை எந்த நிலைக்கு கொண்டுவரவேண்டும், சுதந்திரம் பெற்றதன் நூற்றாண்டு நிறைவு 2048 கொண்டாடப்படும்போது வளர்ச்சியடைந்த பொருளாதாரமாக இலங்கையை மாற்றுவதற்கு என்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றியே அவர் பெரும்பாலும் பேசுகிறார். அவரே கூறுவது போன்று தான் உயிருடன் இல்லாத காலத்தின் பொருளாதார வளர்ச்சி பற்றி



நீண்டகால நோக்கு அக்கறையு டன் யோசனைகளை முன்வைக் கிறார்.

இலங்கையை எமது பிராந்தியத்தின் “ பொருளாதார கேந்திர மையமாக” அபிவிருத்தி செய்வது குறித்து முன்னர் பேசிய ராஜபக்சாக்கள் நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டு வந்துவிட்டு போய்விட்டார்கள். விக்கிரமசிங்க பொருளாதார கேந்திர மையம் குறித்து பெரி தாக பேசுவதாக இல்லை. ஆனால், பாராளுமன்றத்தில் கடந்தவாரம் கல்வியமைச்சு மீதான வரவு - செலவுத்திட்ட நிதியொதுக்கீடு குழுநிலை விவாதத்தின்போது எமது நாட்டை பிராந்தியத்தின் “கல்வி கேந்திர மையமாக” மாற்றுவது குறித்து அவர் பேசியதைக் காணக்கூடியதாக இருந்தது.

உண்மையில், விக்கிரமசிங்க பொருளாதார நெருக்கடியின் விளைவாக இன்று நாட்டில் கல்விக்கு ஏற்பட்டிருக்கின்ற ஆபத்தைப் புரிந்துகொண்டவராகத்தான் பேசுகிறாரா என்று கேட்கவேண்டியிருக்கிறது. பெரும்பாலான பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் உணவுக்கும் கல்விக்கும் இடையில் எதை தெரிவுசெய்வது என்று தடுமாறிக்கொண்டிருக்கும் ஒரு நேரத்தில் அவர் இலங்கையில் சர்வதேச கல்வி நிறுவனங்களையும் பல்கலைக்கழகங்களையும் அமைப்பது குறித்து கனவு காண்கிறார்.

பிள்ளைகளுக்கு மூன்று வேளை ஒழுங்காக உணவையும் கொடுத்து, தேவையான சகல உபகரணங்களுடன் அவர்களை பாடசாலைக்கும் அனுப்பக்கூடிய நிலையில் பெரும்பாலான குடும்பங்கள் இன்று இல்லை. பிள்ளைகள் கல்வியை இடைநடுவில் கைவிடுவது இன்று ஒரு பெரிய பிரச்சினையாக உருவாகி வருகிறது.

பாராளுமன்ற விவாதத்தின்போது மாத்தளை மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. றோஹினி கவிரத்ன தெரிவித்த ஒரு விலைப்பட்டியலை நோக்குவது அவசியமாகும்.

80 பக்க அப்பியாசக் கொப்பி ஒன்று 200 ரூபா. சி.ஆர்.புத்தகம் 560 ரூபா. பென்சில் அல்லது குமிழ்முனை பேனை 40 ரூபா. கலர் பென்சில் பெட்டி 570 ரூபா. பசை ஒரு போத்தல் 150 ரூபா. பள்ளிக்கூட பை 4000 ரூபா. ஒரு சோடி சப்பாத்து 3500 ரூபா என்று விலைகளை பட்டியலிட்ட றோஹினி ஒரு தந்தை அன்றாடம் சம்பளத்துக்கு வேலை செய்பவராக இருந் தால் அவரின் சம்பளத்தின் கால்வாசி பிள்ளையின் கலர் பென்சில் பெட்டி வாங்கவே செலவாகிவிடும் என்றும் சுட்டிக்காட்டினார்.

பாடக்குறிப்புகளை எடுப்பதற்கு ஒரு 80 பக்க அப்பியாசக்கொப்பியை எத்தனை நாட்களுக்கு பயன்படுத்த முடியும் என்று கல்வியமைச்சருக்கு தெரியாதா என்று கேள்வியெழுப்பிய அவர் பாடசாலை காகிதாதிகள் மற்றும் உபகரணங்களுக்காக ஒரு பிள்ளைக்கு ஒரு மாதம் ஏறத்தாழ 25,000 - 30,000 ரூபா பெற்றோருக்கு தேவைப் படுகிறது என்று கூறினார்.

**புதுவருட தொடக்கத்தில் 30 சதவீதமான பிள்ளைகள் பாடசாலைக்கு போகாமல் விட்டால் அதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.**

நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி விக்கிரமசிங்க சமர்ப்பித்த 2023 வரவு - செலவுத்திட்டத்தில் கல்வித்துறைக்கு 23,200 கோடி ரூபா மாத்திரமே ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், நாட்டுக்கு எந்த பாதுகாப்பு பிரச்சினையும் இல்லாத ஒரு நேரத்தில் பாதுகாப்புக்கு 39,070 கோடி ரூபாவும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் வரும் பொதுப்பாதுகாப்புக்கு 1990 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பொதுப் பாதுகாப்புக்கு இவ்வாறு ஒதுக்கப்பட்ட போதிலும் பொலிஸ் திணைக்களத்துக்கு 12,920 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மொத்தமாக 2023 ஆம் ஆண்டுக்கான பாதுகாப்பு செல வினம் 53,920 கோடி ரூபாவாகும்.

கல்வித்துறைக்கு ஒதுக்கப்பட்ட 23,200 கோடி ரூபாவில் உயர்கல்விக்கு ஒதுக்கப்பட்ட தொகையை கழித்தால் பாடசாலைக் கல்விக்கு 17,630 கோடி ரூபாவே மிஞ்சும். இதில் ஆசிரியர்களின் சம்பளம் மற்றும் அதிகாரிகளுக்கான செலவினங்கள் போக மிகவும் சொற்பமான தொகையே பாடசாலைக் கல்வியின் ஏனைய முக்கிய செயற்பாடுகளுக்காக மிஞ்சப்போகிறது. நிலைவரம் இப்படியே போனால், தெற்காசியாவில் கல்விக்கு மிகவும் குறைந்த நிதியை ஒதுக்குகின்ற நாடாக இலங்கையே விரைவில் விளங்கும்.

ஒரு காலத்தில் ஆசியாவில் படிப்பறிவில் ஜப்பானுக்கு அடுத்ததாக இரண்டாவது இடத்தில் இருந்த இலங்கையில் இன்று கல்வித்துறைக்கு அரசாங்கம் கொடுக்கின்ற முக்கியத்துவத்தின் இலட்சணம் இவ்வாறாக இருக்கிறது.

இது இவ்வாறிருக்க, பொருளாதார நெருக்கடி காரணமாக இடைநடுவில் கல்வியை கைவிடும் மாணவர்களின் பிரச்சினைக்கு வருவோம்.

அடுத்த வருட தொடக்கத்தில் 30 சதவீதத்துக்கும் அதிகமான பிள்ளைகள் பாடசாலை கல்வியை இடைநடுவில் கைவிட்டால் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை என்று மூத்த அரசியல் ஆய்வாளரும் சிவில் சமூக செயற்பாட்டாளருமான குசல் பெரேரா அண்மையில் “சர்வதேச நாணய நிதியத்துடனான சீர்திருத்தங்கள் பல ஆயிரக்கணக்கான பிள்ளைகள் கல்வியைக் கைவிட வழிவகுக்கும்” என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையொன்றில் குறிப்பிட்டிருந்தார்.

35 சதவீதமான குடும்பங்கள் இரு வேளை உணவைக்கூட பெறமுடியாத நிலையில் தங்கள் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதில் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குவதாக செப்டெம்பர் இறுதியில் மேற்கொள்ளப்பட்ட கள ஆய்வுகளை மேற்கோள் காட்டி அவர் தெரிவித்தார்.

“2023 வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னதாகவே பொருட்களின் விலைகள் வானளாவ உயர்ந்துவிட்டன. அவற்றைக் குறைக்க அரசாங்கத்திடம் மாற்றுத்திட்டம் ஒன்று இல்லாததால் பெருமளவு பிள்ளைகளுக்கு பாடசாலைக்கு போகாமல் விடுவதைத் தவிர வேறு வழி இல்லாத நிலை. தற்போது பாடசாலைக்கு செல்லும் பிள்ளைகளின் தொகை சுமார் 41 இலட்சம் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

இவர்களில் சுமார் 14 இலட்சம் பேரின் கல்விக்கான உரிமை, சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை ஜனாதிபதி விக்கிரமசிங்க நடைமுறைப் படுத்துவதன் நேரடி விளைவாக பறிக்கப் படப்போகிறது.





“வரவு - செலவுத்திட்டம் தயாரிக்கப்படுவதற்கு முன்னதாகவே நாணய நிதியத்தின் நிபந்தனைகளின் பிரகாரம் பொருளாதாரத்தை மறுசீரமைக்கும் நடவடிக்கைகளை விக்கிரமசிங்க ஆரம்பித்துவிட்டார். நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு இணங்க ஒரு புறம் வரிகள் அதிகரிக்கப்படுவதுடன் புதிய வரிகளும் அறிமுகப்படுத்தப்படுகின்றன. இந்த வரிகள் சந்தை விநியோகத்தில் பல மட்டங்களில் விலைகளை கடுமையாக அதிகரித்திருக்கின்றன.

(09 ஆம் பக்கம் பார்க்க...)

# தேசமாக கோரிக்கை முன்வைப்பதென்றால் என்ன?

**அரசியல் அறிவோம் - 1**

**யதீந்திரா**

தேசமாக கோரிக்கைகளை முன்வைக்க வேண்டுமென்று கூறகின்றார்களே - அப்படியென்றால் என்ன? நண்பர்கள் கேட்கின்றனர். இதற்கு பதிலாகவும், அதேவேளை சமகாலத்தை எதிர்கொள்ளுவது தொடர்பிலும், சில விடயங்களை, அவ்வப்போது, இந்த தலைப்பில் பகிர்ந்துகொள்ளலாமென்று, எண்ணுகின்றேன்.

தேசமாக சிந்தியுங்கள், தேசமாக கோரிக்கைகளை முன்வையுங்களென்று அவ்வப்போது சில அரசியல் நண்பர்கள் கூறுகின்றனர். ஆனால் அவ்வாறு கூறுபவர்கள் தேசமாக எதனை முன்வைக்க வேண்டுமென்று தெளிவாக கூறுவதில்லை. இதுதான் தமிழ் அரசியல் சூழலிலுள்ள பிரதான பிரச்சினை. முதலில் தேசமாக சிந்தியுங்கள் - தேசமாக கோரிக்கையை முன்வையுங்களென்னும் கோரிக்கையை பார்ப்போம். இது தேசம், தேசியம் தொடர்பான பரந்த கண்ணோட்டத்திலிருந்தும், அதற்கான கோட்பாட்டு பின்புலத்திலிருந்தும் முன்வைக்கப்படவில்லை. ஏனெனில் 2009இற்கு முன்னரான தமிழ் தேசியவாத அரசியலானது, ஆயுதபலத்தின் வழியாக நோக்கப்பட்டது. ஆயுதமே அன்றைய தேசியவாதத்தை நிர்ணயம் செய்தது. 2009இற்கு பின்னரான அரசியல் சூழல் முற்றிலும் வேறானது. தலைகீழானதென்றும் கூறலாம். ஏனெனில் தமிழர் அரசியலானது, செல்வநாயகம், அமிர்தலிங்கம் காலத்து, மிதவாத அரசியலுக்கே மீளவும் திரும்பியிருக்கின்றது. ஒப்பீட்டளவில் அன்றிருந்த மிதவாத அரசியலோடு கூட ஒப்பிட முடியாதளவிற்கு தலைமைத்துவம் பலவீனமடைந்திருக்கின்றது.

இந்த நிலையில்தான், தேசமாக கோரிக்கைகளை முன்வையுங்களென்று சிலர் கூறுகின்றனர். இங்கு தேசமென்பதன் மூலம், அனைவரும் ஓரணியாக விடயங்களை முன்வையுங்களென்றே நண்பர்கள் கூறமுற்படுகின்றனர். மற்றும்படி இது இன்றைய உலக ஒழுங்கில் தேசியவாதம், தேசம் என்பவற்றில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களை கருத்தில் கொண்டு முன்வைக்கப்படவில்லை.

ஓரணியாக, ஒரு குரலில் கோரிக்கைகளை முன்வைக்க வேண்டுமென்று கூறுவதில் எனக்கும் உடன்பாடுதான். நானும் இதனை தொடர்சியாக கூறிவந்திருக்கின்றேன். நாங்கள் வெறுமனே, கோரிக்கைகளை மட்டும் முன்வைக்கவில்லை - மாறாக, ஒரு ஐக்கிய முன்னணியை ஏற்படுத்தும் முயற்சிகளிலும் ஈடுபட்டவர்கள். ஆனால் அந்த முயற்சி வெற்றியளிக்கவில்லை. வேடிக்கையென்வென்றால், என்னைப் போன்றவர்கள், இந்த முயற்சியில் ஈடுபட்டபோது, இப்போது 24கரட் தேசியம் பேசிக்கொண்டிருப்பவர்கள் எவரும் அந்தப் பக்கம்கூட வரவில்லை.

போனதை விடுவோம். ஆனால் இங்குள்ள கேள்வி ஓரணியாக (அதாவது, தேசமாக) எதனை முன்வைப்பது? தேசமாக கோரிக்கை முன்வையுங்களென்று கூறுபவர்கள் எதனை முன் வைக்க வேண்டுமென்று தெளிவாக கூறுவதில்லை. **(18 ஆம் பக்கம் பார்க்க...)**

# பொருளாதார நெருக்கடி...

**(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)**

“பாடசாலை உபகரணங்களின் விலைகள் கடுமையாக அதிகரித்துவிட்டன. வரும் நாட்களில் மேலும் அதிகரிக்கக்கூடிய சாத்தியம் இருக்கிறது. பிரபல அரசாங்கப் பாடசாலைகளுக்கும் தனியார் கம்பனிகளினால் இலாபநோக்கில் நடத்தப்படும் சர்வதேச பாடசாலகளுக்கும் பிள்ளைகளை அனுப்பும் வசதிபடைத்த குடும்பங்கள் இந்த விலை உயர்வுகளின் கொடுமையை உணரப் போவதில்லை. நாடு பூராவும் இருக்கும் 10,150 அரசாங்க பாடசாலைகளில் க.பொ.த. சாதாரணதரம் வரை வகுப்புக்களைக் கொண்ட 3,204 பாடசாலைகளுக்கு பிள்ளைகளை அனுப்பும் பெற்றோர்களினால் சுமையை தாங்கமுடியாமல் போகும்.

“புதுவருடத்தில் ஒரு பிள்ளையை பாடசாலைக்கு அனுப்புவதற்கு இந்த குடும்பங்கள் 15,000 ரூபாவுக்கும் அதிகமான பணத்தை தேடவேண்டியிருக்கும். அவர்களில் பெரும்பாலான குடும்பங்களுக்கு அது சாத்தியமில்லை. பிள்ளைகள் பாடசாலைக்கு போகாமல் விடுவதைத் தவிர வேறு மார்க்கமில்லை. அதனால் அடுத்த வருடம் பாடசாலையை இடைநடுவில் கைவிடும் பிள்ளைகளின் தொகை அதிகரிக்கும் ஆபத்து இருக்கிறது” என்று பெரேரா கூறுகிறார்.



**மலையக பிள்ளைகளின் நிலை**

தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இலங்கையின் ஏனைய சகல சமூகங்களையும் விட மிகவும் கூடுதலாக பாதிக்கப்பட்டிருப்பவர்கள் மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களே.

கொவிட் -19 பெருந்தொற்று நோய் காலகட்டத்தில் ஏற்பட்ட தொழில் இழப்புகள், ஊதியக் குறைப்பினாலும் கூட அவர்களே கூடுதலாக பாதிக்கப்பட்டார்கள். அதில் இருந்து ஓரளவேனும் விடுபடுவதற்கு முன்னர் தற்போதைய நெருக்கடி வந்து தோட்டத் தொழிலாளர்களை பெரும் சமூக - பொருளாதார இடருக்குள்ளாக்கியிருக்கிறது.

இலங்கை சிறுவர்கள் இன்று சத்துணவுப் பற்றாக்குறையினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களில் தோட்டத்தொழிலாளர் சமூகத்தின் சிறார்களே அதனால் மிகவும் கூடுதலாக பாதிக்கப்படுபவர்களாக இருப்பார்கள் என்பதை சொல்லத்தேவையில்லை. அந்த சிறுவர்களின் கல்வியும் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது.

கல்வியை இடையில் நிறுத்தும் பெருந்தோட்ட பகுதி சிறுவர்களின் எண்ணிக்கை கடுமையாக அதிகரித்திருக்கிறது என்று ஆய்வுகள் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது. பெற்றோரின் வருமானம் வாழ்க்கைச் செலவுக்கு அறவே போதாமல் இருப்பதால் பிள்ளைகளும் ஏதாவது சம்பாத்தியத்தை தேடுவதற்காக கல்வியை இடையில் நிறுத்தும் போக்கு அதிகரித்திருக்கிறது என்று கொள்கை ஆய்வு நிறுவனம் கூறுகிறது.

பாடசாலைக்கு செல்லும் வயதில் உள்ள பிள்ளைகள் தொழில் வாய்ப்பை தேடுவதற்காக படிப்பை இடையில் நிறுத்துவதை தடுக்க தோட்டப்பகுதிகளில் வயது வந்தவர்களின் சம்பாதிக்கும் ஆற்றலை விரிவுபடுத்த புதிய செயற்திட்டங்களை அறிமுகப்படுத்துவதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தவேண்டும் என்று அந்த நிறுவனம் யோசனை கூறியிருக்கிறது.

பெருந்தோட்டப் பகுதிகளில் வயது வந்தவர்களின் வருமான மூலங்களை - ஆதாரங்களை அதிகரிப்பதற்கு “விசேட செயற்திட்டங்கள்” நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்று அந்த பொருளாதார நிபுணர்கள் அமைப்பின் ஆய்வு அறிக்கை கோரிக்கை விடுத்திருக்கிறது. இவ்வாறு செய்வதன் மூலமாக பொருளாதார நடவடிக்கைகளில் கவனம் செலுத்துவதை தவிர்த்து படிப்பில் கவனம் செலுத்துவதற்கு பிள்ளைகளை ஊக்கப்படுத்தமுடியும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பெருந்தோட்டப் பகுதிகளின் சிறுவர்கள் எதிர்நோக்கும் இடர்பாடுகள் குறித்தே இந்த நிறுவனம் ஆய்வை மேற்கொண்டது. பாடசாலைக்கு செல்லாமல் கல்வியை இடைநிறுத்தும் பிள்ளைகளின் எண்ணிக்கையில் ஏற்பட்டிருக்கும் கடுமையான அதிகரிப்பை தடுத்து நிறுத்துவதற்கான வழிவகைகளில் இந்த நிறுவனம் கவனம் செலுத்தியது.



கொவிட் பெருந்தொற்று நோய் பரவுவதற்கு முன்னதாகவே ஆரம்ப பாடசாலை, இரண்டாம் நிலைக் கல்வி, கல்லூரிக்கல்வி என்ற மூன்று மட்டங்களிலும் தோட்டப்பகுதிகளில் கல்வியை இடை நிறுத்தும் பிள்ளைகளின் வீதத்தில் கடும் அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. கல்வி மட்டங்களின் உயர்வுடன் சமாந்தரமாக கல்வியை இடை நிறுத்தும் பிள்ளைகளின் சதவீதமும் அதிகரிக்கிறது. அதாவது ஆரம்பக்கல்வியை இடைநிறுத்துபவர்களை விடவும் இரண்டாம் நிலை மற்றும் கல்லூரி மட்டங்களில் கல்வியை இடைநிறுத்து பவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது.

தோட்டப்பகுதிகளில் ஆரம்ப பாடசாலைகளில் கல்வியை இடைநிறுத்துபவர்கள் 4 சதவீதமாகவும் இரண்டாம் நிலை பாடசாலைகளில் அது 20 சதவீதமாகவும் கல்லூரி மட்டத்தில் அது 26 சதவீதமாகவும் இருக்கின்றது. இதற்கு மாறாக, நகர்ப்புற மற்றும் கிராமப் பகுதிகளில் இந்த வீதங்கள் மிகவும் குறைவானவையாக இருக்கின்றன.

கொவிட் பெருந்தொற்று நோய் பரவலுக்குப் பிறகு தோட்டப்பகுதி சிறுவர்களினால் எதிர்நோக்கப்பட்ட நிதி நெருக்கடிகளே பாடசாலைகளுக்கு போகாமல் கல்வியை அவர்களில் கணிசமானவர்கள் இடைநிறுத்துவதற்கு பிரதான காரணம். தற்போதைய பொருளாதார நெருக்கடி அவர்களின் அவலங்களை மேலும் அதிகரித்திருக்கிறது. அதனால் அவர்கள் குடும்பத்தின் அடிப்படைத் தேவைகளை சமாளிக்க பெற்றோர்களின் வருமானத்துக்கு புறம்பாக சம்பாத்தியத்தை தேடுவதற்கு பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.

நிலைவரத்தில் மேம்பாட்டை ஏற்படுத்த தோட்டப்பகுதிகளில் வயது வந்தவர்கள் கூடுதல் வருமானத்தை பெறுவதற்கு வசதியாக வழிவகைகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். அதேவேளை பாடசாலைகளில் இலவச உணவுத் திட்டத்தை தொடருவதற்கு உறுதியான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். இது தோட்டப்பகுதிகளில் சிறுவர்கள் தொழிலில் ஈடுபடுவதை தடுப்பதற்கு சாத்தியமான தீர்வாக அமையும் என்று கொள்கை ஆய்வுகள் நிறுவனம் தெரிவித்திருக்கிறது.

உணவைப் பெறுவதற்கு பெரும் கஷ்டப்படும் பல தோட்டப்பகுதி சிறுவர்கள் வருமானம் ஒன்றை தேடுவதற்காகவே பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.

பாடசாலைகள் மூடப்பட்டிருந்த காலப்பகுதியில் இணையவழி மூலமான வகுப்புக்களில் பங்கேற்க முடியாமல் போன தோட்டப்பகுதி மாணவர்களில் பலரும் கல்வியை இடைநிறுத்தி பாடசாலைக்கு போகாமல் விடுகிறார்கள் என்றும் கண்டறியப்பட்டுள்ளது. இத்தகைய மாணவர்கள் தாங்கள் இழந்த பாடங்களை மீண்டும் கற்றுக்கொள்ள வசதியாக விசேட ஏற்பாடுகள் செய்யப்படவேண்டியதும் அவசியம். இதன் மூலமாக அவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டக்கூடிய சூழ்நிலையை உருவாக்கமுடியும்.

ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளில் விதந்துரைக்கப்பட்டவாறு “பூச்சிய சிறுவர் தொழிலாளர்” இலக்கை 2025 ஆண்டில் அடைவதற்கு இலங்கை உறுதிபூண்டுள்ளது. சிறுவர்கள் தொழிலில் ஈடுபடுவதை ஒழிப்பதன் மூலம் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு கல்வியை இடைநிறுத்தும் சிறுவர்களின் எண்ணிக்கையையும் குறைக்கமுடியும்.

ஆனால், கொவிட் பெருந்தொற்று பரவலை அடுத்து தோன்றிய சூழ்நிலைகளுடன் தற்போதைய பொருளாதார நெருக்கடியும் சேர்ந்து 2025 பூச்சிய சிறுவர் தொழிலாளர் இலக்கை அடையும் முயற்சிகளை முன்னரை விடவும் கூடுதல் சவாலுக்குள்ளாகியிருக்கின்றன. நீண்ட காலமாக பாடசாலைகள் மூடப்படுவதற்கு வழிவகுத்த பெருந்தொற்று நோய் பரவலுக்கு பிறகே பெருந்தோட்டப்பகுதிகளில் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடும் சிறுவர்களின் எண்ணிக்கை கணிசமானளவு அதிகரித்தது என்பதை சான்றுகள் உறுதிப்படுத்துவதாக கொள்கை ஆய்வு நிறுவனம் கூறியிருக்கிறது.

# தமிழரை மீண்டும் எத்திப் பிழைக்க

## பேச்சுவார்த்தை பொறிக்கிடங்கு!

**பனங்காட்டான்**

மாகாண சபை, மாவட்ட அபிவிருத்திச் சபை, உள்ளூராட்சிச் சபை, நாடாளுமன்றம், ஜனாதிபதி என்பவற்றுக்கான தெரிவுமுறை அல்லது தேர்தல்கள் என்பவை இலங்கையின் அரசமைப்பு நிர்வாகத்துக்குள் இப்போது அதிகம் பேசப்படுபவை.

தமிழரின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்ற அல்லது இனப்பிரச்சனைக்கு சகல தரப்பினரும்; இணங்கும் தீர்வுகாண மேற்சொன்ன ஐந்து அடுக்கு நிர்வாக கட்டமைப்புகளுக்குள் ஏதாவது ஒன்று நியாயமானதாக செயற்படுகிறதா என்ற கேள்வியுடன் தமிழினம் விழி பிதுங்கி நிற்கிறது.

தமிழ்த் தேசிய தலைமைகள் என்று கூறப்படுபவை தங்களுக்குள் ஒன்றுபட்டு சரியான தீர்வு எதுவென்று கூடி முடிவெடுக்காத வரைக்கும், சிங்கள தேசத்துக்கு காலத்தை இழுத்தடிப்பதற்கான நல்ல வாய்ப்புண்டு.

எதிர்வரும் பெப்ரவரி 4ம் திகதியான இலங்கையின் சுதந்திர தினத்துக்கு முன்னர் தமிழர் பிரச்சனைக்கு ஏதோவொரு தீர்வு காணப்போவதாக ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். இதற்கு சிங்களத் தரப்பிலிருந்து நாட்டைக் கூறுபோடும் திட்டமெனவும் தமிழருக்கு தனி நாடு அமைக்கும் வாய்ப்பு எனவும் சில குரல்கள் எழுந்துள்ளன.

சிங்கள பௌத்தம் என்ற இனவாதத்தை மீண்டும் கிளர்ந்தெழச் செய்ய எடுக்கப்படும் முயற்சி இது என்பதைச் சொல்லத் தேவையில்லை. இந்தச் சூழலில்தான் மாவட்ட அபிவிருத்திச் சபை என்ற குரல் மீண்டும் எழும்ப ஆரம்பித்துள்ளது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் வந்த 13வது திருத்தமே மாகாண சபைகள் உருவாகக் காரணம். கடந்த 35 ஆண்டுகளில் வடமாகாண சபை ஐந்து ஆண்டுகள் மட்டுமே இயங்க முடிந்தது. ஆனால் மற்றைய எட்டு மாகாணங்களிலும் மாகாண சபை நிர்வாகம் தடங்கலின்றி முப்பதாண்டுகள் இடம்பெற்றது.

புதிய தேர்தல் சட்டம் நிறைவேறிய பின்னரே மீண்டும் மாகாண சபைகளுக்குத் தேர்தல் என்பது ஓரளவுக்கு உறுதியாகிவிட்டது. அதேசமயம் மாகாண சபைகளுக்கான உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கு தேர்தல் நடைபெறுமா என்பது கேள்விக்குறியாகியுள்ளது.

மாகாண சபை உறுப்பினர்களை அந்தந்த மாகாணங்களிலுள்ள உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்களைக் கொண்டு இயங்க வைக்கும் யோசனை ஒன்றை ரணில் சில வாரங்களுக்கு முன்னர் தெரிவித்ததை பலரும் மறந்துவிட்டது போலத் தெரிகிறது. இதற்கு இயைவாக, தற்போது எண்ணாயிரமாக இலங்கை முழுவதும் உள்ள உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை நாலாயிரமாக்க - அதாவது ஐம்பது வீதத்தினால் குறைக்கும் உத்தேசத்தையும் ரணில் தெரிவித்திருந்ததை நினைவுக்குட்படுத்தப்பட வேண்டியுள்ளது.

இவ்விடயத்தில் இறுதியாக வெளிவந்துள்ள அறிவிப்பே, மாவட்ட அபிவிருத்திச் சபைகள் என்பது. நாடாளுமன்ற உரையின்போது இதனை முன்மொழிந்தவர் தற்போது எம்.பியாகவிருக்கும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. உடனடியாக, இந்த யோசனையைத் தாம் ஏற்றுக் கொள்வதாக அறிவித்தார் இப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

மாகாண சபைகளுக்குப் பதிலாக மாவட்ட அபிவிருத்திச் சபைகளா? ஒன்பது மாகாண சபைகளுக்குப் பதிலாக இருபத்தைந்து மாவட்ட அபிவிருத்திச் சபைகளா? அப்படியானால் மீண்டும் மாவட்ட அமைச்சர்கள் நியமனமா? இப்படியான கேள்விகள் அங்குமிங்கும் எழும்பியுள்ளன.

"இல்லையில்லை. அப்படியாக ஜனாதிபதி சொல்லவில்லை. மாகாண சபை கட்டமைப்புக்குள் மாவட்ட அபிவிருத்திக் குழுக்களை அமைக்கலாம் என்றுதான் சொல்லப்பட்டது" என அலறியடித்துக் கொண்டு ஜனாதிபதி அலுவலகம் ஒரு அறிக்கையை வெளியிட்டு நிலைமையைச் சமாளிக்க முயன்றது.

மைத்திரி என்ன சொன்னார், ரணில் என்ன கருதினார், அல்லது இவர்கள் இருவரும் ஏற்கனவே இதுபற்றி என்ன திட்டம் உருவாக்கினார்கள் என்பது அவர்களுக்குத்தான் வெளிச்சம். ஆனால் ஒரு விடயம் மட்டும் அம்பலத்துக்கு வந்துவிட்டது. ஏதோவொரு வகையில் இலங்கை அரசின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டதாக மாவட்ட ரீதியாக அபிவிருத்திச் சபைகளை உருவாக்க எங்கோ முடிவெடுக்கப்பட்டு விட்டது.

இதனை எழுதும்வரை மாவட்ட அபிவிருத்திச் சபைகள் உருவாகுவது தொடர்பாக தமிழ் தேசிய கூட்டமைப்பு எதனையும் தெரிவிக்கவில்லை. ஆனால், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முக்கியமான ஒரு விடயத்தை பகிரங்கப்படுத்தி அரசியல் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளார்.

கடந்த மே மாதம் 12ம் திகதி பிரதமர் பதவி ஏற்பதற்கு முதல் நாள் ரணில் விக்கிரமசிங்க தம்மை அழைத்து இனப்பிரச்சனை பற்றி பேசியதாகவும், தீர்வு சமஷ்டி அடிப்படையில் அமைய வேண்டுமென்று தாம் வலியுறுத்தியதாகவும், அது நடைமுறைக்குச் சாத்தியமில்லையென கூறிய ரணில் மாவட்ட அபிவிருத்திச் சபைகள் பற்றியே கூறியதாகவும் கஜேந்திரகுமார் இப்போது தெரிவித்துள்ளார்.

அத்துடன் மாவட்ட அபிவிருத்திச் சபை யோசனை தம்முடையதல்லவென்றும், மைத்திரிபால சிறிசேன கூறியதை பரிசீலிக்கத் தயார் என்றே தாம் கூறியதாகவும் ரணில் விக்கிரமசிங்க இப்போது கூறுவது அப்பட்டமான பொய் என்றும் கஜேந்திரகுமார் அழுத்திக் கூறியுள்ளார்.

ஆறு மாதங்களுக்கு முன்னர் ரணில் கூறிய மாவட்ட அபிவிருத்திச் சபை விடயத்தை இதுவரை காலமும் கஜேந்திரகுமார் எதற்காக வெளியில் தெரிவிக்காது மறைத்து வைத்திருந்தார் என்ற கேள்வி இங்கே அவரது பதிலுக்காக முன்வைக்கப்படுகிறது.

ரணிலும் தமிழ் தேசிய கூட்டமைப்பும் சேர்ந்து சமஷ்டி என்று கூறிக் கொண்டு ஒற்றை ஆட்சிக்குள் தமிழ் மக்களை முடக்க சதி செய்கின்றனர் என்று குற்றஞ்சாட்டும் கஜேந்திரகுமார், அதன் பின்னணியில் மாவட்ட அபிவிருத்திச் சபை இருக்கிறது என்பதை ரணில் வாயால் அறிந்து கொண்டும் இதுவரை மறைத்து வைத்திருந்ததிலும் ஏதோவொரு திட்டம் இருப்பதாகவே தெரிகிறது.

மாவட்ட அபிவிருத்திச் சபை என்ற விவகாரத்தை அணுகுவதென்றால், ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஆட்சிக் காலத்துக்கு நாம் செல்ல வேண்டும். 1977ல் இவரது தலைமையில் ஐக்கிய தேசிய கட்சி அமோக வெற்றி பெற்று ஆட்சி அமைத்தது. வடக்கு கிழக்கில் தமிழர் விடுதலை கூட்டணி பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றியதால் அ.அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவரானார். சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான சிறிலங்கா சுதந்திர கட்சி படுதோல்வி அடைந்ததால் தமிழர் விடுதலை கூட்டணிக்கு இந்தக் 'குருட்டு நல்வாய்ப்பு' கிடைத்தது.

**ஒரு மேசையும் கதிரையும் வாங்கக்கூட அதிகாரமில்லாத மாவட்ட அபிவிருத்தி சபையின் தலைவராக இருந்து பயனில்லை என்று கூறி 1983ல் பதவி துறந்தவர் அன்றைய தமிழர் விடுதலை கூட்டணியின் சு.நடராஜா. நாற்பது வருடங்களின் பின்னர் அதே மாவட்ட அபிவிருத்தி சபையை தமிழர் பிரச்சனைக்கான தீர்வாக தலையில் கட்டிவிடவா தமிழர் தரப்புடன் ரணில் விக்கிரசிங்க பேசத் துடிக்கிறார். அப்படியானால் 13வது திருத்தத்துக்கும் மாகாண சபை முறைமைக்கும் முடிவு வருகிறதா?**

1977ல் பிரதமராகி 1978ல் ஜனாதிபதியான ஜே.ஆர்., தமிழர் விடுதலை கூட்டணியுடன் இதுவரை வெளியில் தெரியவராத ஏதோ ஒரு அடிப்படையில் அவர்களை மாவட்ட அபிவிருத்தி சபைக்கு இணங்க வைத்தது. 1977 தேர்தலில் கூட்டணி தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்தே அமோக வெற்றி பெற்றதாயினும் ஜே.ஆரின் வலைக்குள் சிக்கி மாவட்ட அபிவிருத்தி சபை தேர்தலில் போட்டியிட்டது.

1981ல் இடம்பெற்ற யாழ்ப்பாணம் மாவட்ட சபைத் தேர்தலில், இதனைக் கைப்பற்றிய கூட்டணியின் வேட்பாளரான 'பொட்டர்' என அழைக்கப்பட்ட முன்னாள் செனட்டர் சு.நடராஜா தலைவரானார். ஆனால், 1983ல் இப்பதவியை அவர் துறந்தார். தமது அலுவலகத்துக்கு தேவையான மேசையும் கதிரையும் வாங்குவதற்குக் கூட அதிகாரமில்லாத மாவட்ட சபைத் தலைவர் பதவி தேவையில்லையென்று தமது பதவி விலகல் கடிதத்தில் அவர் தெரிவித்ததை இப்போது நினைவில் கொள்ள வேண்டியது அவசியம்.

இவ்வாறு அதிகாரங்கள் ஏதுமில்லாத - வெறும் பெயர்ப்பலகை மட்டும் கொண்ட மாவட்ட அபிவிருத்திச் சபையின் பிதாமகர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன. தமிழரின் கனவாக தேர்தல் காலத்திலிருந்த தனிநாடு என்ற உரிமைக் கோரிக்கையை மாவட்ட சபைக்குள் தள்ளி, கூட்டணியின் முதுகில் ஏறி சவாரி செய்தவர் இவர். 1983ன் பின்னர் வட்டமேசை மகாநாடு என்று கூறி கூட்டணியினரை ஏமாற்றி அதில் சுவை கண்டவர் ஜே.ஆர்.

இவரது அரசியல் வாரிசும், பெறாமகனுமான ரணில் விக்கிரமசிங்க அதே மாவட்ட அபிவிருத்திச் சபையை தூசு தட்டி எடுத்து தங்கத்தட்டில் வைத்து தமிழருக்குக் கொடுக்க எத்தனிப்பது புதினமானதல்ல. ஜே.ஆர். அன்று அ.அமிர்தலிங்கம் தலைமையிலான கூட்டணியை எவ்வாறு ஏமாற்றி அரசியல் செய்தாரோ அதேபாணியில், இன்று சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்பை ரணில் ஏமாற்றுவது அப்பட்டமாகத் தெரிகிறது. இதனால்தான் சர்வதேசத்தின் பங்களிப்பு தமிழர் பிரச்சனைத் தீர்வுக்கு தேவையென்று சம்பந்தன் கோருகிறார் போலும்.

மாவட்ட அபிவிருத்திச் சபை யோசனை பற்றி ரணில் கூறியதாக கஜேந்திரகுமார் கூறியிருப்பது உண்மையானால், கூட்டமைப்பு அமைதி காக்காது தங்கள் நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டியது கட்டாயம்.

நாடாளுமன்றத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றுவதன் ஊடாக மாகாண சபை மற்றும் உள்ளூராட்சிச் சபைகளின் தேர்தல்கள் பின்போடப்படப் போவது நிச்சயமாகிவிட்டது. இந்த நிலையில் தமிழர் தரப்பை பேச்சுக்கு வருமாறு அழைத்துள்ள ரணில், இதற்கு முன் நிபந்தனை எதனையும் அவர்கள் வைக்கக் கூடாதென்று அறிவித்துள்ளதை கவனிக்க வேண்டும்.

ஏற்கனவே சிங்களத் தலைவர்களுடன் - முக்கியமாக ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தபோது விடுதலைப் புலிகள் வெளிநாடுகளில் ஆறு சுற்றுப் பேச்சுகள் நடத்தி தோல்வி கண்ட வரலாறு உண்டு. அதற்கு முன்னரும் பல பேச்சுவார்த்தைகள், ஒப்பந்தங்கள் வழியாக ஏமாற்று அனுபவம் பெற்றவர்கள் தமிழர் தரப்பு.

இதனால் இப்போது பேச்சுவார்த்தைக்கு மூன்று முக்கியமான அம்சங்களை தங்கள் கோரிக்கையாக தமிழர் தரப்பு முன்வைத்திருப்பதில் என்ன தவறு? இதனை முன்நிபந்தனையாகப் பார்க்காது பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டிருக்கும் தரப்பினரின் நிகழ்ச்சி நிரலாகவே அழைப்பவர்கள் பார்க்க வேண்டும்.

மேசையில் ஒரு நிகழ்ச்சி நிரல் இல்லாது எந்தக் கூட்டத்தையும் நேர்த்தியாக ஆரம்பிக்க முடியாது, நிறைவேற்றவும் முடியாது. சர்வதேசத்தின் பார்வைக்கு தமிழர் தரப்புடன் நேரடியாக பேசுவதாகக் காட்ட மட்டுமே தேவையென்றால் அதற்கு நிகழ்ச்சி நிரல் தேவையில்லை. ஆனால் தமிழர் தரப்பு இம்முறையாவது ஒரு தீர்வு காணப்பட வேண்டுமென்ற விருப்பின் அடிப்படையில், ஆகக்குறைந்த - நிறைவேற்றப்படக்கூடியதான மூன்று கோரிக்கைகளை பேச்சுவார்த்தை மேசையில் வைத்துள்ளது. அவ்வளவுதான்!

பேச்சுவார்த்தைக்கான நிகழ்ச்சி நிரலைக் கண்டே கலக்கமடையும் ஜனாதிபதி ரணில் ஆத்மசுத்தியாக பேச்சுவார்த்தையை முன்னெடுப்பார், புரையோடிப்போன இனப்பிரச்சனைக்கு தீர்வு காணுவார் என்று எவ்வாறு நம்புவது?

தமிழரை எத்திப் பிழைத்து தமது சிம்மாசனக் கதிரையை இறுகப் பற்றவே பேச்சுவார்த்தையை அதற்கான உபாயமாக ரணில் பயன்படுத்துகிறார் என்றால், தமிழர் தரப்பு அதனைத் தெரிந்து கொண்டும் அந்தப் பொறிக்கிடங்குள் வீழ்ந்துவிடாதிருக்க தயாராக வேண்டும்.

# சமஷ்டி

## பேசத் தயாராகிறது கூட்டமைப்பு நாடகம் என்கிறது காங்கிரஸ்!



- மாலினி அஜந்தன்




சமஷ்டித் தீர்வு சாத்தியமில்லை என்று, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இவ்வார ஆரம்பத்தில் கொழும்பில் நடாத்திய செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்திருந்தார். அத்துடன் மாவட்ட அபிவிருத்திச் சபைகள் குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னதாகவே தமது தனிப்பட்ட சந்திப்பில் பிரஸ்தாபித்திருந்தாகவும், இது விடயம் தொடர்பில் தாம் ஏற்கனவே தெளிவுபடுத்தியிருந்ததாகவும் குறிப்பிட்டிருந்தார்.

அண்மையில் நாடாளுமன்றில் பேசிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வரும் சுதந்திர தினத்திற்கு முன்பாக தமிழர் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்றும், தமிழ்த் தரப்போடு பேசுவதற்குத் தாம் தயாராக இருப்பதாகவும் தெரிவித்து தமிழ்த் தேசியப் பரப்பில் செயற்படும் அமைப்புக்களை நோக்கிய அழைப்பொன்றை விடுத்திருந்த விடயம் உங்களுக்குத் தெரிந்திருக்கும்.

இதன்தொடர்ச்சியாக தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் செயற்பட்டு வரும் கட்சிகளில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தவிர்ந்த, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் கூட்டணி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆகிய கட்சிகள் இணைந்து கொழும்பில் சந்திப்பொன்றை நடாத்தியிருந்தன. தொடர்ந்து இது தொடர்பான கலந்துரையாடல்களை நடாத்தவும் அன்றைய சந்திப்பில் கலந்து கொண்டிருந்த கட்சிகள் இணக்கம் வெளியிட்டிருந்தன.

இந்நிலையில்தான் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரையும் இது குறித்த பேச்சுக்களில் பங்கேற்றுக் கொள்ள செய்யும் நோக்கில், தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவால், முன்னணியினரை நோக்கிய அழைப்பொன்றும் விடுக்கப்பட்டிருந்தது. இந்த அழைப்புக்களின் பின்னர் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடாத்தியிருந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், "தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா என்னுடன் தொலைபேசியூடாகத் தொடர்புகொண்டு கதைத்தார். நீங்கள் எங்களுக்கு அழைப்பு விடுக்காமல் மற்றத் தரப்புக்களுடன் கூடிக் கதைத்து ஒரு நிலைப்பாட்டை வெளிப்படுத்தி இருக்கிறீர்கள். மூன்று விடயங்களை வலியுறுத்தி நீங்கள் பேசப் போவதாக முடிவெடுத்து அதனை அறிவித்து விட்டு, அதற்குப் பிறகு ஒரு பொதுநிலைப்பாடு தொடர் பில் எங்களோடு பேசுவதென்பது நாடகம். நாங்கள் இனிமேல் அந்த விடயம் தொடர்பாக கதைப்பதற்குத் தயாராக இல்லை" எனத் தெரிவித்திருந்தார்.

அத்துடன் "ஆகக்குறைந்தது தமிழ் மக்களுடைய இனப்பிரச்சினை சம்பந்தமாக, ஒற்றையாட்சிக்குள் இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட மாட்டாது என்கிற உத்தரவாதத்தைப் பெற்று தமிழ்த் தேசத்தை அங்கீகரிக்கின்ற ஒரு சமஷ்டி தீர்வின் அடிப்படையில் மட்டும்தான் அமையும் என்ற உத்தரவாதத்தைப் பெற்று அந்த உத்தரவாதத்தை வைத்துக் கொண்டு சிங்கள மக்கள் மத்தியிலும் இந்த விடயத்தை மிகவும் வெளிப்படைத்தன்மையாகக் கூறி அதை உறுதிப்படுத்தாமல் பேச்சுவார்த்தை மேசையில் அமருவது தமிழ் மக்களுடைய அரசியல் நிலைமையக் கேவலப்படுத்துகின்ற ஒரு விடயம் மட்டுமாகத்தான் அமையும்" என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இதனையடுத்து பல்வேறு தரப்புக்களின் மத்தியிலும் கஜேந்திரகுமார் தரப்பின் கருத்துக்கள் தொடர்பான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றது. இது குறித்துக் கருத்து வெளியிட்ட தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் கொள்கைப் பரப்புச் செயலாளர் க.அருந்தவபாலன், "எந்தப் பிரச்சினைகளுக்கும் பேச்சுவார்த்தை மூலமே தீர்வுகாண முடியும். அப்படித்தான் தீர்வு காண வேண்டும். ஆனால் முன்னர் பல்வேறு சந்தர்ப்பங்களில் எங்களுக்குள்ள அனுபவங்களை வைத்துக் கொண்டு, நாங்கள் முன்னெச்சரிக்கையுடன் சிந்தித்து பேச வேண்டும். குறிப்பாக பேச்சுவார்த்தை மேசைக்கு ஒற்றுமையாகச் செல்ல வேண்டும். பேச்சுவார்த்தைகளின் போது முன் நிபந்தனை விதிப்பது என்பது அந்தப் பேச்சுவார்த்தையின் தோல்விக்கு வழிகோலும். ஏனெனில் முன்வைக்கப்படும் நிபந்தனை என்பதை நிறைவேற்றாமல் எப்படிப் பேசுவது? இதனால் நாம் பேச வேண்டிய சந்தர்ப்பத்தை இழக்கவும் நேரிடும்.

கடந்த வாரத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகளின் சந்திப்பில் மூன்று கோரிக்கைகளையும் வலியுறுத்திப் பேசவேண்டும் என்று கூறப்பட்டதே தவிர அவை நிபந்தனைகள் அல்ல. பேசக்கிடைக்கின்ற சந்தர்ப்பங்களை வீணடித்துவிடாமல் சந்தர்ப்பங்களைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும். நல்லிணக்கமாக அனைத்துக் கட்சிகளும் இணைந்து பேசுவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்" எனக் குறிப்பிட்டார். தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள தமிழ் மக்கள் தேசிய முன்னணி தவிர்ந்த ஏனைய கட்சிகளின் நிலைப்பாடுகளும் இதுவே.

இருப்பினும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் மாவட்ட அபிவிருத்தி சபை குறித்த விடயத்தை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமராவதற்கு முதல்நாளே தம்முடன் தனிப்படப் பேசியதான விடயத்தை இப்போது வெளிப்படுத்தியிருக்கிறார்.

இது குறித்து அக்கட்சியின் பேச்சாளரிடம் வினவியபோது, ரணில் ஜனாதிபதியாவதற்கு முன்னதாக தனக்கு ஆதரவு தரவேண்டும் என்று தமது கட்சியுடன் பேசியிருந்ததாகவும், அப்போது சமஷ்டித் தீர்வு வழங்குவது குறித்தான சிந்தனை இல்லையெனில், ஒருபோதும் தம்மால் ஆதரவு தரமுடியாதென தமது கட்சி தெரிவித்திருந்ததாவும் அவர் குறிப்பிட்டிருந்தார். அத்துடன் இது தொடர்பாக ரணிலுக்கு



ஆதரவு வழங்க மாட்டோம் என்று அறிவிப்பை மறு நாளே தான் வெளியிட்டிருந்ததாகவும், அதன்போது மாவட்ட அபிவிருத்தி சபை குறித்த ரணிலின் கருத்துத் தொடர்பிலும் தான் வெளிப்படுத்தியிருந்ததாகவும் அக்கட்சியின் ஊடகப் பேச்சாளர் எமக்குத் தெரிவித்தார்.

மேலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், இடைக்கால வரைபை வைத்துப் பேசுவோம் என நாடாளுமன்றில் கருத்து தெரிவித்திருப்பதாகக் குறிப்பிட்ட அவர், அந்த இடைக்கால வரைபில் இருப்பது ஒற்றையாட்சி என்றும், அதனால் நாம் அவர்களின் நாடகத்தில் இணைய முடியாது என்றும் தெரிவித்தார்.

"அவர்கள் சமஷ்டி என்று கேட்பது தமிழ் மக்களை ஏமாற்றவே. இவர்கள் சமஷ்டியே கேட்கவில்லை. இவர்கள் இடைக்கால வரைபையே கேட்கிறார்கள். ஏக்கிய ராஜ்ஜிய யாப்பை ஏற்பதான வழிநடத்தல் குழுவின் தலைவராக இருந்து அதில் கையொப்பமிட்டிருப்பவர் சித்தார்த்தன்.

பௌத்த மதத்திற்கு முன்னுரிமை கொடுக்கும் இடைக்கால வரைபில் கையெழுத்திட்டிருப்பவர் இரா.சம்பந்தன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமிழ் மக்களுக்கும், தென்னிலங்கைக்கும், சர்வதேசதத்திற்கும் வெள்வேறு முகங்களைக் காட்டிக்கொண்டு இருக்கின்றனர். இவர்களுடைய நாடகத்தில் இணைந்து தமிழ் மக்களுக்குத் துரோகமிழைக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்நிலையில், சமஷ்டி தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தந்திரோபாயமான செயற்றிட்ட நகர்வுகள் குறித்து எழுப்பப்பட்ட வினாவிற்குப் பதிலளித்த அவர், "தந்திரோபாயத்தின் உச்சபட்ச நிபந்தனையே இப்போது நாம் முன்வைக்கும் சமஷ்டி குறித்துப் பேசினால் மாத்திரமே பேச்சுவார்த்தைக்கு வருவோம் என்ற எமது நிலைப்பாடு. சமஷ்டித் தீர்வே வேண்டும் என்ற தமது கட்சியின் வலியுறுத்தல். அதன் முதலாவது கட்டமே ஜனாதிபதித் தெரிவின்போது நாம் யாருக்கும் ஆதரவு இல்லை என வெளியேறியது. இந்த நேரத்தில் எல்லோருமே ஒரு பொறிக்குள் சிக்கியுள்ளார்கள். நாம் சொல்கிறோம் சமஷ்டி பற்றிப் பேசினால் மாத்திரமே நாம் வருவோம் என்று. ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கு ஒரு பிரச்சினை இருக்கிறது. சமஷ்டி குறித்து இவர்கள் பேசாமல் பேச்சுவார்த்தைக்குச் சென்றால் இவர்களின் உள்வீட்டு நாடகங்கள் வெளியே தெரியும் நாள் தொலைவிலில்லை" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அரசுடனான இப்போதைய அழைப்பின் பின்னரான பேச்சுவார்த்தைக்காக, தமிழ்த் தேசியக் கட்சிகளின் தயார்ப்படுத்தல்களின் வரிசையில் நிகழ்த்தப்பட்ட கொழும்பில் இடம்பெற்றிருந்த முதலாவது சந்திப்பில், "நில அபகரிப்பு நிறுத்தப்பட்டு அபகரிக்கப்பட்ட நிலங்கள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும், அதிகாரப் பகிர்வு சம்பந்தமான அரசமைப்பு மற்றும் சட்டங்களை நடைமுறைப்படுத்தி மாகாண சபைத் தேர்தல்கள் உடனடியாக நடாத்தப்பட வேண்டும், உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் தமிழ் மக்கள் சரித்திர ரீதியான வாழ்ந்துவந்த வடக்கு, கிழக்கு பிரதேசத்தில் சமஷ்டி அடிப்படையில் அதியுச்ச அதிகாரப் பகிர்வுடனான தீர்வை வழங்கும் வகையில், புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும்" போன்ற கோரிக்கைகளை அரசாங்கத்திடம் வலியுறுத்தவுள்ளதாகத் தெரிவித்திருந்த விடயமும் இங்கு சுட்டிக் காட்டத்தக்கது.

மக்கள் வாக்களித்த கட்சிகளின் நிலைப்பாடுகள், எஞ்சியுள்ள மக்களை யாவது காக்குமா? என்ற கேள்வியும் இப்போது பலரிடம் எழாமலில்லை.




திரைவிமர்சனம்

**திரைப்படம் - கட்டா குஸ்தி**
**இயக்கம் - செல்லா அய்யாவு**
**இசை - ஜஸ்டின் பிரபாகரன்**
**நடிப்பு - விஷ்ணு விஷால், ஐஸ்வர்ய லெட்சுமி, கருணாஸ்**

ஆண்களுக்குப் பெண்கள் சிறிதும் சளைத்த வர்கள் அல்ல என்பதுதான் இந்தப் படத்தின் கரு. இந்த ஒரு விஷயத்திற்காகவே பெண் முன்னேற்றத்திற்கான படமாக இந்தப் படத்தைக் கொண்டாடலாம்.

இரண்டரை மணி நேர படத்தை கலகலப்பாகவும் சொல்ல வேண்டும், உணர்ச்சிகரமாகவும் சொல்ல வேண்டும், அதே சமயம் ஒரு நல்ல கருத்தைப் பதியவும் வைக்க வேண்டும் என அனைத்தையும் சேர்த்து ஒரு சிறப்பான படத்தைக் கொடுத்திருக்கிறார் இயக்குநர் செல்ல அய்யாவு.

பொள்ளாச்சியில் 20 ஏக்கர் விவசாய நிலத்துக்கு சொந்தமானவர், அதிகம் படிக்காதவர் விஷ்ணு விஷால். திருமணத்துக்காகப் பெண் பார்த்துக் கொண்டிருக்கிறார். வரப்போகும் மனைவி தன்னை விட குறைவாகப் படித்திருக்க வேண்டும், நீளமான தலை முடி இருக்க வேண்டும் என்பது அவருடைய நிபந்தனை. பக்கத்து கேரள நகரமான பாலக்காட்டில் "கட்டா குஸ்தி" வீராங்கனையான, கல்லூரி படித்த வரான, குறைவான தலைமுடி கொண்டவரான ஐஸ் வர்ய லெட்சுமியை பொய் சொல்லி அவருக்குத் திரும ணம் செய்து வைத்துவிடுகிறார்கள். மாமா கருணாஸ் ஆலோசனைப்படி மனைவியை தன் கட்டுப்பாட்டுக்குள்ளேயே வைத்திருக்க நினைக்கிறார் விஷ்ணு. இடைவேளையின் போது மனைவி பற்றிய அனைத்து உண்மைகளும் அவருக்குத் தெரிய வருகிறது. அதன்பின் என்ன என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

சமீப காலத்தில் வந்த படங்களில் சரியான இடை வேளை காட்சி இந்தப் படத்தில் அமைந்துள்ளது. விஜய், அஜித் படங்களுக்கு நிகராக திரையரங்குகளில் அதைக் கைத்தட்டி ரசிக்கிறார்கள் ரசிகர்கள். கதாநாயகிக்கும் அதிக முக்கியத்துவம் உள்ள ஒரு கதையைத் தேர்வு செய்து அதைத் தயாரித்து கதாநாயகனாக நடிப்பதற்கும் ஒரு பெரிய மனது வேண்டும். அந்த மனதே விஷ்ணுவுக்கு இந்தப் படத்தை வெற்றிப் படமாகக் கொடுத்துவிடும். படிக்காத கிராமத்து இளைஞராக, மாமா பேச்சைக் கேட்பவராக, மனைவியை அடக்கி ஆள வேண்டும் என்று நினைப்பவராக வீரா கதாபாத்திரத்தில் தன்னை அப்படியே ஐக்கியமாக்கிக் கொண்டுள்ளார் விஷ்ணு விஷால்.

"பொன்னியின் செல்வன்" படத்தில் பூங்குழலி கதாபாத்திரத்தில் நடித்து ரசிகர்களைக் கவர்ந்தவர் ஐஸ்வர்ய லெட்சுமி. "கட்டா குஸ்தி" வீராங்கனையாக படத்தில் அதிரடி காட்டியுள்ளார். ஆணின் தோற்றத்தில் ஆரம்பத்தில் இருப்பவர் திருமணத்துக்காக நீள தலை முடி, புடவை என மாறும் போது அவரா இவர் என ஆச்சரியப்பட வைக்கிறார். அவர் பற்றி விஷ்ணு எப்போது உண்மையைத் தெரிந்து கொள்ளப் போகிறார் என்ற எதிர்பார்ப்பு நம்மிடம் ஏற்படுகிறது. அந்த எதிர்பார்ப்பை சரியானதோர் இடைவேளை காட்சியில் அதிரடியாகக் காட்டியிருக்கிறார் இயக்குநர். அந்தக் காட்சியில் ஐஸ்வர்யாவின் சண்டை அதிரடியோ அதிரடி.

விஷ்ணு விஷாலின் மாமாவாக கருணாஸ். மனைவியரை கணவன்மார்கள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும் என்ற பிற்போக்கான குணம் கொண்டவர். அதை எப்படியெல்லாம் செய்ய வேண்டும் என விஷ்ணுவுக்கு சொல்லிக் கொண்டே இருக்கிறார். அப்படிப்பட்டவருக்கு ஐஸ்வர்யா தனது "கையால்" ஒரு பாடம் எடுக்கிறார். அதுவே, படத்தின் திருப்பு முனையாக அமைகிறது.

விஷ்ணுவின் வழக்கறிஞர் நண்பனாக காளி வெங்கட், ஐஸ்வர்யாவின் சித்தப்பாக முனிஷ்காந்த் அவரவர் கதாபாத்திரங்களில் நிறைவாக நடித்திருக்கிறார்கள். ரெடின் கிங்ஸ்லி சில காட்சிகளில் வந்தாலும் சிரிக்க வைக்கிறார். திருமண பந்தத்தின் அர்த்தத்தை சரியாக விளங்க வைக்கிறார் பயிற்றுநராக வரும் ஹரிஷ் பெராடி.

வில்லன்கள் அஜய், சத்ரு இருவரும் சில காட்சிகளில் வந்தாலும் "குத்து"பட்டு ஓடுகிறார்கள்.



ஜஸ்டின் பிரபாகரன் இசையில் மலையாள ஸ்டைலில் அமைந்துள்ள திருமணப் பாடல் ரசிக்க வைக்கிறது. பின்னணி இசையிலும் கலக்கியிருக்கிறார்.

முதல் பாதியில் கலகலப்பாக நகரும் படம், இடை வேளைக்குப் பிறகு உணர்ச்சிப் பக்கம் போய்விடுகிறது. பெண்களை உயர்வாகச் சொல்லி, அவர்களை உத்வேகப்படுத்தும் ஒரு படம். சாதிக்க நினைக்கும் ஒவ்வொரு பெண்களும் பார்க்க வேண்டிய படம்.

# காஜலுக்காக இணைந்த எழுவர்



குலேபகாவலி, ஜாக்பாட் போன்ற படங்களை இயக்கியவர் கல்யாண். இவர் தற்போது காஜல் அகர் வால் முக்கிய வேடத்தில் நடித்துள்ள கோஷ்டி என்ற படத்தை இயக்கியிருக்கிறார்.

இயக்குநர் கே . எஸ். ரவிக்குமார், யோகி பாபு, ரெடின் லிங்ஸ்லி , மொட்டை ராஜேந்திரன் உள்பட பலர் முக்கிய வேடங்களில் நடித்திருக்கிறார்கள். சாம் சி.எஸ் இசையமைத்துள்ளார்.

தற்போது இப்படத்தில் இடம் பெற் றுள்ள விடுங்கடா விடுங்கடா என்ற பாடலை வெளியிட்டுள்ளார்கள். விவேக் எழுதியுள்ள இந்த பாடலை சந்தோஷ் நாராயணன், விவேக் - மெர்வின், பிரேம்ஜி, லியோன் ஜேம்ஸ், சாம் சிஎஸ், நிவாஸ் கே பிரசன்னா உள்ளிட்ட 7 இசையமைப்பாளர்களுடன் சத்ய பிரகாஷ், குணா ஆகியோரும் இணைந்து பின்னணி பாடியுள்ளார்கள்.

# 5 மொழிகளில் ஷ்ரத்தா படம்



விக்ரம் வேதா, மாறா உள்ளிட்ட பல படங்களில் நடித்து தமிழ் திரையுலகின் பிரபல நடிகையாக வலம் வருபவர் ஷ்ரத்தா ஸ்ரீநாத். இவர் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி உள்ளிட்ட மொழி படங்களிலும் நடித்து பிரபலமடைந்தார்.

இவர் தற்போது அறிமுக இயக்குநர் தீபக் இயக்கியுள்ள "விட்னஸ்" படத்தில் நடித்துள் ளார். தூய்மைப் பணியாளர்களின் வாழ்க் கையை மையமாகக் கொண்டு உருவாகிய இந்தப் படத்தின் ட்ரைலர் சமீபத்தில் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றது.

இந்தப் படம் எதிர்வரும் 9ஆம் திகதி தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்தி என்று 5 மொழிகளில் வெளியாக வுள்ளது.

# விலகுகிறார் சாய் பல்லவி



நடிகை சாய் பல்லவி தமிழ், தெலுங்கு படங்களில் நாயகிக்கு முக்கியத்துவம் கொண்ட கதைகளில் நடித்து வருகிறார். அவர் நடித்து கடைசியாக வெளியான 'கார்கி' அவருக்கு புகழைக் கொடுத்தது.

இந்நிலையில் அவர் புதிய வாய்ப்புகளை ஏற்காமல் இருப்பதாகக் கூறப்படுகிறது. மருத்துவம் படித்துள்ள சாய் பல்லவி, மருத்துவர் ஆக இருப்பதாகவும் அதற்காக சினிமாவை விட்டு விலகப் போவதாகவும் கூறப்படுகிறது.

ஏற்கனவே இதுபோன்ற தகவல்கள் வந்த போது அதை சாய் பல்லவி மறுத்திருந்தார். இப்போது மீண்டும் இந்தச் செய்திகள் பரபரப்பாகி வருகின்றன.

# சசிகுமாரின் நந்தன்

அறிமுக இயக்குநர் ஹேமந்த் இயக்கியிருக்கும் காரி படத்தில் சசிகுமார் கதையின் நாயகனாக நடித்துள்ளார். இவருக்கு ஜோடியாக மலையாள நடிகை பார்வதி அருண் இந்த படத்தின் மூலம் தமிழில் அறிமுகமானார்.

இதைத்தொடர்ந்து நடிகர் சசிகுமார் தற்போது "கத்துக் குட்டி", "உடன் பிறப்பே" போன்ற படங்களை இயக்கிய இரா.சரவணன் இயக்கத்தில் புதிய படம் ஒன்றில் நடிக்கவுள்ளார். இந்தப் படத்தின் முதல்பார்வை வெளியாகியுள்ளது. அதன்படி, இந்தப் படத்துக்கு "நந்தன்" என தலைப்பு வைத்துள்ளது.




# ஜனவரி 12இல் வாரிசு

வம்சி பைடிப்பள்ளி இயக்கத்தில், விஜய், ராஷ்மிகா மந்தனா மற்றும் பலர் நடிக்கும் படம் "வாரிசு". இப்படம் 2023 பொங்கலுக்கு வெளியாகும் என்று மட்டுமே இது வரை அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் படத்தின் வெளிநாட்டு உரிமையை வாங்கியுள்ள நிறுவனம் தாங்கள் இப்படத்தை வெளிநாடுகளில் பிரமாண்டமாக வெளியிடுகிறோம் என்ற அறிவிப்புடன் ஜனவரி 12ஆம் திகதி வெளியாகும் என்று அறிவித்துள்ளது.

இதனிடையே, துணிவு ஜனவரி 13ஆம் திகதி வெளியாகும் என்று கூறப்படுகின்றது. ஆனால், உத்தியோகபூர்வ திகதி அறிவிக்கப் படவில்லை.

# உதைபடும் பந்தும் உருளும் அரசியலும்

ஏ.ஜே.ஞனேந்திரன்

வருகிறது வருகிறது என்று வந்தேவிட்டது உலகை உலுப்பும் உதைபந்தாட்டத் திருவிழா...கடந்த மாதம் (நவம்பர்2022) 20இல் ஆரம்பித்துவிட்ட இந்தப் பிரமாண்டமான விளையாட்டு விழா டிசம்பர் 15இல் நிறைவடைகின்றது... களத்தில் குதித்த 32 அணிகள், பதினாறாகச் சுருங்கி விட்டன. விளையாடக் களம் கொடுத்த விருந்தாளி நாடுதான் , முதற்தடவையாக வெளியேற்றப்பட்டது. கட்டார் இப்படி வெளியேற்றப்பட்டது, 22வது தடவையாக நடைபெறும் இந்த விழாவின் சரித்திரத்தில், என்றுமே இடம் பெற்றிராத ஒரு நிகழ்வு என்பதை இங்கே குறிப்பிட்டாக வேண்டும். இது ஓர் அரபு நாட்டில் இடம்பெறுவது இதுவே முதற் தடவை!



## விழுங்கப்பட்ட கோடிகள்

பல சர்ச்சைகள் மத்தியில், இந்த விழா கட்டாரில் ஆரம்பித்து நிகழ்ந்து கொண்டிருந்தாலும், இதுகால வரை நடந்த காற்பந்தாட்ட திருவிழாக்களை ஓரங்கட்டும் வகையில், இதற்கான ஏற்பாட்டுச் செலவுகள் விண்ணைத் தொட்டுள்ளன. நிலத்திலிருந்து அகழப்படும் எண்ணெய் தரும் செல்வத்தை, நிலத்திலேயே கொட்டி செலவிட்டுள்ளார்கள் ஏற்பாட்டாளர்கள்.. 2010இல் இந்த நாடு தெரிவாகிய அறிவித்தல் கிடைத்த கையோடு, அசுர கதியில் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன. 2010க்கும்2020க்கும் இடைப்பட்ட பத்து வருட காலத்தில், இந்த வளைகுடா நாட்டின் வானுயர்ந்த கட்டடங்கள் தொகை இரட்டிபபாகி விட்டன என்று வியந்து வர்ணிக்கி றார்கள்.

இந்த காற்பந்தாட்ட விழாவை மனதில் இருத்தி,அரசு 2010க்கு முன்பே புதிய மெட்ரோ ரயில் சேவைக்கான வேலையை ஆரம்பித்து விட்டது. அகில உலகரீதியிலான விமான நிலையக் கட்டுமானப் பணியும் தொடக்கப்பட்டு விட்டது. தெருக்களை புதிதாக நிர்மாணிக்கத் தொடங்கியதோடு, 100 ஹாட்டல்களை புதிதாக எழுப்பும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டு விட்டன. இந்தச் செலவுகளும் காற்பந்தாட்ட விழா ஏற்பாட்டுக்கான செலவுகளில்தான் உள்ளடங்குகின்றன. இது காலவரை இந்த விழாவை தமது மண்ணில் இடம்பெற்ற விழாக்களில் செலவிட்ட தொகை இதுதான்

| | |
|---|---|
| **கட்டார் -** | **220பில்லியன் டாலர்கள்** |
| **ரஷ்யா** | **11.6பில்லியன்** |
| **பிரேசில்** | **15பி** |
| **தெ.ஆபிரிக்கா** | **3.6பி** |
| **ஜேர்மனி** | **4.3பி** |
| **தென்.கொரியா** | |
| **ஜப்பான்** | **7பி** |
| **பிரான்ஸ்** | **2.3பி** |
| **அமெரிக்கா** | **0.5பி** |

## சர்ச்சைகளுக்கு பஞ்சமில்லை

குறுக்கு வழிகளைக் கையாண்டு, களத்தைத் தனதாக்கிக் கொண்டுள்ளது கட்டார் என்ற குற்றுச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. தன் பெயர் தெரிவாகுவதற்கு முன்பே மெட்ரோ ரயில் நிர்மாணப் பணி தொடக்கம் பல பாரிய திட்டங்களுக்கான பணிகளை அரசு ஆரம்பித்து விட்டது. மனித உரிமைகளை அத்துமீறும் பல செயல்களில் இறங்கி விட்டதாக பரவலான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட தொழிலாளர்களை சரிவர நடத்தவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்தது. “கார்டியன்” என்ற ஆங்கிலத் தினசரி தனது செய்தியொன்றில் வெளிநாட்டு தொழிலாளிகள்(இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், பங்காளாதேஷ், இலங்கை) அவரவர் நாடுகளிலிருந்து ஒப்பந்த அடிப்படையில் பணிக்கமர்த்தப்பட்ட 10 வருட காலத்தில்(2010-2020)6500 பேர் மரணித்திருப்பதாக தெரிவித்தது பெரிய சர்ச்சையைத் தோற்றுவித்தது.

குறிப்பாக கலீபா ஸ்டேடிய நிர்மாணப் பணியில் பணியாளர்களிடம் கடும் வேலை வாங்கப்பட்டதாகக் கூறப்பட்டது. இதில் உண்மை பொய் எதுவென்று தெரியாவிடினும், இந்த விவகாரம் சர்ச்சைக்கு உள்ளாகியது என்னவோ உண்மைதான்..

## “வெள்ளையானையாகும்” நிர்மாணப் பணிகள்?

அழகான பிரமாண்டமான விளையாட்டு அரங்கங்கள் எட்டு எழுப்பப்பட்டு விட்டன. 2.2மில்லியன் குடிமக்களை மாத்திரமே கொண்டுள்ள இந்த நாட்டுக்கு இவை எப்படி இனி உதவப் போகின்றன? “ஒரு நாள் கூத்துக்கு“ மீசையை வழித்த கதை ஒருவேளை நினைவுக்கு வரலாம். இந்த விழாவுக்காக இத்தனை கோடிகளைக் கொட்டி எழுப்பியவை, பணத்தை முழுங்கிய வெள்ளை யானைகளாகத்தான் இருக்கப் போகின்றனவா? மூன்று அரங்கங்கள் தொடர் பாவனையில் இருக்கும், ஏனையவை உருமாற்றப்பட்டு வேறு தேவைகளுக்காகப் பயன்படும் என்கிறார்கள் அதிகாரிகள். ஐரோப்பாவில் இடம் பெறும் சுற்றுப்போட்டிகளின் (சாம்பியன் லீக், யுரோப்பியன் லீக்) இறுதிச் சுற்றை அரங்கேற்ற, இவை தேவைப்படும் நாடுகளுக்கு வழங்கப்படும் என்றும் தெரிவிக்கிறார்கள்.




## இன்னொரு நட்சத்திர நாடு

மத்திய கிழக்கு நாடுகளுள் ஐக்கிய அரபுக் குடியரசு என்று அழைக்கப்படும் எமிரேட்ஸ், பலவழிகளிலும் தன்னை பொருளாதார ரீதியாக பலப்படுத்திக் கொண்ட நாடு. அந்த வழியில் தன்னையும் ஒரு பலவானாக்கிக் கொள்ள கட்டார் முனைந்ததில் நிகழ்ந்த தேடல்தான் இந்த விளையாட்டு விழா அரங்கேற்றம்.

உலகின் மிகப் பெரிய இந்த விளையாட்டு விழாவை நடாத்துவதால், பல வழிகளில் நன்மைகள் அடைய முடியும் என்ற நீண்ட காலத் திட்டத்தின் வெளிப்பாடே இந்த விழா அரங்கேற்றம். உலக பணக்கார நாடுகளுள் நான்காவது இடத்தில் இருப்பது கட்டார். எமிரேட்ஸ், பாரெயின், சவுதி அரேபியா, குவெத், ஓமான் ஆகிய நாடுகள் செல்வச் செழிப்பில் கட்டாருக்கு பின்னிற்பவைதான்! 2017இல் வளைகுடா கூட்டுறவு நாடுகளிடையே விரிசல் ஏற்பட்டது. கட்டாரை சவுதி அரேபியா,எமிரேட்ஸ். பாரெயின், எகிப்து ஆகிய நாடுகள் பகிஷ்கரித்தன வான்வெளிப் பயணங்களுக்கு. தடை விதிக்கபட்டது. 2021இல்தான் கட்டார் தன் உறவுகளை மீண்டும் புதுப்பித்துக் கொள்ள முடிந்தது.

## குடிமக்கள் நிலை என்ன?

பொதுவாக ஐரோப்பிய விளையாட்டு விழாக்களில் “குடிமகன்கள்“ வெகு சுதந்திரமாகச் செயற்படுவது வழமை..இந்தத் தடவை என்றுமில்லாத திருநாளாக, களம் ஓர் அரபு நாடாகி இருக்கின்றது. மதுபானங்களை பொது இடங்களில் அனுமதிக்காத இந்த நாட்டுக்கு இது ஒரு பெரிய சவால்தான்.

சகித்துக் கொள்ளும் ஸ்தலங்களாக சில குறிப்பிட்ட இடங்களை குடிமக்களுக்காக கட்டார் ஒதுக்கியிருக்கின்றது. இந்த இடங்களைத் தவிர்த்து வெளியிடங்களில் எவராவது தாக சாந்தி செய்ய முற்பட்டால் 3000றியால் (இது சுமாராக 800 டாலர் ) தண்டப் பணம் என்ற அறிவிப்பு வெளிவந்துள்ளது.

21வயதுக்கு மேற்பட்ட ஒருவரால் தான் மதுபானத்தை வாங்க முடியும். சில பூங்காக்களிலும் காலை 10 தொடக்கம் மதுபானம் விற்பனைக்கு இருக்கும். இங்குள்ள எரிக்கும் வெயில் காரணமாக, வெயில் குறைந்த வருட முடிவைத்தான் விளையாட்டு நிகழ்வுகளுக்காக தேர்ந்துள்ளார்கள்.

## பிரியாவிடை தரும் விழா

இந்த வளைகுடா விழா, றொனால்டோ, மெஸ்ஸி போன்ற உலகப் புகழ்பெற்ற விளையாட்டு வீரர்களுக்கு, பிரியாவிடை தரும் விழாவாக அமையப் போகின்றது. சாதனை மேல் சாதனைகளாகப் படைத்து, மின்னிய நட்சத்திரங்கள் அடிவானில் இன்று மின்னி மின்னி பிரகாசிக்கின்றன.

எல்லாமே ஒரு காலத்திற்குத்தான் என்று சொல்வதுண்டல்லவா? றொனால்டோவிடம் பழைய வேகத்தைக் காணோம் என்கிறார்கள். ஐந்தாவது காற்பந்தாட்ட விழாவைக் காணும் இந்த நட்சத்திரத்திற்கும் மூப்பு என்பது உண்டல்லவா? இறுதி 16 அணிகளுககுள் போர்த்துகல்லும் தெரிவாகி விட்ட இன்றைய நிலையில் இவரை அடுத்தடுத்த போட்டிகளில் நாம் காணமுடியும் என்பது மனதுக்கு ஓர் ஆறுதலான விடயந்தான்....பல கிண்ணங்களை சுவீகரித்து விட்ட இவர் மனதில் உலகக் கிண்ணத்திற்கு சொந்தம் கொண்டாடும் ஆசை இன்னமும் நிறைவேறிய பாடாக இல்லை.

எதிலும் அரசியல் என்று , ஜாலியாகப் பொழுதைக் கழிக்கும் விளையாட்டுகளிலும் அரசியல் புகுந்து விளையாடுவதுதான் ஜீரணிக்க சிரமமாக இருக்கின்றது.



புலம்பெயர் மடல்

# மெல்பனில்

## கலைஞர் மாவை நித்தியானந்தனின் பவளவிழா: நித்தியம் சிறப்பு மலரும் வெளியீடு!


கலை, இலக்கியவாதியும், மெல்பன் பாரதி பள்ளியின் நிறுவனரும் தன்னார்வத் தொண்டருமான ஆளுமை மாவை நித்தியானந்தனின் பவளவிழா அண்மையில் மெல்பன் ஸ்பிரிங்வேல் மாநகர மண்டபத்தில் வெகு சிறப்பாக நடந்தது.

1989 ஆம் ஆண்டு முதல் அவுஸ்திரேலியா மெல்பனில் வதியும் மாவை நித்தியானந்தன், இலங்கையில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் முன்னாள் மாணவர். தமது கல்லூரிக் காலத்திலேயே இலக்கியப்பிரவேசம் மேற்கொண்டவர். அத்துடன் நாடகத்துறையிலும் ஈடுபட்டவர்.

கட்டுப்பெத்தை உயர்தொழில் நுட்பவியல் கல்லூரியில் 1968 இல் இணைந்த மாவை நித்தியானந்தன், இக்கல்லூரியின் தமிழ் மாணவர் மன்றத்தின் தலைவராகவும், மன்ற வெளியீடான நுட்பம் இதழின் ஆசிரியராகவும் செயற்பட்டவர்.

கொழும்பு கலை இலக்கிய நண்பர் கழகம், தேசிய கலை இலக்கியப் பேரவை முதலானவற்றிலும் அங்கம் வகித்திருக்கும் மாவை நித்தியின் இனிச்சரிவராது, (1972 ) ஐயா லெக்‌ஷன் கேட்கிறார் (1973 ) முதலான நாடகங்களையும் திருவிழா என்ற கூத்தையும் அரங்கேற்றியவர்.






இங்கிலாந்தில் மேற்கல்வியை தொடர்ந்த மாவை நித்தி, 1989 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவுக்கு புலம் பெயர்ந்து, இங்கும் தனது பணிகளை கலை, இலக்கியம், இதழியல் சார்ந்து மேற்கொண்டவர். பாப்பா பாரதி என்ற சிறுவர்க்கான வீடியோக்களை மூன்று பாகங்களில் தயாரித்து இயக்கி வெளியிட்டார். சிறுவர் நாடகங்களை எழுதி இயக்கி மேடையேற்றியதுடன், சில சிறுவர் நாடக நூல்களையும் வெளியிட்டார்.

மெல்பன் கலை வட்டம் என்ற அமைப்பினையும், அதனையடுத்து பாரதி பள்ளி பாடசாலையையும் உருவாக்கியிருக்கும் மாவை நித்தியின் பணிகள் தாயகம் நோக்கியும் விரிவடைந்தது. தமது பூர்வீக ஊரான மாவிட்ட புரத்தில் இயற்கை விவசாய பண்ணையை ஆரம்பித்தார். அத்துடன் தற்கொலை தடுப்பு விழிப்புணர்வு முகாம்களையும் யாழ்ப்பாணத்தில் உருவாக்கி சீர்மியப் பணிகளையும் மேற்கொண்டார். மாவை நித்தியின் பவளவிழாவை அவர் மெல்பனில் உருவாக்கிய பாரதி பள்ளி சமூகம் வெகு சிறப்பாக அண்மையில் நடத்தியதுடன் நித்தியம் என்ற சிறப்பு மலரையும் வெளியிட்டது.

இவ்விழாவில் மாவை நித்தியின் வாழ்வையும் பணிகளையும் சித்திரிக்கும் ஆவணப்படக்காட்சியும் காண்பிக்கப்பட்டது.

திரு. சத்தியன் நிரஞ்சன் நிகழ்ச்சிகளை தொகுத்து அறிவித்தார். திருவாளர்கள் பரந்தாமன், சிவசுதன், நிர்மலதாஸ், சிவசுப்பிரமணியம், முருகபூபதி, திருமதி புவனா இராஜரட்ணம் ஆகியோரும் விக்ரோரியா பாராளுமன்ற மேலவை உறுப்பினர் திரு. தியான் கியூ அவர்களும் மாவை நித்தியானந்தனின் அளப்பரிய சேவைகளைப் பாராட்டி உரையாற்றினர்.

பாரதி பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.



---



# வியுக்தியார் பதில்கள்

**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

**வியுக்தியார் பதில்கள்**
**ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com

**து. பாஸ்கரன், நீர்வேலி, யாழ்ப்பாணம்.**

**கேள்வி:** இனப்பிரச்னைக்கு தீர்வு வழங்குவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை கொண்டிருந்த அனைத்து அரசாங்கங்களும் எடுத்த முயற்சிகள் தோல்வியடைந்தன. இவ்வாறான நிலையில் இனப் பிரச்னைக்கு தீர்வு வழங்குவதாக ஜனாதிபதி குறிப்பிடுவதை எவராலும் நம்ப முடியுமா என முன்னாள் வெளிவிவகாரத்துறை அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் சபையில் கேள்வியெழுப்பியிரந்தாரே. நியாயமான கேள்விதானே அது?

**வியுக்தியார்:** உண்மைதான், அப்படி முயற்சி எடுத்தவர்கள் எல்லாம் ஒரு கட்சியே மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு இருந்தவர்கள். உங்களுக்குத் தெரியாததா? மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருந்தாலும் அப்படி தீர்வை வழங்கினால் அடுத்த தேர்தலில் தோற்கவேண்டி வருமே என்று நினைப்பார்கள். ஆனால் இப்போது அப்படி இல்லையே? ஜனாதிபதி ஒரு ஆளாக இருந்தாலும், மற்றைய கட்சிகள் எல்லாமே பதின்மூன்றை முழுமையாக அமுல்படுத்துவதற்கு தயாராக இருப்பதாக சொல்கிறார்களே. ஒரு பழமொழி ஒன்று சொல்வார்கள். மலை ஒன்றை மயிரில் கட்டி ஒருவர் இழுக்க முயற்சிக்கின்றபோது மற்றையவர்கள் அவரிடம் கேள்வி கேட்பார்களாம். அதற்கு அவர் சொல்லுவாராம், முயன்று பார்ப்போம், வந்தால் மலை இல்லாட்டி மயிர்தானே போகிறது என்று. முயன்று தான் பார்ப்போமே.

---

**ஏ.கேதீஸ்வரன், மருதனாமடம், இணுவில்.**

**கேள்வி:** இலங்கையின் இந்து மதம் தனித்துவமானது என்றும் அது பாதுகாக்கப்படவேண்டும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் வேண்டுகோள் விடுத்திருக்கிறாரே. ஒரு நாள் பாராளு மன்றம் வந்து இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண வரு மாறு அழைப்பு விடுக்கின்றார். இப்போது இந்து மதத்திற்காக குரல் கொடுக்கிறார். இப்படியே போனால் அவரை ஜனாதிபதி பதவியில் பௌத்த பேரினவாதம் விட்டுவைக்குமா?

**வியுக்தியார்:** ஜனாதிபதி பதவியேற்று நான்கு மாதங்கள் முடிந்துவிட்டன. வழக்கமாக இலங்கையில் ஒருவர் ஆட்சிக்கு வந்தால் பதவியேற்று அடுத்த வாரமே புதுடில்லிக்குப்போய்விட்டு அப்படியே திருப்பதிக்கும் போய்விட்டு வருவார்கள். ஆனால் இவருக்கு இன்னமும் அங்கிருந்து ஒரு சிக்னல் வரவில்லை. எப்படியெல்லாம் அவர்களை மகிழ்விக்கலாம் என்று இரவில் யோசித்துவிட்டு காலையில் நேராக பாராளுமன்றம் வருகின்றார் என்று நினைக்கின்றேன். அடுத்த சுதந்திர தினத்திற்கு முன்னர் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்போவதாக கூறியிருந்தார். இன்னமும் சரியாக இரண்டு மாதங்கள்தான் இருக்கின்றன. அவர் சொல்வது ஏதோ- யாரையோ திருப்திப்படுத்தத்தான் என்பதை புரிந்துகொள்ள முடியாதவர்களா பௌத்த பேரினவாதிகள்.?

---

**வை. தனராஜ், உவர் மலை, திருகோணமலை.**

**கேள்வி:** இலங்கையில் வாழும் 56.8 வீதமானவர்கள் சந்தர்ப்பம் கிடைத்தால் நாட்டில் இருந்து வெளியேறி வெளிநாட்டில் வசிக்க விருப்பத்துடன் இருப்பதாக மாற்று கொள்கைகளுக்கான கேந்திர நிலையம் நடத்திய கருத்து கணிப்பு ஒன்றில் தெரியவந்துள்ளதாமே. அப்படி 56 வீதமானவர்கள் வெளியேறிவிட்டால் மிச்சமாக இருப்பவர்கள் மகிழ்ச்சியாக வாழலாமா?

**வியுக்தியார்:** கருத்துக்கணிப்பு என்றால், இந்த நாட்டில் உள்ள எல்லோரிடமும் எடுப்பதில்லை. ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் பார்ப்பது போல இவர்கள் ஆயிரமோ இரண்டாயிரமோ தங்களுக்கு வசதியான தொகையினரிடம் கருத்துக்கணிப்பை நடத்திவிட்டு அதனையே ஒட்டுமொத்த மக்களின் கருத்தாக சொல்வார்கள். இதுதான் உலகம்முழுக்க நடப்பது. ஆனால் வடக்கில் வந்து கனடா போடரை திறந்துவிட்டார்களாம். யார் வேண்டுமானாலும் விமான ரிக்கட் எடுத்துக்கொண்டு நேராக போகலாம். விசா தேவையில்லையாம் என்ற சொல்லிப்பாருங்கள். வடக்கில் ஒருவரும் மிஞ்சமாட்டார்கள். நீங்கள் என்னடா என்றால் 56 வீதமானவர்கள் வெளியேறி விட்டால் மிகுதி 44 வீதமானவர்கள் மகிழ்ச்சியாக வாழலாமா என்கின்றீர்கள். உலகம் அழிந்த பின்னர் நான் மட்டும் தப்பியிருந்தால் எப்படியிருக்கும் என்று கற்பனை பண்ணுவதுபோல இருக்கின்றது உங்கள் கேள்வி.

---

**ஆர். சஜிகாந்த், உசன், மிருசுவில்.**

**கேள்வி:** வடக்கில் அடிக்கடி பாதுகாப்பற்ற புகையிரதக்கடவைகளில் விபத்துக்கள் நடக்கின்றன. ஆனால் யாரும் கண்டுகொள்வதாகத் தெரியவில்லையே?. புகையிரத திணைக்களம் யாழ்ப்பாணத்திற்கான ரயில் சேவையிலேயே அதிக இலாபம் ஈட்டுவதாகவும் கூறுகிறார்கள். அப்படியெனில் இந்த பாதுகாப்பற்ற ரயில் கடவைகளில் பாதுகாப்பு தடைகளைப் போட முயற்சிக்கலாம்தானே.

**வியுக்தியார்:** நீங்களே பாதுகாப்பாற்ற புகையிரதக் கடவைகள் என்று சொல்லும்போது அது பாதுகாப்பற்றவை என்பதும் உங்களுக்கு புரிந்து தானே இருக்கின்றது. அப்படியெனில் நாங்களும் கொஞ்சம் அவதானமாக கடக்கவேண்டாமா? அதில் பாதுகாப்பு தடைகள் இருந்தாலும் கூட ஒரு புகையிரத பாதையை கடந்து செல்லும் போது இருபக்கமும் பார்த்து நிதானமாக போக நம்மவர்கள் பழக வேண்டும். பாதுகாப்பு கடவையில் தடைகள் இருந்தாலும் கூட அது ஏதேனும் ஒரு காரணத்தால் வேலைசெய்யாமலும் இருக்கலாம் அல்லவா. எனவே புகையிரத பாதை ஒன்றை கடக்கும் போது நாமும் கொஞ்சமல்ல, அதிகமாகவே கவனம் செலுத்தி கடக்க வேண்டும். அதற்காக பாதுகாப்பு தடைகளை போடவேண்டாம் என்று நான் சொல்லவரவில்லை. அது போடப்படத்தான் வேண்டும்.

# கைலாசபதியின் பார்வையில் மகாகவி பாரதியும்

# பாரதியின் பாதையில் கைலாசபதியும்

**அமுது ஜோசப்வாஸ் சந்திரகாந்தன் அடிகள்**
இறையியல் பேராசிரியர்,
டொரன்ரோ பல்கலைக் கழகம், கனடா

பேராசிரியர் கைலாசபதி எம்மை விட்டுப் பிரிந்த நினைவழியா நாற்பது ஆண்டுகள் இம்மாதம் ஆறந்திகதி நிறைவுறும். சென்ற ஆண்டின் இறுதியில் பாரதியின் இறப்பின் நூற்றாண்டு நிறைவினைத் தமிழுலகம் நினைத்துத்துயருற்றது. உலகக் கவிஞர்களின் உன்னத வரிசைக்கு உயர்த்தப்பட வேண்டியவன் பாரதி என்பதை உறுதியோடு உரத்துக் கூறியவர் பேராசிரியர் கைலாசபதி.

பாரதியுகம், பாரதிஇயல், பாரதிக்குமுன், பாரதிக்குப்பின் என்ற அடைமொழிச் சொற் பயன்பாடு இன்று தமிழியல் ஆய்வுப் பரப்பில் இயல்பாகவே இணைக்கப்படுவதற்கும் கைலாசபதியே காரணியாவார். சென்ற நூற்றாண்டின் கடைக்காலில், காத்திரமான எண்ணக் கருக்களுடன், அவர்கள் தமிழியல் ஆய்வுலகில் இந்த சொல்லாட்சிகளை இதமாகவே கலந்து படைத்தார்.



நவீன தமிழிலக்கியம் எனும் பெருங்காவினுள் துணிவோடு உட்சென்று மீள்வதற்குப் பேரறிஞர் கைலாசபதி மிக நீண்ட காலமாகவே தனது வரைபட வழிகாட்டியாகவும், திசைசுட்டும் குறிகாட்டியாகவும், தமது ஆய்வுபொழுதுகள் படும் வரையில் அணையாத ஒளி விளக்காகவும் மகாகவி பாரதியையே சிக்கெனப்பற்றிக் கொண்டார். 1982 இன் இறுதிமாதத்தில் மரணப் படுக்கையில் இருந்தவாறே "பாரதியியலுக்கு ஒரு பங்களிப்பு" என அவர் படைத்த கட்டுரை, பாரதியின் மேதாவிலாசம் பற்றிய அவரது இறுதிச் சாட்சியம்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடாதிபதி அலுவலகத்திலும், அவரது இல்லத்திலும், நிறைவான, நீடித்த பல உரையாடல்களில் அவர் அருகிருந்து பங்குபெறும் வாய்ப்புகள் எனக்குக் கிடைத்தமை என்பெரும் பேறாகும். அவர் இறந்த பின்பு என் மன ஆறுதலுக்காக, அவரது எழுத்துக்களைத் தேடித்தேடி, நான் பயணித்த இடமெல்லாம் அவரது நூல்களை எடுத்துச்சென்று வாசிப்பது எனக்கு மன ஆறுதலைத் தந்தது. தொடர்ச்சியான பல ஆண்டுகால வாசிப்புகளினுடாக நான் தீர்க்கமாக உணர்ந்த ஓர் உண்மை பாரதி பற்றிய கைலாசபதியின் நுண்ணாய்வுகளின் ஆழமும், அகன்றார்ந்த இலக்கியச் செழுமையாகும்.

இது புறநிலைப்பட்ட ஓர் பேருண்மை என்பது கைலாசபதியை நன்கு அறிந்த பேராசிரியர்களான சு. வித்தியானந்தன், க.சிவத்தம்பி, அ.சண்முகதாஸ், நா. சுப்பிரமணிய ஐயர், எம். எ. நுகுமான், க. சிவலிங்கராசா ஆகியோர் கைலாசபதி பற்றி அவ்வப்போது எழுதிய கட்டுரைகளை வாசித்தபோது எனக்கு மேலும் உறுதியாகத் துலங்கியது.

1981ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், மென்குளிரான பொன்மாலைப் பொழுதில் திருநெல்வேலி சிறுநகரில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை அண்மியுள்ள எவ்லின் இரத்தினம் பல்பண்பாட்டு நிறுவனத்தில் பாரதி பிறப்பு நூற்றாண்டைத் தொடங்கி வைத்து, "European Influences on Modern Tamil Poetry: Bharathi and the European Poets" ("நவீன தமிழ் கவிதையில் ஐரோப்பிய தாக்கங்கள்: பாரதியும் ஐரோப்பிய கவிஞர்களும்") என்ற தலைப்பில் கைலாசபதி ஓர் ஆய்வுப் பேருரையினை வழங்கினார். கருத்தாழமும் கலை-இலக்கிய ஒப்பியல் பொருண்மையும் மிக்க அவ்வுரையின் பன்முகக் கருவூலங்கள் எனது அடிமனதில் இன்னும் பசுமையாகவே பதிந்துள்ளன.

அந்த நிகழ்ச்சி முடிந்த பின்பு சிறிதுநேரம் கைலாசபதியும் ஓரிரு நண்பர்களும் பேராசிரியர்களும் மண்டப வாசலில் உரையாடிக் கொண்டிருந்தனர். அடர்ந்து நெளிந்த தனது கருந்தலைமுடியை வழமை போல் வலது கையால் நேவிக் கோதியபடியும், இடை யிடை மீசையின் இருகூர் முனைகளையும் முறுக்கிக் கொண்டும் அவர்களுடன் மகிழ்ச்சியாக உரையாடினார்.

சிறிது நேரத்தின் பின்பு தனியே அவரும் பேராசியர் இந்திரபாலாவும் மட்டும் பேசிக் கொண்டிருந்த போது, அவரது அருகில் நான் சென்று அவரது செழுமையான ஆங்கிலப் புலமையையும், பாரதி பற்றி அவரது உரையூடாக அன்று நான் பெற்ற பல சிறந்த, புதிய தகவல்களையும் கூறி அவரை வெகுவாகப் பாராட்டினேன். "முப்பது வருடங்களுக்கு மேலாக பாரதி பற்றி நான் செய்த ஆய்வுகளின் சில கூறுகளே இவை" என்றார்". அதே ஆண்டில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பாரதி நூற்றாண்டு விழா கருத்தரங்கு நிகழ்வில் "பாரதி யுகம் ஊற்றுக்களும் ஓட்டங்களும்" என்ற தலைப்பில் அற்புதமான ஒரு பேருரையைத் தமிழிலும் வழங்கினார். அவர் இறந்த பின்பு இக்கட்டுரைகள் தமிழிலும் ஆங்கிலத் திலும் நூலுருப் பெற்றன.

பாரதியியலின் இன்றைய பல்துறை ஆய்வுகளின் மூலைக்கல்லும், மூளைக்கல்லும் கைலாசபதியே. கடந்த நாற்பது ஆண்டுகளில் தமிழகத்தின் சென்னைப் பல்கலைகழகம் முதல் கனடாவின் மஹில் பல்கலைகழகம் ஈறாக பாரதி பற்றிய முதுமாணி, மற்றும் முனைவர் பட்ட ஆய்வுகளில் மாணவர் முனைப்புடன் ஈடுபடுவதற்கும் தமது ஆய்வுகள் வழியாகப் பாதை அமைத்தவர் பேராசிரியர் கைலாசபதி அவர்களே. "இது உண்மை வேறும் புகழ்ச்சியில்லை," என்பதனை இங்கு ஓரளவேனும் சுருக்கமாக சில ஆதரங்களுடன் விளக்கி உரைத்தல் பொருத்தமானது என எண்ணுகிறேன்.

"தமிழியல் வரலாற்றில் கைலாசபதியின் பங்களிப்பு" பற்றிக் கூறும் போது, "பாரதியின் வசன இலக்கியங்கள்" எனும் தலைப்பில் கைலாசபதி எழுதிய கட்டுரைகளை விதந்து போற்றும் பேராசிரியர் வித்தியானந்தன், "மாணவனாக இருந்த காலத்திலேயே பாரதி பற்றிய ஆராச்சியில் கைலாசபதி காத்திரமாக ஈடுபட்டிருந்தார்" எனக் குறித்துள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தில் கைலாசபதி தமிழ்த்துறைப் பேராசிரியராகவும் கலைப்பீடாதிபதியாகயவும் பணியாற்றிய காலத்தில் அப்பீடத்தில் கிறீஸ்தவ-இஸ்லாமியத் துறையின் இணைப்பாளராகவும் முதல் விரிவு ரையாளராகவும் நான் பணியாற்ற ஆரம்பித்தேன். அப்பல்கலைக் கழகத்தில் நான் கற்பிக்கத் துவங்கிய முதல் நாளிலிருந்தே ஒரு தந்தை போன்று மிக்க கரிசனையுடன் என்னை ஆற்றுப்படுத்திய அற்புத அறிஞர் அவர். எனது கலாநிதிப் பட்டப்படிப்பை பின்போடாது விரைவாக முடிக்க வேண்டும் என அடிக்கடி அறிவுரைகூறி எனது வளர்ச்சிக்கு எல்லா வழிகளிலும் ஆதர்ஷமாக இருந்த அன்பினிற்கினிய நண்பர்.



மகாகவி பாரதியின் காலத்தைக் கடந்த தூரதரிசன வீச்சுகளையும் அறிவியல் கவித்துவ மேன்மையையும், மானிடம் போற்றும் மாண்புறு பண்பையும், நெடிய, பரந்த உலகநோக்கையும், சீரிய சமூக மாற்ற ஆதங்கத்தையும், தமிழியலின் அனைத்துக் கூறுகள் சார்ந்த சர்வதேச மயப்பாட்டிற்கான தேவையின் எதிர்வு கூறல்களையும் கோடிட்டுக் காட்டும் வண்ணம், கைலாசபதி தமிழிலும் ஆங்கிலத்திலும் இருபதிற்கு மேற்பட்ட மிகத் துல்லியமான கட்டுரைகளையும் கருத்துச் செறிவார்ந்த மூன்று ஆய்வு நூல்களையும் படைத்தளித்துள்ளார்.

"பாரதி பற்றியவை" (On Bharathi) என்ற தலைப்பிலான அவரது ஆங்கில ஒப்பியல் ஆய்வு நூலில் பாரதி மீது செல்வாக்குச் செலுத்திய புகழ்பூத்த ஆங்கிலக் கவிஞர்காளான ஜோன் கீட்ஸ், பேர்ஷீ ஷெல்லி, பைரன், வேட்ஸ்வர்த் அமெரிக்க கவிஞன் வால்ட் விட்மன், போன்றவர்களை வரிசைப்படுத்தி, இப்படைப்பாளிகளின் கலை-இலக்கிய பங்களிப்புகள் ஆங்கில அறிவுலகில் அவர்களது வாழ்நாட்களின் பின்பு யுகமாற்றக் குறியீடுகளைத் தருவித்ததைப் போன்று தமிழிலிலக்கியத்தின் பல பரிமாணங்களில் ஒரு பரிணாமக் கூர்ப்பு மாற்றத்தை ஏற்படுத்திய யுகபுருஷன் பாரதி எனத் தயக்கமின்றி விதந்துரைத்தார். இக்கவிஞர்களின் தேசப்பற்று, விடுதலை வேட்கை, புதுமை மோகம் போன்ற பண்புகளை விதந்துரைத்த பாரதி, தனது கவிதைகளில் இவர்களையும் விஞ்சிய வகையில் இந்த எண்ணக் கருக்கள் பற்றி புதுமைக் கவிஞர், புரட்சிக் கவிஞர், மக்கள் கவிஞர், மறுமலர்ச்சிக் கவிஞர், நவயுக கவிஞர் எனப்பாரதிக்கு வழங்கப்பட்ட அடைமொழிகள் அவன் வாழ்ந்த காலத்தின் மாற்றக் கூறுகளை ஓரளவு சுட்டிக் காட்டுவதனை மிக நுணுக்கமாக இந்த ஆய்வுகளில் குறித்துள்ளார். இந்திய உபகண்டமும் தமிழகமும் நவீன யுகத்தில் கால் பதிக்கத் தொடங்கிய வேளை சுதேசம், சுயாட்சி, ஜனநாயகம், மக்கள் ஆட்சி, போன்ற எண் ணக் கருக்கள் இந்தியாவில் மேலெழுந்த காலம் அது. இயந்திரமயமாக்கலினதும், தொழில் மயமாக்கலினதும் தொடக் காலமும் அதுவே.

**ஆயுதம் செய் வோம்நல்ல காகிதம்சேய் வோம்**
**ஆலைகள் வைப் போம் கல்விச் சாலைகள் வைப்போம்**
**வானையளப் போம் கடல் மீனையளப் போம்**
**சந்திரமண் டலத்தியல் கண்டு தெளி வோம்**

என்ற தூர தரிசன விஞ்ஞானத் தேடல் வீரியத்துடன், விரைந்து நின்ற வீச்சு பாரதியின் கவிதைகளில் இயல்பாகவே இளையோடியமை வெறும் தற்செயல் நிகழ்வல்ல. இவ்வரிகள் பாரதியின் கவிதைகளில் தேட்டெனப் பளிச்சிடுவது நாம் முன்னர் குறிப்பிட்ட நவீனத்துவ உணர்வலைகளின் எதிரொலியே எனப் பேராசிரியர் கைலாசபதி நிறுவியுள்ளார். இங்கு அமெரிக்க புரட்சிக்கவிஞன் வால்ட் உவிட்மன் எழுதிய நீண்ட ஆங்கில வசன கவிதைகளும் பாரதியின் புரட்சி மனப்போக்கை தூண்டியது மட்டுமல்லாமல் பாரதி தயக்கமின்றி தனது கால மரபு இலக்கிய வரம்புகளைக் கடந்து வசன கவிதைகளை, ஜனரஞ்சகமான வகையில் வார்த்து வழங்க வழிசெய் தது எனத் அந்த ஆய்வுக் கட்டுரையில் நிரூபித்துள்ளார்.

கைத்தறி ஆலைகளே எமக்குப் போதும், அவையே எம்தேவைக்கு முழு நிறைவு என இந்திய தேசபிதா மகாத்மா காந்தி அடித்துக் கூறியபோது அதே காலத்தில் முரண் கருத்தாக இயந்திரமயமாக்கலின் இன்றியமையாமையை, முனைப்பான முக்கிய தேவையாகப் பாரதி முன்வைத்தமையை இந்திய மக்களின் அன்றைய நிதர்சனத் தேவையாக கைலாசபதி விரித்தும் விளக்கியுமுள்ளார். இதுவே பின்னர் யதார்த்தநிலைப்பட்டமை என்பது வரலாறு.

பாரதியின் தேசிய மற்றும் சமய, சமூகத் தொடர் பாடல்கள் பற்றித் தமிழிலும், ஆங்கிலத்திலும் கைலாசபதி எழுதியுள்ளவை எண்ணுக்கணக்கில் குறைவாகக் காணப்பட்டாலும், அவற்றின் கருத்தாளத்திலும் ஒப்பியல் பாங்கிலும் மிகவும் பெறுமதி வாய்ந்த சிந்தனைகளையும் எண்ணக் கருவுலங்க ளையும் உள்ளடக்கியவை. தற்காலத் தமிழியலின் பல முக்கியமான, முனைப் பான கூறுகளை அவை தீர்க்கதரிசனமான எதிறவுகூறலுடன் விரவி நிற்கின்றன.

மூன்று தசாப்தங்களுக்கு மேலாக மகா கவி பாரதியின் கவிதைகள் உள்ளடங்கலாக தனது கைக்குக் கிடைத்த கவிஞரின் ஆக் கங்கள் அத்தனையையும் மிகத் துல்லிய மாக பகுப்பாய்வு செய்து தமிழிலும் ஆங்கிலத்திலுமாகப் பல கட்டுரைகளில் கைலாசபதி கருத்துத் தெரிவித்துள்ளார். பாரதியின் அளவுகோல்களும், தீர்மான முடிவுகளும், இலக்கிய புதுமை நோக்கும் அடுத்தடுத்து வந்த சந்ததியினருக்கு ஆதர்ஷமாக அமைந்த வாக்கினைத் தெளிவுபடுத்தி, பாரதியின் காலத்தைக் கடந்த ஆனால் காலத்தின் தேவையோடு இணைந்த சிறப் புக்களை பேராசிரியர் இக்கட்டுரைகளில் குத்திட்டுக் காட்டுகின்றார். டொமினிக் ஜீவா தொகுத்தளித்த எங்கள் நினைவுகளில் கைலாசபதி, (1985), என்ற நூலில் "புது நெறி காட்டிய திறனாய்வாளன்" என்ற தலைப் பில் க. அருணாசலம் எழுதிய கட்டுரையில் பாரதியையும் கைலாசபதியையும் ஒப்பிட்டுக் கூறியுள்ளவை வளம் மிக்கவை.

வோல்ட் உவிட்மன், மற்றும் பெல்ஜிய நாட்டு புரட்சிவாதியும், ஜனநாயக கவிஞனுமான வேர்ஹீரன் பற்றிப் பாரதி ஆங்கிலத்தில் எழுதிய ஒப்பீடுகளின் சாயலை விளக்கி, ஐரோப்பிய இலக்கியங்கள் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியப் படைப்புகள் மீது ஏற்படுத்திய தாக்கங்களை கைலாசபதி வெகு விமரிசையாக எடைபோட்டுள்ளார். கைலாசபதி துவக்கி வைத்த பாரதி பற்றிய செழுமை மிக்க ஆய்வுகள் ஆ. இரா. வேங்கடாசலபதி சீனி. விஸ்வநாதன், யா. மணிகண்டன், பெ. மணியரசன், மா. வளவன், கோ.கேசவன், கு.வே பலசுப்பிரமணியம், போன்ற ஆய்வாளர்களால் மிகச் செழிப்பாகவும் சிறப்பாகவும் இன்று தமிழகத்தில் முன் எடுக்கப்படுகின்றன என்பதும் ஊக்கம் தரும் உன்னத செய்தி.

# எரித்திரியா: சுதந்திரத்தின் பின்னரான சர்வாதிகார ஆட்சி!

## வெற்றி அடைந்த விடுதலைப் போராட்டம்! தோல்வியை நோக்கும் பொருளாதர வளர்ச்சி!!

- ஐங்கரன் விக்கினேஸ்வரா

மிகச் சிறிய நிலப்பரப்பில் வாழ்ந்து வந்த எரித்திரியா மக்கள் தங்கள் சுய பலத்தின் மூலம் அவர்கள் தங்களுடைய தாய் மண் முழுமையையும் மீட்டனர்.

1993 ஆம் ஆண்டு எரித்திரியா என்கின்ற தனிநாடு முழுமையான இராணுவ பலம் மூலம் வெற்றி கொள்ளப்பட்டது. தங்களுடைய தாய் மண்ணை ஆக்கிரமித்திருந்த 1 லட்சத்து 10 ஆயிரம் எதிரி எத்தியோப்பிய படைகளைச் சிறைப் பிடித்தனர்.

இது 93 ஆம் ஆண்டு நடந்த வரலாறு.

### எரித்திரியாவின் இன்றைய நிலை:

நீண்டகாலமாக போராடி விடுதலை அடைந்த எரித்திரியாவின் இன்றைய நிலை மகிழ்வானதாக இல்லை என்பதும் உண்மையே.

முடிவுறாத எத்தியோப்பிய எல்லைப் பிரச்சினையால் இரு நாடுகளுக்கும் இடையே 1998 முதல் 2000 வரை கடும் போர் நடந்தது. கடந்த ஆண்டு மீளவும் இரு நாடுகளுக்கும் இடையே கடும் எல்லை யுத்தம் நடந்தது. சிறிது காலம் சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டு, இரு நாட்டு எல்லையில் அமைதி திரும்பினாலும் மீள கடும் எல்லை யுத்தம் நடந்த வண்ணம் உள்ளது.

### சர்வாதிகார ஆட்சி:

1994இல் புதிய நாடு அதன் முதல் தேசியத் தேர்தலை நடாத்தியது. ஜனாதிபதியாக ஐசியாஸ் அப்பெரி தேர்ந்தெடுக்கப்பட்டார். புதிய தேசத்திற்கான நம்பிக்கை அதிகமானதாக இருந்தது. 1990களில் பின் தோன்றிய ஊழல் மற்றும் அரச தோல்விகள் ஆகியவற்றிலிருந்து புதிய பாதையை அமைக்க எதிர்பார்க்கப்பட்டது.

ஆபிரிக்காவின் மறுமலர்ச்சி நாடுகளில் ஒன்றாக மிளிரும் என எதிர்பார்க்கப்பட்டது. அத்துடன் தோல்வியை நோக்கும் பொருளாதர வளர்ச்சியினாலும், நீண்ட கால சர்வாதிகார ஆட்சியினால் இக்கனவும் தகர்ந்தது.

எரித்திரியா 93 ஆம் ஆண்டு தங்களுடைய நிலப்பரப்பு முழுமையையும் மீட்டு தாங்கள் ஓர் தனியரசு என்று அவர்கள் பிரகடனப்படுத்தினார்கள். அப்போது ஐ.நா.வில் ஒரு பிரச்சினை எழுந்தது. இதனை அங்கீகரிப்பதா இல்லையா என்று. அப்போது எரித்திய மக்கள் அனைவரிடமும் ஒரு வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

எரித்தியா தனிநாடாகப் போக வேண்டுமா இல்லையா என்பது. நீங்களே தீர்மானியுங்கள் என்று. எரித்திய மக்கள் நாங்கள் தனிநாடாகத் தான் இருக்க விரும்புகின்றோம் என்று வாக்களித்தார்கள். எரித்தியா என்கின்ற தனிநாடு 1993இல் உருவானது.

### விடுதலைக்காக உச்ச விலை:

1885ம் ஆண்டுக்கு முன்னர் இப்போது எரித்திரியா என்று அழைக்கப்படும் நிலப்பரப்பு உள்ளூர் போர்ப் பிரபுக்களால் அல்லது செங்கடல் பகுதியில் செல்வாக்கு செலுத்திய பன்னாட்டு சக்திகளால் ஆளப்பட்டு வந்தது. எதியோப்பியாவின் பிடியில் இருந்து எரித்திரியா விடுதலை பெற 30 ஆண்டுகளுக்கு மேலாக ஆயுதம் தாங்கி போராடியது. விடுதலைக்காக இந்த நாடு உச்ச விலை கொடுத்துள்ளது.



எரித்திரியா 1890 இல் செங்கடலில் இத்தாலியால் குடியேற்ற நாடாக உருவாக்கப்பட்டது. 1896 இல் எதியோப்பியா மீது இத்தாலி படை எடுத்தது. அப்படை எடுப்பின் போது எரித்திரியா தன் தளங்களை இத்தாலிக்கு வழங்கியது. ஆனாலும் படையெடுப்பு எதியோப்பியாவால் முறியடிக்கப்பட்டது.

1936 இல் இத்தாலி மீண்டும் எதியோப்பியா மீது போர் தொடுத்தது. இம்முறை எரித்திரியா இத்தாலியுடன் இணைந்து போரிட்டது. இத்தாலி எதியோப்பியாவை தன் ஆளுகைக்குள் கொண்டுவந்தது. இரண்டாம் உலகப்போரின் முடிவில் இத்தாலியின் ஆதிக்கம் முடிவுக்கு வர எதியோப்பியாவும் எரித்திரியாவும் இங்கிலாந் தின் வசமாகின.

### எரித்திரியா விடுதலைப் போராட்டம்:

ஏரித்தியர்களது சுதந்திரத்துக்கான போரைத் தொடக்கி வைத்ததன் விளைவாக, 1962இல் மன்னர் ஹேயிலி லொஸ்சி ஏரித்தியா நாடாளுமன்றத்தைக் கலைத்து விட்டு அதனை எத்தியோப்பியவோடு வலுக்கட்டாயமாக இணைத்துக் கொண்டார்.

1974ம் ஆண்டு இராணுவப் புரட்சி மூலம் ஹேயிலி செலாஸ்சி அரியணையில் இருந்து அகற் றப்பட்ட பின்னரும் சுகந்திரத்துக்கான எரித்தியாவின் போராட்டம் தொடர்ந்தது. மார்க்ஸ்சிஸ்ட் சார்பான எத்தியோப்பிய அரசின் இராணுவ ஆட்சி படைத்தளபதி மென்ஜாஸ்ட்டு ஹேயிலி மரியம் தலைமையில் இயங்கியது.

1960களில் ஏரித்தியாவின் விடுதலைப் போராட்டம் ஏரித்திரிய விடுதலை முன்னனி தலைமையில் தொடங்கியது.

1970ம் ஆண்டு கடைசிப்பகுதியில் இபிஎல்எவ் எத்தியோப்பிய நாட்டுக்கு எதிராகப் போராடும் குழுகளுக்கு இடையில் முதல் இடத்தைப் பிடித்தது. அதன் தலைவராக இசியாஸ் அவ்வேர்கி செயல்ப்பட்டர்.

இபிஎல்எவ் எத்தியோப்பிய படைகளிடம் இருந்து கைப்பற்றிய ஆயுதங்களை எத்தியோப்பிய படைக்கு எதிராகப் பயன்படுத்தியது. 1970ல் இருந்த முன்னணியில் இருந்து சிலர் பிரிந்து சென்று எரித்தியன் மக்கள் விடுதலை முன்னனி என்ற அமைப்பை உருவாக்கினார்கள்.

1977இல் எத்தியோப்பிய படையை எரித்தியாவில் இருந்து விரட்டும் நிலையில் இபிஎல்எவ் இருந்தது. ஆனால் அதே ஆண்டு எத்தியோப்பியாவுக்கு சோவியத் போர்த் தளபாடங்களையும் பெருமளவு ஆயுதங்களையும் வான் வழியாக கொண்டு சென்று குவித்தது.

### எத்தியோப்பிய படைகள் பின்வாங்கல் :

இதனால் எத்தியோப்பிய படைகள் பின்வாங்குவதை விடுத்து முன்னேறி இபிஎல்எவ் படையணிகளை புதருக்குள் தள்ளியது. 1978 மற்றும் 1986 காலப்பகுதியில் எத்தியோப்பிய அரச படைகள் எட்டு முறை பாரிய படையெடுப்பை இபிஎல்எவ் க்கு எதிராக மேற்கொண்டது. அத்தனை படையெடுப்புக்களும் இறுதியில் படு தோல்வியல் முடிந்தன.




இபிஎல்எவ் மரபுவழி தாக்குதலையும் கொரிலா தாக்குதல்களையும் எத்தியோப்பிய படைகளுக்கு எதிராக சமகாலத்தில் மேற்கொண்டது. 1978 மே மாதத்தில் எரித்தியாவின் தென்பகுதியில் நிலை கொண்டிருந்த எரித்தியாவின் புரட்சிப் படைகளை அழித்தொழிக்கும் முகமாக 100,000 ஆயிரம் எத்தியோப்பிய படைகள் எதிர்தாக்குதலில் ஈடுபடுத்தப்பட்டது.

1984 மே மாதத்திலும் 1986இலும் அஸ்மேரா என்றா விமான தளத்தை இபிஎல்எவ் கொமான்டோ அணி ஊடுருவித்தாக்கியது. இத்தாக்குதலில் 40 விமானங்கள் அழிக்கப்பட்டன. ஆயுதக் களஞ்சியங்களும் எரிபொருள் சூதங்களும் ஏரியூட்டப்படடன.

1980ல் இபிஎல்எவ் எரித்தியாவின் வடகிழக்கே அவபெட் என்ற நகரில் அமைந்துள்ள எத்தியோப்பிய படையின் தலைமையகத்தை தாக்கி கைப்பற்றியது. அதே சமயம் ஏனைய ஆயுதப் போராட்டக் குழுக்கள் எத்தியோப்பாவிற்குள் ஊடுருவி தாக்கிக் கொண்டிருந்தார்கள்.

### சோவியத் யூனியன் ஆதரவு

இந்தப் போராட்ட காலகட்டங்களில் எரித்திரியாவுக்கு ஆதரவளித்து வந்த சோவியத் யூனியன் நிலை மாறுகிறது. இப்பொழுது சோவியத் யூனியன் பக்கம் மாறி எதியோப்பியாவின் பக்கம் சாய்கிறது. இராணுவ உதவிகளைக் கொட்டிக் குவிக்கிறது. எதியோப்பியாவுக்கு சோவியத் யூனியன் உதவிட எதியோப்பியாவின் படையெடுப்புக்குத் தாக்குப் பிடிக்க முடியாத எரித்திரியா பின்வாங்குகிறது தோல்வியைத் தழுவிக்கொண்டு! ஆயினும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மலைப்பிரதேசங்களில் நிலை கொண்ட போராளிகள் தொடர்ந்து போராடுகிறார்கள். எவ்வித விட்டுக்கொடுப்புமின்றி. அவர்களை முற்றாக அழித்து விட முடிவதில்லை.

எதியோப்பிய அரசால் இந்தச் சந்தர்ப்பத்தில் இபிஎல்எவ் முக்கியஸ்தர்கள் பலர் கட்சி மாறி இணைந்து கொள்கிறார்கள் எதியோப்பிய அரசோடு. இன்னும் பலர் விலகிச் சென்று விடுகின்றனர்..

1989 இல் கொர்பச்சேவின் ஆட்சிக் காலத்தில் கிளாஸ்நோஸ்ற், பெரஸ்ரோறிக்கா என்று மாற்றங்கள் எற்பட்டு சோசலிச ஆட்சிக் கொள்கைகள் மாற்றம் பெற்று சோவியத் யூனியன் உடைகிறது.

ரஷ்யாவின் வெளிவிவகாரக் கொள்கைகளில் நிறைய மாற்றங்கள் ஏற்படுகிறது. அதன் காரணமாக எதியோப்பியாவுக்கு வழங்கப்பட்டு வந்த இராணுவ உதவிகள் ரஷ்யாவால் நிறுத்தப்படுகின்றன. மீண்டும் எரித்திரிய இபிஎல்எவ மீண்டெழுந்து தனது நிலத்தைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது.

1993 இல் எரித்திரியா உத்தியோககபூர்வமாகத் தனது சுதந்திரப் பிரகடனத்தைச் செய்து முடிக்கின்றது.

1993 ஏப்ரலில் 23-25 நாட்களில் நடந்த நேரடி வாக்கெடுப்பில் எரித்தியா எத்தியோப்பிய நாட்டில் இருந்து பிரிந்து சுதந்திர நாடாக மாற வேண்டும் என்பதற்கு ஆதரவாக பெரும்பான்மை மக்கள் வாக்களித்தார்கள். எரித்தியா மக்கள் அந்த சுதந்திரத்தை மே 24இல் அதிகாரபூர்வமாக கொண்டாடி மகிழ்ந்தார்கள். சுதந்திரமான இந்த நேரடி வாக்கெடுப்பு ஐநா கண்காணிப்பில் நடைபெற்றது. இதனை தொடர்ந்து எரித்திய தலைவர்கள் எரித்தியாவின் சுதந்திரத்தை ஏப்ரலில் 27 இல் பிரகடனப்படுத்தினார்கள்.

நிண்டகாலம் போராடிய எரித்திரியாவின் இன்றைய நிலை மகிழ்வானதாக இல்லை என்பதும் உண்மையே. ஆபிரிக்காவின் மறுமலர்ச்சி நாடுகளில் ஒன்றாக மிளிரும் என எதிர்பார்க்கப்பட்டது. அத்துடன் தோல்வியை நோக்கும் பொருளாதர வளர்ச்சியினாலும், நீண்ட கால சர்வாதிகார ஆட்சியினால் இக்கனவும் தகர்ந்தது.

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்


கல்வி tv CHANNEL

1) C 2) E 3) F


24. மூன்று கால் மேசை ஒன்றைச் சுற்றி நாற்காலிகள் மூன்று உள்ளன. அங்கு காணப்படும் கால்களின் எண்ணிக்கை யாது?
1) 16 2) 15 3) 13

25. சத்தி, நிஷான், விஜய், அருண் ஆகிய நால்வரில் விஜயிலும் உயரம் குறைந்தோர் இருவர் மட்டுமே உள்ளனர். நிஷானிலும் உயரம் குறைந்தோர் ஒருவர் மட்டும் உள்ளார். சத்தி மாத்திரம் நிஷானிலும் உயரம் குறைந்தவர் ஆவார். நால்வரில் உயரம் கூடியவர் யார்?
1) விஜய் 2) நிஷான் 3) அருண்


26. ஒரு வரிசையில் கமலா முன்னாலிருந்து 7 ஆவதாகவும் விமலா பின்னாலிருந்து 4 ஆவதாகவும் உள்ளனர். அவர்கள் இருவருக்குமிடையில் இரண்டு பேர் உள்ளனர். அவ்வரிசையில் மொத்தம் எத்தனை பேர் உள்ளனர்?
1) 13 2) 14 3) 15

27. 
உருவில் உள்ள வடிவத்தைப் புள்ளிக்கோட்டின் வழியே வெட்டும்போது கிடைக்கும் முகத்தின் வடிவம்
1) சதுரம் 2) செவ்வகம் 3) அரியம்

28. மகனை விட அப்பா உயரம் கூடியவர் என்பது
1) எப்பொழுதும் உண்மையானது
2) சில சமயம் உண்மையானது
3) எப்பொழுதும் பொய்யானது

29.  இச் சிறிய முக்கோணத்தின் சுற்றளவு 9cm எனின்  இம்முக்கோணியின் சுற்றளவு யாது?
1) 12cm 2) 18cm 3) 36cm

30. படகு ஒன்றில் 30 பேர் பயணிக்கலாம் எனின் 100 பேர் பயணிப்பதற்கு எத்தனை படகுகள் தேவை?
1) 3 2) 2 3) 4


31. 

வெறுமையான கட்டத்துக்குப் பொருத்தமான எண் யாது?
1) 14 2) 10 3) 12

32. அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.


| பூக்கள் | பழங்கள் | D |
|---|---|---|
| A | மாம்பழம் | கத்தரி |
| மல்லிகை | அன்னாசி | வெண்டி |
| செவ்வந்தி | C | தக்காளி |

அட்டவணையில் ACD ஆகியவற்றுக்குப் பொருத்தமான விடைகள் முறையே
1) நித்திய கல்யாணி, பலாப்பழம், காய்கறிகள்
2) முருங்கை, காய்கறிகள், வெண்டி
3) கீரை, பருப்பு, சோயா

33. 


நித்திய கல்யாணிப் பூவைக் குறிக்கும் எழுத்து
1) அ 2) ஆ 3) இ

❖ 34, 35 ஆம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள உருவைக் கொண்டு விடையளிக்குக.

34. 

பிள்ளை காலையில் தான் நிற்கும் இடத்திலிருந்து பாடசாலை நோக்கிச் செல்லும்போது எத்தனை தடவை தெற்கு பக்கமாகச் செல்ல வேண்டும்?
1) 2 தடவைகள் 2) 3 தடவைகள் 3) 4 தடவைகள்

35. இப் பிள்ளை காலையில் பாடசாலைக்குச் செல்லும்போது இவரது நிழல் எத்தனை தடவை முன்னால் விழுந்தது?
1) [illegible] தடவைகள் 2) 5 தடவைகள் 3) 4 தடவைகள்

36. 
இவ்வுருவில் $\frac{3}{8}$ நிறம் தீட்ட வேண்டும் எனின் மேலும் எத்தனை துண்டங்களுக்கு நிறம் தீட்ட வேண்டும்?
1) 2 2) 3 3) 4

## விடைகள்

| | | |
|---|---|---|
| 24. 2 | 28. 2 | 32. 1 |
| 25. 3 | 29. 2 | 33. 1 |
| 26. 1 | 30. 3 | 34. 2 |
| 27. 2 | 31. 1 | 35. 1 |

---

கல்வி tv CHANNEL-1

### 27.11.2022 ஞாயிற்றுக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

கல்வி tv CHANNEL - 2

### 27.11.2022 ஞாயிற்றுக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# வட்டுக்கோட்டை வைத்தியசாலையில் சீரான அம்புலன்ஸ் வசதிகள் இல்லை!

## அவதியுறுகின்றனர் நோயாளிகள்

யாழ்ப்பாணம், டிசெ. 04

வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலையில் அம்புலன்ஸ் வசதி இல்லாததால் தாங்கள் அவதியுறுவதாக வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலைக்கு செல்லும் நோயாளிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் அப்பகுதி மக்கள் தெரிவிக்கையில் -

வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலையில், அராலி, துணவி, முதலிய கோவில் சங்கரத்தை, சித்தங்கேணி, மூளாய், சுழிபுரம் மற்றும் பொன்னாலை பகுதிகளைச் சேர்ந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். ஆனால் குறித்த வைத்தியசாலையில் சீரான ஆம்புலன்ஸ் வசதிகள் இல்லை.

கடந்த 23 ஆம் திகதி இளம் குடும்பப்பெண் ஒருவர் தவறான முடிவெடுத்து தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளார். அதனைப் பார்த்த சிறுமி ஒருவர் மூச்சுத்திணறல் ஏற்பட்டு மயக்கமுற்றிருந்தார்.

இந்நிலையில் குறித்த சிறுமியை வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்ற வேளை அவருக்கு அங்கு முதலுதவிகள் வழங்கப்பட்டன. பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லுமாறு வைத்தியர்கள் கூறினர்.

அதற்கு நாங்கள், வைத்தியசாலை அம்புலன்ஸில் அழைத்துச் செல்லுமாறு கூறினோம். அதற்கு அவர்கள், வைத்தியசாலை அம்புலன்ஸ் இல்லை எனக் கூறினார்கள். ஆனால் வைத்தியசாலையில் அம்புலன்ஸ் ஒன்று நிற்பதை அவதானித்த நாங்கள் அம்புலன்ஸ் நிற்கிறது தானே, அந்த அம்புலன்ஸில் அழைத்துச் செல்லுங்கள் எனக் கூறினோம்.

அதற்கு அவர்கள், இந்த அம்புலன்ஸ் காரைநகர் வைத்தியசாலையின் அம்புலன்ஸ். கல்லூண்டாய் பகுதியில் வந்துகொண்டிருந்தவேளை இந்த அம்புலன்ஸ் பழுதடைந்துள்ளமையால் இங்கு கொண்டு வந்து பல நாட்களாக நிறுத்தப்பட்டுள்ளது.

எமது வைத்தியசாலையின் அம்புலன்ஸ் காரைநகர் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. காரைநகரில் இருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கான தூரம் அதிகம் என்பதால் அங்கு உள்ள நோயாளிகளை யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்வதற்கு எமது அம்புலன்ஸ் பயன்படுத்தப்படுகிறது. மாலை தான் எங்களது வைத்தியசாலையின் அம்புலன்ஸ் வரும் என கூறினர்.

இந்நிலையில் மூச்சுத்திணறல் ஏற்பட்டு மயக்க நிலையில் இருந்த சிறுமி சிகிச்சை வசதிகள் அல்லது முதலுதவிகள் எதுவும் இல்லாத ஓட்டோ மூலமே யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

எமது வைத்தியசாலை ஒரு பிரதேச தரத்திலான வைத்தியசாலை. ஆனால் இங்கு 24 மணிநேர வைத்திய சேவைகள் இல்லை. அவசரம் என்று வருபவர்கள் மேலதிக சிகிச்சைக்காக, எந்தவிதமான மருத்துவ வசதிகளும் இல்லாத தனியார் வாடகை வாகனங்களில், உயிரை கைகளில் பிடித்துக் கொண்டுதான் யாழ். போதனா வைத்தியசாலைக்கு செல்ல வேண்டிய நிலை.

இந்த பிரச்னை இன்று நேற்று அல்ல, பன்னெடுங்காலமாக இடம்பெற்று வருகிறது. அம்புலன்ஸ் இருந்தாலும், சாரதி இல்லை அல்லது வேறு ஏதாவது காரணங்கள் கூறி அம்புலன்ஸ் சேவையில் ஈடுபடுத்தப்படுவதில்லை. வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலையின் அம்புலன்ஸ் சேவை என்பது எமக்கு எட்டாக் கனியாகவே காணப்படுகிறது.

பழுதடைந்த அம்புலன்ஸ் நிறுத்திவைப்பதற்கு இது வாகனங்கள் திருத்தும் நிலையமா அல்லது வைத்தியசாலையா? எங்களது வைத்தியசாலை அம்புலன்ஸ் எங்களுக்கு தேவை. 24 மணிநேர வைத்திய சேவைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இந்நிலைகள் சீருக்கு வராத பட்சத்தில் நாங்கள் பாரிய போராட்டத்தை முன்னெடுக்கவேண்டி ஏற்படும். எனவே வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எமக்கு விரைவில் உரிய தீர்வினை வழங்க வேண்டும் - என்றனர். (அ)

# மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் மின்விளக்குகள் திருடியவர்கள் கைது

கொழும்பு, டிசெ. 04

மொரட்டுவை பல்கலைக்கழக வளாகத்தினுள் பாதுகாப்பு கமராவில் சிக்காமல் உள்ளே நுழைந்து நிர்மாணிக்கப்பட்டு வரும் கட்டட வளாகத்தில் இருந்த 10 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியான மின் சாதனங்கள் மற்றும் மின்விளக்குகளை திருடிய சந்தேகநபர்கள் இருவரை கைது செய்துள்ளதாக மொரட்டுவை பொலிஸார் தெரிவித்தனர்.

முறைப்பாட்டின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது, சந்தேகநபர்கள் பாதுகாப்பு கமராக்களை தவிர்த்து மிக நுணுக்கமாக களஞ்சிய அறைக்குள் பிரவேசித்துள்ளமை தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, சந்தேகநபர்கள் பற்றிய தடயங்களைத் தேடி மொரட்டுவை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இரு குழுக்களை நியமித்து நடத்தப்பட்ட விசாரணையில், திருடப்பட்ட மின்விளக்குகள் கடைகளுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும், கடை உரிமையாளர்களிடம் இருந்து கிடைத்த துப்புகளின் அடிப்படையில் சந்தேகநபர்கள் இருவரையும் கைது செய்ய முடிந்ததாகவும் போலிஸார் கூறினர்.

50இற்கும் மேற்பட்ட மின்விளக்குகள் கடைகளுக்கு விற்பனை செய்துள்ளமையும் விசாரணைகளின் ஊடாக தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்கள் ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் என பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர். (அ)

# புதிதாக ஏழு கட்சிகள் பதிவு

கொழும்பு, டிசெ. 04

ஏழு புதிய அரசியல் கட்சிகளுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

2022 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களில் 07 கட்சிகளை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளாக நியமிக்க தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாக அதன் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

அண்மையில் கூடிய தேர்தல் ஆணைக்குழு இந்த முடிவை எடுத்துள்ளது.

ஐக்கிய காங்கிரஸ் கட்சி, இரண்டாம் தலைமுறை, ஸ்ரீலங்கா சமூக ஜனநாயகக் கட்சி, தேசப்பற்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சி, பகுஜன வியத் பெரமுன, ஈரோஸ் ஜனநாயக முன்னணி மற்றும் ஜனநாயக மக்கள் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளாக பெயரிடப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

# தேசமாக கோரிக்கை முன்வைப்பதென்றால்....

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேசமாக, தனிநாட்டையும் கோரலாம்? பொதுசன வாக்கெடுப்பை கோரலாம்? சமஸ்டியை கோரலாம்? தேசமாக கோரிக்கையை முன்வையுங்களென்று கூறுபவர்கள் முதலில் தெளிவாக பேசப்பழக வேண்டும். ஓரணியாக சேர்ந்து இவற்றையெல்லாம் கோரிவிட்டால், உடனே தமிழர்களின் பிரச்சினை தீர்ந்துவிடுமா? 1949ம் ஆண்டிலிருந்துதானே சமஷ்டியை கோருகின் றோம் - அதனை அடைய முடியவில்லையே- ஏன்? கூட்டாகத்தானே கோரியிருந்தோம்? இதே போன்றுதான், சிலர், தேசமாக ஜெனிவாவை எதிர்கொள்ள வேண்டுமென்று கூறுவதுமுண்டு? ஓரணியில் நீங்கள் ஒரு விடயத்தை கூறிவிட்டால், உடனே இந்தியாவும், அமெரிக்காவும், அதனை தலையால் சுமந்துசென்றுவிடுமோ! எனவே, இங்கு பிரச்சினைகளை ஓரணியாக பேசுவது மட்டுமல்ல விடயம், எதனை, எப்படி, பேசுவதென்பதுதான் எல்லாவற்றைவிடவும் முக்கியமானது.

அந்த அடிப்படையில் நோக்கினால், இன்றைய சூழலில், ஓரணியாக நிற்பது மட்டுமல்ல முக்கியம், சூழ்நிலையை கையாளுவதற்கான யதார்த்தபூர்வமான அணுமுறையில் அனை வரும் ஒன்றாக நிற்பதுதான், எல்லாவற்றை விடவும் முக்கியமானது. இன்றைய சூழலில், உடனடியாக மாகாண சபை தேர்தலை நடத்த வேண்டும், 13வது திருத்தச்சட்டத்தை முழுமை யாக அமுல்படுத்த வேண்டும், இதனைத் தொடர்ந்து அடுத்தகட்டம் தொடர்பில் பேசுவோமென்று கூறுவதில்தான், தேசமாக நிற்க வேண்டும். ஆய்வாளர்கள் என்போரும் மதில் - மேல் பூனையாக இருக்காமல், மக்களின் இருப்பை உறுதிப்படுத்திக் கொண்டு முன்நகர்வ தற்கான அணுகுமுறைகள் தொடர்பில் சிந்திக்க முன்வர வேண்டும்.

ஒரு கேள்வி? தேசமாக நீங்கள் சமஸ்டியை கோரும் போது, சிங்களவர்கள் வழமைபோல் உதாசீனம் செய்தால், அடுத்து தேசமாக நீங்கள் என் செய்வீர்கள்? அதனைக் கூறும் வல்லமை யோடு எவராவது இருக்கின்றீர்களா? 2009இற்கு முன்னர் அந்த வல்லமை பிரபாகரனிடம் இருந்தது. உங்களிடம்? மாற்றுவழியின்றி, வெறுமனே ஊடகசந்திப்புக்களை நடத்திக் கொண்டிருப்பதால் என்ன பயனுண்டு? இதுதானே கடந்த 13 வருடங்களாக நடந்துவருகின்றது? இப்படியே சமஸ்டியை உச்சரித்துக் கொண்டு, இருக் கும் மக்களையும் புலம்பெயர வைத்து, இறுதியில் கிழக்கில் போன்று, வடக்கிலும் பல்லினத்தன்மையை ஏற்படுத்துவதுதான் உங்கள் இலட்சியமா?

எனவே மக்களை பற்றி சிந்தித்து, செயற்படுவதே நம்மனைவரதும் கடமையாகும். மக்கள் என்பது, வெறுமனே, யாழ்ப்பாணம் மட்டுமல்ல, முழு வடக்கு கிழக்கும் என்பதை உணருங் கள். சமஸ்டி தொடப்பில் இங்கு யாரும் புதிதாக பாடமெடுக்கவேண்டியதில்லை. அது நமது இலக்காக இருக்கட்டும் - முன்னரைப் போலவே! 1949ம் ஆண்டியிலிருந்து சமஸ்டியை கோரிக் கொண்டுதான், ஒற்றையாட்சிக்குள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

கஜேந்திரகுமார் கூறுகின்றார், ஒற்றையாட் சிக்குள் அரசியல் தீர்வை முடக்குவதற்கு சதி நடக்கின்றதாம். ஒற்றையாட்சியிலிருந்து வெளிவருவதற்கு கிடைத்த அரிய-வரலாற்றுச் சந்தர்பத்தை நாசமாக்கியவர்களில் ஒருவர், அவரது பாட்டனார் ஜி.ஜி.பொன்னம்பலம் என்பது வரலாறு. இப்போதும் பாட்டனாரின் கட்சியையே, எந்தவொரு மாற்றமுமில்லாமல், பேரனான கஜன் பொன்னம்பலம் காப்பாற்றிவருகின்றார். தமிழ் மக்கள் பேரவைக்குள் ஏற்பட்ட குழப்பங்களை தொடர்ந்து, பேரவையில் அங்கம்வகித்த, பிறிதொரு கட்சியான டி.பி.எல்.எப் (புளொட்) இந்தக் கேள்வியை முன்வைத் திருந்தது. அதற்கு பதிலில்லை. ஒரு வேளை கஜன் கட்சியின் யாப்பை மாற்றியிருந்தால், அதனை பொதுவெளியில் முன்வைக்க வேண்டும். மற்றவர்களை நோக்கி விரல் நீட்டு வதற்கு முன்னர், தங்களை திரும்பிப்பார்ப்பதற்கு பழக வேண்டும். அது தான் நல்ல அரசியல் பண்பாகும்.

இன்னும் அரசியல் அறிவோம்.

உங்கள் துயரங்களை பகிர்ந்துகொள்ள
யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு தளம்
துயர் நெற் THUYAR.NET
துயர் நெற்றில் பிரசுரமாகும்
அனைத்து விளம்பரங்களும்
யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும்
ஈழநாடு Eelanadu
ஈழநாடு தினசரியிலும் வெளியிடப்படும்
யாழ்ப்பாணத்திலிருந்து ஒளிபரப்பாகும்
DAN NEWS
டான் நியூஸ் தொலைக்காட்சியிலும் ஒளிபரப்பாகும்
விபரங்களுக்கு: thuyar.net Tel: 0094 752 225 225

## வடக்கு மாகாண...

சீ.வீ.கே. சிவஞானம் இரண்டாவது கடிதம் எழுதியுள்ளார்.

01.12.2022 திகதியிடப்பட்டு ஆங்கிலத்தில் அனுப்பப்பட்ட அந்தக் கடிதத்தின் தமிழாக்கம் வருமாறு:-

வடக்கு மாகாண ஆளுநரின் அரசமைப்பு மீறல்:

மேற்குறிப்பிட்ட விடயத் தலைப்பிலான எமது 24.11.2022 ஆம் திகதிய கடிதத்தின் தொடர்ச்சியாக எழுவது,

வடக்கு மாகாண சபையால் 2017 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க வடக்கு மாகாண சுற்றுலாத்துறை பணியக நியதிச் சட்டம் நிறைவேற்றப்பட்டு, 10.10.2018 ஆம் திகதி ஆளுநரால் ஒப்புதல் வழங்கப்பட்டு 2054/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி யில் பிரசுரிக்கப்பட்ட நியதிச் சட்டம் ஒன்று அமுலில் இருக்கையில், அதே விடயத்தில் அதற்கு ஒத்ததான புதிய நியதிச் சட்டமொன்றை உருவாக்கிய ஆளுநரின் மாகாண நிர்வாகம் தொடர்பான மற்றும் நியதிச் சட்டவாக்கம் தொடர்பான கேலிக்கூத்தான செயற்பாட்டை தங்கள் கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகின்றேன்.

ஏற்கனவே ஒரு நியதிச் சட்டம் அமுலில் இருந்தமை பற்றி, அதனைப் பிரதி பண்ணிய ஆளுநர் மிகத் தெளிவாக அறிந்திருந்தார் என்பது இதனால் வெளிப்படை.

ஆளுநரால் நியதிச் சட்டம் எனக் கூறப்படும் ஆவணத்தின் உள்ளடக்கம் 90 வீதம் மேலே குறிப்பிடப்பட்ட மாகாண சபையால் உருவாக்கப்பட்ட நியதிச் சட்டத்தை ஒத்ததாகவே உள்ளது.

அதிலுள்ள முக்கிய மாற்றம் பணியகத்தின் முகாமைத்துவ சபையின் அமைப்பு தொடர்பானதாகும்.

ஏனைய உறுப்பினர்களை தமது நோக்கங்களைப் பூர்த்தி செய்வதற்காக வெளியே இருந்து நியமிக்கும் அதிகாரத்தைத் தமதாக்கிக் கொள்வதற்காகவே இவ்வாறு செயற்பட்டுள்ளார்.

ஊடகச் செய்திகளின்படி தமது வடக்கு மாகாண சுற்றுலா பணியகத்தின் தலைவராக சுனில் திஸாநாயக்க என்பவரை நியமித்தமையும், அவர் பாய்ந்தடித்து பலாலி விமான நிலையம் இம்மாதம் 12 ஆம் திகதி முதல் மீளவும் சேவைகள் ஆரம்பிக்கும் என ஊடக அறிக்கை வெளியிட்டமையிலிருந்து வெளிப்படையாகின்றது.

ஆச்சரியப்படும் வகையில் இதுவும் இலங்கையின் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் தலைவரான முன்னாள் வடக்கு மாகாண ஆளுநர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் சந்திரசிறியின் அதிகாரங்களை முறையற்ற விதத்தில் தமதாக்கிக் கொண்டமையாகக் காணப்படுகின்றது.

இந்த ஆளுநரின் அதிகார துஷ்பிரயோகம் மற்றும் அரசமைப்பு மீறல்களுக்கான குறியீடாக இவை அமைவதால் நான் மேலும் ஆழமாகச் செல்ல விரும்பவில்லை.

இவற்றுக்கு எதிரான தங்கள் மிகத் துரிதமான, சாத்தியமான நடவடிக்கைக்குச் சமர்ப்பிக்கப்படுகின்றன - என்றுள்ளது. (அ)

## இலங்கையின்...

இது தொடர்பாக பரிஸ் சொசைற்றி வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையை மீட்டெடுக்க கடன் வழங்குபவர்கள் பெரும் இழப்பைச் சந்திக்க நேரிடும்.

எவ்வாறாயினும், இலங்கையின் மிகப் பெரிய கடனாளிகளான சீனா மற்றும் இந்தியாவிடம் பரிஸ் சொசைற்றி அதிகாரபூர்வமாக இந்த முன்மொழிவை முன்வைக்கவில்லை.

டிசெம்பரில் அனைத்துலக நாணய நிதியத்திடம் இருந்து கடனைப் பெறுவதற்கு செயற்குழுவின் ஒப்புதலைப் பெற இலங்கை எதிர்பார்த்துள்ளது. ஆனால், சீன அரசாங்கம் அதிகாரபூர்வமாக பேச்சுவார்த்தைகளை தொடங்காததன் காரணமாக டிசெம்பர் காலக்கெடு மிகவும் கடினமாக உள்ளது.

எனவே, அனைத்துலக நாணய நிதியத்திடம் இருந்து இலங்கைக்கான கடனுதவிக்கான செயற்குழுவின் அனுமதியை எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள கூட்டத்தில் இலங்கை பெற்றுக்கொள்ளும் என நம்பலாம்.

எவ்வாறாயினும், சர்வதேச நாணய நிதியத்தின் அங்கீகாரம் கிட்டும்வரை இலங்கைக்கு அடுத்த மூன்று மாதங்களுக்கு குறுகிய கால நிதி தேவை. இலங்கையில் அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடி நிலைமைகள் இயல்பு நிலைக்கு திரும்புவதற்கு முன்னர் மோசமாகி விடும்-என்றுள்ளது. (அ)

## உணவுப்...

தோட்டத்தில் சேதன நகர வீட்டுத் தோட்டத்தில் பயனாளிகளுக்கு மரக்கன்றுகளை வழங்கி உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த நாட்டில் உணவுப் பஞ்சம் ஏற்படும் என பாதீடு தொடர்பாக பாராளுமன்றத்தில் கதைக்கும் அரசியல்வாதிகளும் மற்றும் நிபுணர்களும் கூறுகின்றனர்.

ஆனால், ஏற்கனவே இந்த நாட்டில் உணவுப் பஞ்சம் வந்துவிட்டது. இதன் தாக்கம் இன்னும் சில நாட்களில் மோசமாக தெரியக்கூடிய வாய்ப்புள்ளது.

நிறை குறைந்த பிள்ளைகள் பிறக்கின்றார்கள். பாடசாலை மாணவர்கள் மந்தபோசனையால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்று கூறுகின்றனர்.

உணவுப் பணவீக்கம் 90 வீதமாக உள்ளது. உலகத்திலேயே உணவுப் பணவீக்கம் கூடிய நாடுகளிலும் 6 ஆவது இடத்தில் இலங்கை உள்ளது.

இதற்கான காரணத்தை நாம் பார்க்க வேண்டும். அரசியல் ரீதியான கொள்கை வகுப்பாளர்கள் நிதானமான கொள்கை வகுப்பை மேற்கொள்ளவேண்டும்.

வவுனியாவில் விலங்குகளை மேய்ச்சலுக்கு விட மேய்ச்சல் தரை இல்லை. கடந்த 20 வருடங்களாக மாவட்ட செயலகக் கூட்டங்களில் மேய்ச்சல் தரை தொடர்பில் கதைத்துக்கொண்டிருக்கின்றோம். ஆனால், இதுவரை எந்த விதமான ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே, அரசு நாட்டில் விவசாயம் தொடர்பான கொள்கை வகுப்பை மேற்கொள்ளும்போது அரசியலுக்காக இல்லாமல் மாவட்டங்களுக்கு ஏற்ற வகையில் உருவாக்கவேண்டும்.

இன்னும் சில காலத்தில் உணவுப் பஞ்சத்தின் விளைவை சுகாதார குறிகாட்டிகளில் அவதானிக்கக் கூடியதாக இருக்கும்-என்றார். (அ)

## சம்பிரதாயத்...

தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதியின் கட்சி உறுப்புரிமை இரத்து செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கட்சி உறுப்பினர்கள் குழுவொன்று நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளமை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்தனகல்ல பகுதியில் அமைந்துள்ள ஹொரகொல்ல, பண்டாரநாயக்க சமாதிக்கு முன்பாக கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்ரிபால சிறிசேன மற்றும் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர ஆகியோரின் அச்சிடப்பட்ட பதாகையை தரையில் வீசி தேங்காய்களை வீசி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (அ)

## பாராளுமன்ற...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலைக்கு தேவையான அடிப்படை மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவி வருகின்றது. வைத்தியசாலை தரப்பினர் இது தொடர்பில் அறிவித்திருக்கின்றனர். அதேவேளை நாட்டு மக்களின் பிரதிநிதிகளாக இருக்கும் எங்களுடைய தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த விடயங்களில் வெளிநாட்டு தூதரகங்கள் மற்றும் சமூக நிறுவனங்களினூடாகவோ இந்த புற்றுநோய் வைத்தியசாலைக்கு செல்லும் மக்களின் அவலநிலையை இன்னும் போக்கியதாக தெரியவில்லை.

எங்களை பொறுத்தவரையில் பல்வேறு சமய நிறுவனங்களினூடாக குறித்த வைத்தியசாலைக்கு இலட்சக்கணக்கான ரூபா செலவில் மருந்துப் பொருட்களை வழங்கி வருகின்றோம்.

எனவே தயவு செய்து பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஏனைய அரசியல் தரப்பினர் நேரடியாக குறித்த இடங்களுக்கு சென்று அங்குள்ள விடயங்களை ஆராய்ந்து அக்கறை செலுத்த வேண்டும்.

எனவே உடனடியாக எமது மக்கள் பிரதிநிதிகள் யாழிலுள்ள வைத்தியசாலைகளுக்குச் சென்று அடிப்படைத் தேவையான மருந்து விபரங்களை எடுத்து தங்களது சிறப்புரிமைகளை பயன்படுத்தி இந்தியா உள்ளிட்ட வெளிநாட்டுத் தூதரங்களின் ஊடாக உடனடியாக மருந்து உதவியை பெற்றுக்கொடுக்க முன்வரவேண்டும்.

அதேவேளை இந்தவிடயம் தொடர்பில் புலம்பெயர் சமூகம் உதவி செய்ய காத்திருக்கின்றனர். இது தொடர்பில் அவர்களுக்கு தெரியப்படுத்தப்படவேண்டும்.

பாராளுமன்றில் மக்கள் பிரதிநிதிகள் தற்போது பேசப்படும் விடயங்கள் பெறுமதியற்றவைகள். பாராளுமன்ற உரைகளினூடாக எதனையும் பெற்றுக் கொடுக்க முடியாது. எனவே மக்கள் பிரதிநிதிகள் நோயுற்ற துன்பப்படும் மக்கள் மத்தியில் நேரில் சென்று அவர்களின் பிரச்சினைகளை கேட்கவேண்டும்.

சேலைனுக்கு கூட இன்று தட்டுப்பாடு வரவுள்ளது. இந்நிலையில் தெல்லிப்பளை வைத்தியசாலை தரப்பினர் கூறும்போது இதுவரை வேறுவொரு மக்கள் பிரதிநிதிகளும் மருந்து கொண்டு வந்து தரவில்லை என்கின்றனர்.

அதேவேளை சைவசமய நிறுவனங்கள் தொடர்ச்சியாக வைத்தியசாலைகளுக்கு உதவிகளை வழங்கி வருகின்றன.

எனவே சகல மக்கள் பிரதிநிதிகளிடமும் வேண்டிக்கொள்வது என்னவென்றால் குறித்த வைத்தியசாலைகளுக்கு நேரில் சென்று அங்குள்ள நிலைமைகளை ஆராயுமாறு கேட்டுக்கொள்கின்றேன்-என்றார். (அ)

## நிபுணர்கள்...

அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளை ஆராய்வதற்கு ஆலோசனைக் குழுக்களையும் செயலணிகளையும் நியமிப்பதிலேயே கூடுதல் கவனத்தை செலுத்திவந்திருக்கின்றன. அத்தகைய முயற்சிகள் கள யதார்த்தங்களை விளங்கிக்கொள்ளவும் சவால்களைக் கையாளவும் உதவவில்லை. குடிமக்களின் குரல் அலட்சியப்படுத்தப்படுவதே இதற்கு காரணமாகும்.

மிக நீண்டகாலமாக இலங்கையின் பொருளாதாரக் கொள்கை ஒரு தொழில்நுட்பமான பிரச்னையாகவே பார்க்கப்பட்டு வந்திருக்கிறது. நிபுணர்கள் குழுவொன்றை நியமித்து அறையொன்றுக்குள் இருந்து ஆராயுமாறு கேட்டுக்கொண்டால் எல்லாம் சரியாகிவிடும் என்ற சிந்தனையே இருக்கிறது. அவர்கள் சாத்தியமான சகல பொருளாதாரக் கொள்கைகளையும் வகுப்பார்கள்.

அதுவே பிரச்னையாக இருக்கிறது. மக்கள் கூறுவதை கவனத்தில் எடுக்கின்ற கொள்கைவகுப்பு செயன்முறையே தேவை. மக்கள் உண்மையில் முக்கியமான சில விடயங்களை கூறுகின்றார்கள்.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நிபுணர்கள் சாதாரண மக்களினால் எதிர்நோக்கப்படும் பிரச்னைகளையும் கள யதார்த்தங்களையும் புரிந்துகொள்ள இயலாதவர்களாக இருப்பதால் அவர்கள் கூறுவதை மாத்திரம் கேட்டுக் கொண்டு கொள்கைத் தீர்மானங்களை எடுப்பது ஆபத்தானது.

உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் போன்ற நிறுவனங்களுடன் ஆலோசனைகலப்பது முக்கியமானது என்கிற அதேவேளை மக்களுடன் ஆலோசனை கலப்பதற்கும் அவசியமான முயற்சிகளை அதிகாரிகள் எடுக்க வேண்டும். அத்தகைய முயற்சிகள் எடுக்கப்படுவதோ அவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதோ மிக அரிது.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறுவதற்கு தேவையான வரிச் சீர்திருத்தங்களைப் பொறுத்தவரை "சரியான" முயற்சிகளில் பட்ஜெட் குறிப்பான கவனத்தை செலுத்தியிருந்தாலும், அடிப்படையான அரசியல் பிரச்னைகளுக்கு தொடரான தொழில்நுட்பமான தீர்வுகளை அது கொண்டிருக்கிறது. முன்னோக்கிச் செல்லவேண்டுமானால் அதை தவிர்க்கவேண்டியிருக்கும். கொள்கை வகுப்பாளர்கள் மக்களுக்கு பொறுப்புக்கூற வேண்டியவர்களாக இருப்பது அவசியம். அதுவே சரியான ஜனநாயகமாகும்-என்றார்.

## ரோஹண...

டாம் தலை முறை" என பதிவு செய்யப்பட்டுள்ளது.

அவரது கட்சி உள்ளிட்ட ஏழு புதிய கட்சி களை பதிவு செய்யப் பட்ட கட்சிகளாக அங்கீ கரிக்க தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளது.

இதன்படி, சிறிலங்காவில் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை 79 ஆக அதிகரித்துள்ளது.

## கொக்குவிலில்...

கொண்டனர். பின்னர் கலைந்து சென்ற பின்னர், ஒரு தரப்பின் மீது மறுதரப்பினர் வாள்வெட்டு தாக்குதல் நடத்தியுள்ளனர்.

கோண்டாவிலை சேர்ந்த எம். சிவநிதன் (வயது-34), இணுவிலை சேர்ந்த பவிதரன் (வயது-30) ஆகியோரே காயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்த இருவரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (அ)

## வட்டி விகிதத்தை...

நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த மத்திய வங்கி வைத்திருக்கும் ஒரே கருவி வட்டி விகிதங்கள் மட்டுமே. அது முழு நாட்டுக்கும் ஏற்ற வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

அரசாங்கமும் சில தியாகங்களைச் செய்யவேண்டியிருக்கும். தனியார் துறையும் நுகர்வு மற்றும் முதலீட்டை சரி செய்து அந்த விகிதங்களுக்கு ஏற்றவாறு மாற்றியமைக்கவேண்டும். அந்த நடவடிக்கைகளின் மூலம் பணவீக்கம் ஒரு நிலையான குறைந்த மட்டத்திற்கு வந்தவுடன், அவர்கள் சாதரண நடவடிக்கைகளுக்கு செல்லமுடியும்.

மக்கள் தீர்மானங்களை எடுப்பதற்கு மத்திய வங்கியின் மீது செல்வாக்கு செலுத்தக் கூடாது. நாட்டிற்கும் நாட்டின் நிதி நிலைமைக்கும் பொருத்தமான சரியான தீர்மானங்களை சுயாதீனமாக எடுக்க மத்திய வங்கிக்கு இடமளிக்கப் படவேண்டும்-என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# ஹாட்லிக் கல்லூரியின் மிதுன்ராஜ் முதலிடம்



யாழ்ப்பாணம்,டிசெ.04

அகில இலங்கை ரீதியில் இடம் பெற்ற பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட தடகளப் போட்டியில் குண்டு போடுதலில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் எஸ்.மிதுன்ராஜ் வெண்கலப் பதக்கத்தைக் கைப்பற்றியுள்ளார்.

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட தடகளப் போட்டிகள் கொழும்பு சுகதாஸ விளையாட்டு மைதானத்தில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

20 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான குண்டு போடுதல் போட்டியில் 14.49 மீற்றர் தூரம் எறிந்து எஸ்.மிதுன்ராஜ் வெண்கலப் பதக்கத்தைக் வென்றுள்ளார். (அ-02)

# காலிறுதிக்குள் நுழைந்தது நெதர்லாந்து!



உலகக்கிண்ண உதை பந்து தொடரின் நொக்கவுட் சுற்றுப் போட்டிகள் நேற்று ஆரம்பமாகின.

அதற்கமைய, நேற்று இடம்பெற்ற முதலாவது போட்டியில் நெதர்லாந்து மற்றும் ஐக்கிய அமெரிக்க அணிகள் பலப்பரீட்சை நடத்தியிருந்தன.

குறித்த போட்டியில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய நெதர்லாந்து அணி 3-1 என்ற கோல்கள் கணக்கில் ஐக்கிய அமெரிக்காவை வீழ்த்தி காலிறுதிக்குள் நுழைந்துள்ளது.

நெதர்லாந்து அணி 10, 45 மற்றும் 81ஆவது நிமிடங்களில் கோல்களைப் பெற்றுக்கொண்ட நிலையில், ஐக்கிய அமெரிக்காவினால் 76ஆவது நிமிடத்தில் மாத்திரமே கோல் ஒன்றைப் பெற முடிந்தது.

# தொடரும் அதிர்ச்சி முடிவுகள் பிரேசிலை வீழ்த்தியது கமரூன்!



அதிர்ச்சி முடிவுகள் அதிகம் இடம்பெறும் உலகக் கிண்ணமாக மாறியுள்ள நடப்பு பிபா உலகக்கிண்ணத்தில் நேற்று பிரேசில் அணியை 1-0 என கமரூன் அணி வீழ்த்தியது.

இந்த வெற்றி கமரூனை அடுத்த சுற்றிற்கு அழைத்துச் செல்லாது. குழு நிலை போட்டியுடன் கமரூன் வெளியேறுகிறது. ஆனால், கமரூன் உதைபந்து வரலாற்றில் ஒரு மகத்தான தருணமாக இது பதிவாகியது. முதல் முறையாக ஒரு ஆபிரிக்க நாடு உலகக் கோப்பையில் பிரேசிலை தோற்கடித்தது.

கட்டார் லுசைல் ஸ்ரேடியத்தில் இந்த போட்டி நடந்தது.

உலகக் கிண்ணத்தில் ஆபிரிக்க அணிகளுடன் 1994 மற்றும் 2014 இல் கமரூனை தோற்கடித்தது உட்பட, முந்தைய ஏழு சந்திப்புகளிலும் பிரேசில் வென்றுள்ளது.

ஆனால் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த ஆட்டத்தில் கமரூன் மகத்தான வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் பின் ஜி குழுவில் கமரூன் மூன்றாவது இடத்தைப் பெற்றது. எனினும், செர்பியாவை வீழ்த்திய சுவிற்சர்லாந்து குழுவில் 2ஆம் பிடித்து, அடுத்த சுற்றிற்கு முன்னேறியது.

ஆட்டத்தின் 92ஆவது நிமிடத்தில் வின்சென்ட் அபுபக்கர் வெற்றிக் கோல் அடித்தார். அவர் கோலடித்த மகிழ்ச்சியில் களத்தில் மேற்சட்டையை கழற்றியமைக்காக இரண்டாவது முறை மஞ்சள் அட்டை காண்பிக்கப்பட்டார்.

இந்த ஆட்டத்தில் பிரேசில் தரப்பில் நெய்மர் ஆடவில்லை. ஏற்கெனவே குழு நிலையில் பாதுகாப்பாக உள்ளதால், பிரேசில் தரப்பில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. மூத்த வீரர் டானி ஆல்வ்ஸ் நேற்று முன்தினம் களமிறக்கப்பட்டார். 39 ஆண்டுகள் 210 நாட்களிள் வயதுடைய அவர், பிரேசிலுக்கான உலகக் கிண்ண ஆட்டத்தில் விளையாடிய மிக வயதான வீரர் ஆனார். இது அவரது 125ஆவது ஆட்டமாகும்.

பிரேசிலின் கப்ரியல் மார்டினெல்லி நேற்று முன்தினம் களமிறக்கப்பட்டார். பிரேசிலின் தரப்பில் கமரூன் தரப்பை அதிகம் நெருக்கடிக்குள்ளாக்கியவர் அவர்தான். அவரது ஆட்டத்தை உதைபந்து விற்பன்னர்கள் ஏற்கனவே விதந்தோதியிருந்தனர். பிரேசிலின் எதிர்கால நட்சத்திரங்களில் ஒருவர் என அவர் கணிக்கப்பட்டார். நேற்றுமுன்தினம் கோலடிக்கா விட்டாலும், கமரூனை நெருக்குள்ளாக்கினார்.

பிரேசிலின் சில அருமையான தாக்குதல்களை முறியடித்த கமரூன் கோல்கீப்பர்டேவிஸ் இப்பஸி ஆட்ட நாயகனாக அறிவிக்கப்பட்டார்.

பிரேசில் தோல்வியடைந்தாலும், அடுத்த சுற்றிற்கு ஏற்கனவே தகுதி பெற்று விட்டது. டிசெம்பர் 5 ஆம் திகதி பிரேசில் அணி, தென் கொரியாவை எதிர்கொள்ளும்.

# தேசிய மட்ட கோலூன்றி பாய்தலில் 3 பதக்கங்களும் யாழ்ப்பாணத்துக்கு

யாழ்ப்பாணம்,டிசெ.04

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான ஆண்களுக்கான தேசிய மட்ட கோலூன்றிப் பாய்தல் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் யாழ்.மாவட்ட பாடசாலைகள் பெற்று சாதனையைப் பதிவு செய்தனர்.

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட தடகள போட்டிகள் நேற்றுமுன்தினம் முதல் கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

20 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைப் பிரதி நிதித்துவம் செய்த சொபிசன் 4.10 மீற்றர் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும், தெல்லிப்பழை மகாஜன கல்லூரியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கஸ்மிதன் 3.90 மீற்றர் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும்,

அளவெட்டி அருணோதயக் கல்லூரியைப் பிரதி நிதித்துவம் செய்த இ.அபிநயன் 3.80 மீற்றர் பாய்ந்து வெண்கல பதக்கத்தையும் கைப்பற்றினர். (அ-02)










இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.12.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.